# யுத்தத்தைச் சந்தைப்படுத்தல், சமாதானத்தைச் சந்தைப்படுத்தல்:

## உலகளாவிய மூலதனத்துக்கும், தேசிய பாதுகாப்புக்குமிடையில் இணக்கப் பணி

நிஷாபர் டி மெல்

ICES SRI LANKA PROGRAM

Srikanthaluxumy. A
11/21, Inuvil West

# யுத்தத்தைச் சந்தைப்படுத்தல், சமாதானத்தைச் சந்தைப்படுத்தல்: உலகளாவிய மூலதனத்துக்கும், தேசிய பாதுகாப்புக்குமிடையில் இணக்கப் பணி

நிலூபர் டி மெல்

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

தமிழாக்கம்
லோரன்ஸ் துரைராஜா

இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச மையம்
கொழும்பு

இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்
2 கின்சி ரெறஸ், கொழும்பு - 8, இலங்கை

பதிப்புரிமை © ICES 2007

Printed by
Unie Arts (Pvt) Ltd
No. 48 B, Bloemendhal Road
Colombo 13

இக் கட்டுரையானது 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் கொழும்பு, இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தினால் "மாறுநிலை/ உருவாக்கம்: இலங்கைத் தமிழரின் தேசியம் பற்றிய ஒரு கருத்தரங்கு" என்ற தலைப்பில் நடாத்தப்பெற்ற மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. இம் மகாநாடு அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான நோர்வேயின் முகவரகத்தின் (NORAD- Norwegian Agency for Development Cooperation) நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வரும் இலங்கை கற்கைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு செயற்றிட்டமாகும்.

சிங்கள தேசிய வாதம் பற்றிய சமூகவியல், அரசியல் ஆய்வுகள் அளவிலும், பண்பிலும் குறிப்பிடத்தக்களவு மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கும் நிலையில் தமிழ் தேசியவாதம் சில காலங்களாக ஆய்வுக்குட்படாத ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கிய ஆய்வுகள் கூடத் தமிழ் மொழியில் மாத்திரமே காணப்படுகின்றன. எனவே இலங்கைத் தமிழரின் தேசியவாதம் பற்றிய சிக்கல்களையும் பண்புகளையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு முக்கிய தேவை இருந்து வந்துள்ளது.

# யுத்தத்தைச் சந்தைப்படுத்தல், சமாதானத்தைச் சந்தைப்படுத்தல்: உலகளாவிய மூலதனத்துக்கும், தேசிய பாதுகாப்புக்குமிடையில் இணக்கப் பணி

நிலூபர் டி மெல்

பரஸ்பரம் பதிலீடு செய்யக்கூடிய சிரிப்பும், அழுகையும்
குரல்: சென்ற வருடம் சிரிப்பதா, அழுவதா என்று நீங்கள் அறிந்திருக்காவிடின், SLIM விருதுகள் வைபவத்துக்கு வாருங்கள். நாம் உங்களுக்கு மோசமான காலங்களின் நல்ல பக்கத்தைக் காட்டுகின்றோம்.

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம், 2001க்கான விளம்பரம்

இலங்கையில் 2000 – 2001 வருடங்களில் சிரித்து மகிழ்வதற்கு வெகு சொற்பமான விடயங்களே இருந்தன. ஆயினும், அழுவதற்குப் பெருமளவிலான விடயங்கள் இருந்தன. இலங்கை அரசுக்கும், ஒரு தனியான தமிழ் அரசை அமைப்பதற்குப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (டுவுவுநு) இடையிலான ஆயுத மோதல் அதன் 17ஆவது மற்றும் 18ஆவது வருடங்களை எட்டியிருந்தது. இலங்கையின் ஆயுதப் படைகள் வட மாகாணத்தில் இடம்பெற்ற டுவுவுநு அமைப்பின் 'ஓயாத அலைகள் 4' தாக்குதல்களில் மாபெரும் இராணுவத் தோல்விகளைச் சந்திக்கநேர்ந்தது. வடக்கில் இடம்பெற்ற இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களான *ரிவிகிரண, கினிகீர* மற்றும் *அக்னி கீல* போன்றவற்றின் போது தமிழ் சிவிலியன்கள் இடம்பெயர்வு மற்றும் அவர்களின் வீடுகள், ஜீவனோபாயங்கள் அழிவு என்பவை தொடர்ந்தன. 2000 அக்டோபரில் பண்டாரவளையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட பிந்துனுவெவ தடுப்புமுகாமில் 27 தமிழ் தடுப்புகாவல் கைதிகள் கொலை செய்யப்பட்டனர். 14 பேருக்குக் காயங்களும் ஏற்பட்டன. 'நாட்டின் தெற்கில் வன்செயல்கள் காரணமாக பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் என்பன பாதிப்புற்றன. பாராளுமன்றத்தைத் திகதி குறிப்பிடாது நீண்டகாலம் ஒத்திவைத்தல், வலு மற்றும் சக்தித் துறையிலான நெருக்கடி மற்றும் 2001 ஜுலை மாதத்தில் டுவுவுநு அமைப்பின் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத் தாக்குதல் என்பவை காரணமாக அரசாங்கத்துக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டது. விமானநிலையத் தாக்குதல் காரணமாக இலங்கைப் பொருளாதாரத்துக்குச் சுமார் 30 மில்லியன் US $ நட்டம் ஏற்பட்டதோடு

(கெலேகம 2003, 143), பொருளாதார வீழ்ச்சி காரணமாகக் கணிசமான எண்ணிக்கையானோர் தமது வேலைகளை இழந்தனர். 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் முதல் தடவையாக மொத்த உள்நாட்டு உற்பத்தி -1.4 எதிர்கணிய வளர்ச்சிவீதத்தைக் காட்டியது (கெலேகம 2003, 144). இவையனைத்தும் 2000 மற்றும் 2001ஆம் ஆண்டுகள் நெருக்கடி நிறைந்தவை என்பதையும் எதிர்காலத்துக்கான சாத்தியங்கள் மிகவும் நம்பிக்கையற்றவை என்பதையும் எடுத்துக்காட்டின.

மோசமான காலங்களின் சிறந்த பக்கத்தைக் காட்டுவதற்குத் தீர்மானிக்கும் விடயத்தில் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம் நுகர்வுப்பொருளைச் சுற்றிய மொழிச் சமிக்ஞை வாய்ப்பைத் தந்திரமாகக் கையாளுவதும், உணர்வுநிலையற்ற மனத்தை ஒரு பொதுமக்கள் குறித்த அவகாச வாய்ப்பாகத் தந்திரமாகக் கையாளுவதுமான (மக்கிளின்ரொக் 1995, 213) விளம்பரப்படுத்தல் குறித்த ஒரு தீர்மானகரமான நடைமுறையைப் பின்பற்றியது. இதனுடைய மெய்மைநிலை சம்பந்தமான சந்தேகங்கள் இக்கைத்தொழிலின் உள்ளேயே இருப்பதும் உண்மையாகும். இந்த விடயம் "நன்கு எடுத்துரைக்கப்பட்ட உண்மை"[2] என்னும் கிரான்ட் மக்கான்-எரிக்சன் பல்தேசிய விளம்பர நிறுவனத்தின் சுயவிளக்க உண்மையில் வலியுறுத்தப்பட்டும், வெளிப்படுத்தப்பட்டும் உள்ளது. ஆயினும் உண்மையைக் கூறுவதென்பது ஒரு வியாக்கியான நடைமுறையாகும். அது அர்த்தம் என்பது வேறு விடயங்களில் தங்கிநிற்பதும், மாற்றமுறுவதுமான ஒரு மொழிச் சமிக்ஞை முறையினுள் விடயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். 'உண்மை' என்பது என்ன? இலாபம் என்பது உற்பத்தியிலன்றி, விளம்பரம் மூலம் நுகர்வோர் விருப்பைக் கட்டுப்படுத்துவதில் கூடுதலாகத் தங்கிநிற்கும் முதலாளித்துவப் படிநிலையில் நாம் உள்ளோமென்று வாதிடும் நேரத்தில் (ஜோசப் 2002, 41இல் போட்ரிலார்ட்) நுகர்வுப்பொருளைச் சுற்றியுள்ள மொழிச்சமிக்ஞை வாய்ப்பு எவ்வளவு முக்கியமானது? யுத்தகாலத்தில் பொதுமக்கள் அவகாச வாய்ப்பு என்பதன் முக்கியத்துவம் என்ன? விளம்பரங்கள் ஒரு கலாசாரத்தில் அடையாளங்களாக விளங்கும் சொற்கள் மற்றும் படிமங்களை ஒரு குறிப்பிட்ட உற்பத்திப்பொருளை நுகர்வதற்கான எமது விருப்பை உருவாக்கும் வகையில் சாதுரியமாகப் பயன்படுத்துகின்றன. இது எவ்வாறு செயற்படுகின்றதென்பதும், இச்செயல்முறையில் பிரித்தெடுக்கப்படுவது எதுவென்பதும், இது எவ்வாறு விநியோகம் மற்றும் பரிமாற்றம் செய்யப்படுகின்றதென்பதும், ஊடகங்களிலும், கலாசாரத்திலும் இவ்வுற்பத்திப்பொருள் எவ்வாறு வர்த்தகவியல் மாற்றத்துக்கு (commodification) உள்ளாகின்றது என்பதைப் பொறுத்ததாகும். ஊடகமும், கலாசாரமும் தம்மளவில் இன்று உலகமயமாக்கல் சூழ்நிலைகளில் வர்த்தகவியல் மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன. 'இங்குள்ள வாதவிடயம் மீளுரையாடல்

ஊடகங்கள், கலை மற்றும் தகவல் குறித்த வர்த்தகவியல் மாற்றம் அல்லவென்றும், அது தன்னளவில் நுகர்வுப்பொருள் சம்பந்தமான வாதமுறை' என்றும் மிராண்டா ஜோசப் வாதிடுகின்றார் (ஜோசப் 2002, 41). இந்த வாதமுறையை நோக்குவது அதன் பயன்பாடு அல்லது பரிவர்த்தனைப் பெறுமதி காரணமாக நுகர்வுப்பொருளை வைத்திருப்போர் கலாசார மூலதனம், அந்தஸ்து மற்றும் ஜனசமூக உணர்வு என்பவற்றை வழங்குவதற்கான அதன் சாத்தியவளத்தை விளங்கிக் கொள்வதாகும் (ஜோசப் 2002, 42). இரண்டையுமே கவனத்திற் கொள்வது முக்கியமானதென்று நான் எண்ணுகின்றேன்: உதாரணமாக, இன்றைய உலக மயமாக்கல் சூழமைவில் ஊடகங்களையும், விளம்பரக் கைத்தொழிலையும் ஆக்குபவை எவை? அது ஒரு யுத்தச் சூழமைவில் செயற்பாட்டாளர்களையும், நலன்களையும், இராணுவமயச் செயல்முறை வழிமுறைகளையும், சுட்டிக்காட்டும் வகையில் இராணுவவாதத்தின் வர்த்தகவியல் மாற்றத்தை எவ்வாறு வடிவமைக்கின்றது? அதேவேளையில் இராணுவவாதத்தின் வர்த்தகவியல் மாற்றத்தில் ஒரேயடியாகக் கவனம் செலுத்தாது அதன் வாதமுறையில் கவனம் செலுத்துவது ஆர்வமூட்டும் ஒரு விடயமாகும். இந்த வாதமுறை அதன் வர்த்தகவியல் மாற்றத்திலிருந்து பூரணமாக விடுபடமுடியாதுள்ள அதேவேளையில், அது அதன் குடையின்கீழ் வரக்கூடிய சமத்துவமற்ற குழுக்களைப் பார்ப்பதற்கும் மற்றும் பார்வைக்கு ஆதிக்கம் வகுக்கும் நுகர்பொருளின் வர்ணனைக்கு நுகர்வாளர்களின் எதிர்ப்பை எவ்வாறு வடிவமைக்கக் கூடியது என்பதையும் காட்டுவதே இதற்கான காரணமாகும். உண்மையில், இந்த அத்தியாயத்தின் நோக்கம் இலங்கையில் இன்று உலகளாவிய மூலதனத்துக்கும், தேசியப் பாதுகாப்புக்குமிடையிலான நெருக்கமான உறவைப் பிரதிபலிக்கும்வகையில் இராணுவவாதம் எவ்வாறு சந்தைப்படுத்தப்படுகின்ற தென்பதைக் காட்டுவதாகும். இது யுத்தமும், சமாதானமும் எதிர்நிலையான உதாரணத் தத்துவங்களாகவன்றி ஒரே தொடர்நிகழ்வின் பகுதியாகக் கூடியவகையில் இராணுவ வாதத்தின் வாதமுறையை மட்டுமன்றிச் சமாதானத்தின் வாதமுறையையும் வடிவமைக்கும் ஓர் இறுக்கமான வலையாகும். இவ்வத்தியாயம் எவ்வாறு இராணுவவாதமென்னும் நுகர்வுப் பொருள் குறித்த வாதமுறை பொருளின் ஆதிக்க வர்ணனைக்கு எதிர்ப்பு மற்றும் அதன் கருத்திட்டத்தைத் தோற்கடிக்கும் செயல்முறை என்பவற்றை வடிவமைக்கும் சொத்துரிமை மற்றும் ஜனசமூக வடிவங்களுடனும் பேசுகின்றதென்பதைக் காட்ட முயற்சிசெய்யும். இத்தகைய கருமப்பாட்டில் இவ்வத்தியாயம் செயல்நிறைவேற்ற உற்பத்தி என்ற வகையில் நுகர்வியல் என்பதைவிட, நுகர்வைக் கூடுதலாகக் கையாளும் ஜோசப்பின் வலியுறுத்தலைப் பின்பற்றுகின்றது (ஜோசப் 2002, 34).

ஆன் மக்கிளின்ரொக் உலகளாவிய விளம்பரப்படுத்தலின் ஆரம்பகால வடிவங்கள் எவ்வாறு ஏகாதிபத்திய ஐரோப்பாவின் நலன்களுக்குச் சேவைபுரிந்தன என்பதைக் காட்டியுள்ளார் (மக்கிளின்ரொக், 1995). விளம்பர முகவர் குடியேற்றவாத

அதிகார வாதத்துடன் சேர்ந்து வெளிநாட்டு வர்த்தக விரிவாக்கத்தில் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்தார். விளம்பரங்கள் சாம்ராஜ்யம் முழுவதும் விநியோகிக்கப்பட்ட பிஸ்கட் மற்றும் சவர்க்காரப் பெட்டிகளில் பதிக்கப்பட்டிருந்த சாம்ராஜ்யம், காலனித்துவத் தலைநகர் மற்றும் காலனித்துவவாத வெற்றிகள் சம்பந்தமான காட்சிகளை ஜனரஞ்சகப்படுத்தின (மக்கிளின்ரொக் 1995, 209). இது பொதுத்துறையைத் தனியார் இல்லத்துறையுள் கொண்டுவந்து, சாம்ராஜ்யத்தின் நலன்களுக்குச் சேவைசெய்த ஒரு சொத்துரிமை உணர்வை உருவாக்கியது. போல் கில்றோய் ஒலிகள், ஊடக நிபுணர்களால் அரசியல் கட்சிகள் குறியிடப்படல் மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற பண்புகளைக் கொண்டதும், நாம் இன்று அறிந்து வைத்திருப்பதுமான அரசியல் கலாசாரத்துக்கும், பாசிஸ, எதேச்சாதிகார ஆட்சிக் குழுக்களில் இடம்பெற்றவாறான அரசியல் அழகியல் மயப்படுத்தல் மற்றும் நாடகமயப்படுத்தல் என்பவற்றுக்குமிடையிலான தொடர்ச்சியைக் காணும்வகையில் வாதிடுகின்றார் (கில்றோய் 2000, 151-2). உதாரணமாக நாஸிகள் திரைப்படங்களின் மொழிமூலங்கள், இராணுவ அணிவகுப்புகள், அடையாளக்குறிகள் மற்றும் கொடிகள் என்பவை போன்ற ஊடகங்களைப் பிரசாரம் மற்றும் குழு உணர்வின் சக்திமிக்க கருவிகளாக அறிந்து வைத்திருந்தனர். பல மில்லியன் கணக்கான ஜேர்மனியர்களுக்கு நாஸி பொதுப்படிமம் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டமைக்கும், விளம்பரவியலின் இன்றைய அபிவிருத்தி நிலைக்குமிடையே நெருங்கிய தொடர்புள்ளது. ஆகவே விளம்பரவியல் சாம்ராஜ்யத்தின் இறுதிக் குறியிலக்குகளில் ஒன்றான மூலதன விரிவாக்கத்துக்கு அவசியமான கருவியென்ற வகையிலும், வன்செயல் வணக்கம் மற்றும் உடலும், ஆண்மையும் போன்றவையும், ஜனரஞ்சக கலாசாரத்தின் ஒரு பகுதியாகப் பிரதான நீரோட்டத்தில் பிரவேசிக்க வழிசெய்யும் ஓர் ஊடகமாகவும், இராணுவ வாதத்தினதும், கைப்பற்றல்வாதத்தினதும் நலன்களுக்கு நீண்டகாலமாகச் சேவையாற்றி வந்துள்ளது.

வேறெங்குமில்லாதவகையில் ஆண்மை, இளமை, இராணுவவாதம் மற்றும் தேசியவாதம் என்பவற்றின் குறியீடுகளால் நிரம்பிய இராணுவ விளம்பரப்படுத்தல் அரங்கிலேயே இது மேலும் சிறந்தமுறையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. விளம்பரங்கள் இற்றைப்படுத்தல் மற்றும் தொடர்ச்சியான புதுப்பித்தலைக் கொண்டிருக்கவேண்டும். அவற்றின் நம்புதகவு அவர்களின் வாக்குறுதிகள் உண்மையில் நிறைவேற்றப்படுவதன் பிரகாரம் தீர்மானிக்கப் படுவதில்லை. மாறாக, அவர்கள் நிர்மாணித்து வலுப்படுத்தும் மானசீகக் காட்சிகளின் இயைபின் பிரகாரமே தீர்மானிக்கப்படுகின்றன (பேர்கர் 1972, 146). ஆகவே, விளம்பரங்கள் என்பவை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு சமூகத்தின் பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார அந்தஸ்தின் அபிலாஷைகள் குறித்த உன்னதமான சுட்டிகளாகும். சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில் இராணுவ விளம்பர வடிவங்களிலான

மாற்றங்கள் இலங்கை இராணுவத்தினுள்ளும், போரின் வழிமுறைகளிலும் ஏற்பட்டுள்ள கணிசமான மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. இது 1994இல் உலகின் 58வது பெரிய விளம்பரச் சந்தையென்று மதிக்கப்பட்ட, நாட்டின் தனியார் ஊடக மற்றும் விளம்பரக் கைத்தொழிலின் வளர்ச்சியையும் பிரதிபலிக்கின்றது (கெம்பர் 2001). இதன் வளர்ச்சிவீதம் ஆண்டொன்றுக்கு 15 முதல் 20 வீதமாகும். இந்த மாற்றங்கள் உலகில் யுத்தம், இராணுவக் கைத்தொழில் மற்றும் ஊடகங்களில் ஏற்பட்ட உலகளாவிய நிலை மாற்றங்களோடு நெருக்கமான இயைபைக் கொண்டவையாகும். வெளிநாடுகளிலிருந்து இராணுவ சேவைகளைப் பெற்றுக்கொள்ளுவதென்பது உள்ளூர்மட்டத்தில் யுத்தப் பிரபுக்களினதும், கூலிப்படைகளினதும் பிரசன்னத்துக்கு இட்டுச்சென்றுள்ளது மட்டுமன்றித் தனியார் இராணுவ யாக்கங்களைக் கூலிக்கமர்த்துவதற்கும் வழிகோலியுள்ளது. இது தனியார்மயப்படுத்தப்பட்ட இராணுவக் கைத்தொழிலின் துரித வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது (சிங்கர் 2003). நவ-தாராளவாதக் கொள்கையின்கீழ் முன்னெடுக்கப்படும் யாக்க ஆட்சிச் செயல்முறையின் மாதிரி, அரச இராணுவங்களின் மீதும் யாக்க வழிகளில் செயற்படுவதற்கான அழுத்தத்தை வழங்கியுள்ளது. இந்தச் சூழ்நிலைகளின்கீழ் இராணுவத்துக்கும், தனியார்துறைக்குமான இணைப்பு உறவுகள் வலுவடைகின்றன. இதற்கான ஒரு முக்கிய காரணம் கட்டமைப்புச் சீராக்கம் என்பது நிதியாதரவு குறைந்ததும், உளவியல் தெம்பு குறைந்ததுமான அரச பாதுகாப்பு இயந்திரம் ஆதரவுக்காகப் பெருமளவுக்கு யாக்கத்துறையில் தங்கி நிற்பதைக் குறிக்கின்றதென்பதாகும். இவ்வத்தியாயத்தில் காண்பிக்கப்படும் இலங்கை யாக்கத்துறைக்கும், இராணுவத்துக்கும் இடையிலான உறவு இதற்கு ஓர் உதாரணமாகும்.

ஆயினும் முதலில் இரு காப்பு வாசகங்களைக் கவனித்தல்வேண்டும். இவ்வத்தியாயத்தில் குறித்துரைப்பான கவனம் இலங்கை இராணுவத்தை விளம்பரப்படுத்துவதன்மீதே செறிந்துள்ளது. பொலிஸ், கடற்படை மற்றும் விமானப்படை என்பவை இலங்கை அரசின் பாதுகாப்பு நலன்களைக் 'காப்பாற்றுவதில்' பிரதான பாத்திரங்களை வகித்துள்ளதோடு, தொடர்ந்தும் அவ்வாறு வகித்து வருகின்றன என்பதும் உண்மையாகும். இப்படைகள் ஒவ்வொன்றும் தனித்துவமான பாத்திரங்களை வகிக்கின்றமையால், இராணுவத்தின் வரலாறு என்று வாசிக்கப்படும் இலங்கையின் பாதுகாப்புப் படைகளை ஓரினப்படுத்துவதற் கெதிராக ஒருவர் விழிப்போடிருக்கவேண்டியது அவசியமாகும். எவ்வாறாயினும் இலங்கை இராணுவம் என்பது யுத்தகாலத்தில் பொதுமக்கள் மனங்களில் பெரிதும் இடம்பிடிக்கும் தனியதார்த்த அமைப்பாகும். அது மிகப்பெரிய ஆட்சேர்ப்பு இயலுமையைக் கொண்டிருப்பதால் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சமர்களில் ஈடுபடும் பிரதான சக்தியாகக் கருதப்படுகின்றது. அதனால்தான்

இங்கு அது விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றது. இரண்டாவதாக, விளம்பரமென்பது அடையாளங்களாக ஒரு கலாசாரத்தில் வழங்கிவரும் சொற்கள் மற்றும் படிமங்களைத் தந்திரமாகக் கையாளுவதோடு ஏற்கெனவேயுள்ள கலாசாரச் சின்னங்கள், புகைப்பட, ஓவிய, திரைப்பட வரலாற்று மற்றும் புனைகதைப் பாரம்பரியங்களிலிருந்தும், தேசியவாதம், தந்தைவழிவாதம் மற்றும் மூலதனவாதம் போன்ற தத்துவார்த்தங்களிலிருந்தும் பயன்பெறுகின்றது. இது அதன் வாதமுறைக்கு ஒரு சிக்கலான, சர்வ விடய வாசகத்தை வழங்குகின்றது. இராணுவ விளம்பரங்கள் ஏனைய சமகால முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாகிய பாடல்கள், உரைகள் மதத்தலைவர்களின் கருத்துகள், கல்விப் பாடவிதானங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், ஆடைகள் போன்றவற்றை இட்டு நிரப்புவதோடு, அவற்றிலிருந்து பலத்தையும் பெற்றுக் கொள்ளுகின்றன. இவை இலங்கையர்களிடமிருந்து – அவர்கள் எந்த இனத்துவக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் - ஒரு தேசாபிமானத்தையும், இனவாத மற்றும் தேசியவாதக் கடமை உணர்வையும் கோரிநிற்கின்றன. இவை போர்ச் சூழமைவில் இலங்கை அரசின் அல்லது எல்ரீரீஈ அமைப்பின் இராணுவக் குறியிலக்குகளுக்கான துடிப்பான ஆதரவோடு இணங்கிச் செல்பவையாகவுள்ளன. யுத்தத்துக்குப் புதல்வர்களைத் தியாகஞ்செய்யும் கடமையுணர்வு மிக்க தாய்மார்களினதும், தேசத்தையும், அதன் ஆட்புல எல்லைகளையும் பாதுகாக்கும் துணிவுமிக்க இளைஞர்களினதும், மதத்தையும், தேசத்தையும் பாதுகாக்கும் பக்தியுணர்வு மிக்க பௌத்தர்களினதும் சொல்நயங்கள் போராளிகளல்லாத பெண்கள்கூட ஒரு பாத்திரத்தை வகிக்கும் சமூக இராணுவ மயமாக்கலினுள் இடம்பெறும் □உரை நடவடிக்கைகள்□ ஆகும். சிந்தியா என்லோ பெண்களின் தாய்நாடு, தேசிய இனம் மற்றும் வயது எதுவாகவிருப்பினும் (என்லோ 2004, 149) அவர்களை இராணுவத் தளங்களில் ஆதரவுப் பதவியினராகப் பணியாற்றுவோர் மற்றும் யுத்தகளத்திலிருந்து வீடு திரும்பும் தமது ஆண் உறவினர்களை வரவேற்பதற்கு மஞ்சள் ரிப்பன்களைக் கட்டுவோர்[3] என்னும் முகாம் ஆதரவாளர்களாகவும், பிள்ளைகளை இராணுவத்தில் சேர்ப்பதற்கு ஆதரவு வழங்குவோரை இராணுவமயப்படுத்தப்பட்ட பெண்களாகவும் வகையினப்படுத்துகின்றார் (என்லோ 2000, அத். 7). அனேகமான சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு ஒரு விருப்புத் தெரிவு இருப்பதில்லை. உதாரணமாக, இலங்கையின் கிராமியப் பொருளாதாரங்களின் பாரிய அழிவு காரணமாக கிராமத்துப் பெண்கள் யுத்த காலத்தில் இராணுவ நோக்கங்களுக்கான ஒரு ஜனரஞ்சகக் கலாசாரத்தில் ஒரு கட்டமைப்பு அலகாகத் தீவிரமாக நிர்மாணிக்கப்பட்ட இராணுவமயப்படுத்தப்பட்ட கருக் குடும்பத்தின் ஒரு பகுதியாக அவர்களை மாற்றும் ஒரு செயல்முறையில் தமது வாழ்வையும், ஜீவனோபாயங்களையும் இராணுவத்தோடு ஒன்றிணைத்துக்கொள்ளுகின்றனர். தந்தையர் தமது போர்வீரர்களான புதல்வர்களின்

தைரியத்தை மெச்சுதல், சிங்களத் தேசத்தின் தாய்மார் அவர்களின் தியாக உணர்வை வளர்க்கக்கூடியவகையில் அவர்களுக்குப் பாலூட்டி வளர்த்தல், தேசத்தின் சகோதரர்கள் யுத்த களத்தில் அவர்களுக்குத் தனிமையுணர்வு தோன்றாவண்ணம் அவர்களுக்குத் தோழமையுணர்வை வழங்குதல் என்பவற்றைப் பிரதிபலிக்கும் சுனில் எதிரிசிங்கவின் *ரண மலக்* (ஒரு பொன்மலர்) என்னும் பாடல் இதற்கான ஒரு பொருத்தமான உதாரணமாக விளங்குகின்றது. இன்னுமொரு படிமம் தந்தை, தாய், மூத்தமகன் மற்றும் இளையமகள் ஆகியோர் இராணுவத் தலைக் கவசத்தின் பாதுகாப்பின்கீழ் இருப்பதுபோன்ற *'ரணவிரு சேவா'* அதிகார சபையின் இலச்சினையாகும். இது இராணுவ சேவையிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சேவைகளை வழங்கும் ஓர் அமைப்பாகும். இந்த இராணுவமயப்படுத்தப்பட்ட கருக் குடும்பத்தைச் சுட்டுவோர் ஏனையோரைப் பூரணப்படுத்துவோராக விளங்குகின்றனர். செய்திப் பத்திரிகைகளில் வெளியாகும் சிறு பையன்களின் பிறந்தநாள் புகைப்படங்களில் அவர்கள் அதிரடி இராணுவ வீரர்களின் உடைகளில் காட்சியளிக்கின்றனர்.[4] பாலர் பாடசாலை வினோத உடை நடைபவனிகளில் பாலர்கள் பொலிஸ் மற்றும் இராணுவ உடைகளில் காட்சியளிக்கின்றனர்[5]. பாடசாலைச் சிறுவர் சிறுமிகள் பயன்படுத்தும் குமிழ்முனைப் பேனா மற்றும் அப்பியாசப் புத்தகங்களிலும் இத்தகைய வடிவமைப்புக்கள் பயன்படுத்தப்படுவதைப் பரவலாக அவதானிக்கலாம். இந்தச் சின்னங்கள் வழிபாடு எமது அன்றாட வாழ்வில் இராணுவவாதம் எந்த அளவுக்கு ஊறிப் பரவியுள்ளது என்பதையும், எவ்வித பிரச்சினையும் இல்லாத நியமமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும், எனவே பழக்கப்பட்ட விடயமாகியுள்ளதென்பதையும் காட்டுகின்றது. எனவே இராணுவ விளம்பரங்கள் ஏற்கெனவே வழங்கிவரும் இராணுவவாத தத்துவார்த்தத்திலிருந்து பயன்பெறுவதோடு, அவற்றைப் பொதுமக்களின் உணர்வில் (நனவிலி மனதில்) ஆழமாகப் பதிப்பதில் துடிப்பாகப் பணியாற்றுகின்றன.

## இராணுவ முன்நிகழ்வுகள்

நவீன இலங்கை இராணுவம் குறித்த பல கருத்துரையாளர்கள் அதை 1971 மக்கள் விடுதலை முன்னணி (JVP) அரசு விரோத கிளர்ச்சிவரை பெருமளவில் ஒரு வைபவ ரீதியான கொண்டாட்டங்களில் பங்கேற்கும் ஒன்றாகவே விபரித்துள்ளனர்.[6] இது தன்னளவில் இலங்கை இராணுவத்தின் ஒரு கதை விபரிப்பாகும். 2003 ஜூனின் உத்தேச உயர் பாதுகாப்புக் கட்டுப்பாட்டுச் சட்டம் குறித்த தமது அவதானிப்புரைகளில் இராணுவ, விமானப்படை மற்றும் கடற்படைக் கட்டளைத் தளபதிகள் பாதுகாப்புப் படைகளை 'சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து வைபவரீதியான நிறுவனங்களாவே' விபரித்துள்ளனர்.[7] இத்தகைய ஒரு விபரிப்பு

பிரித்தானிய குடியேற்றவாதக் காலப்பகுதியிலும், சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கையிலும் பலாத்காரம் குறித்த ஒரு பலவந்தக் கட்டமைப்பாக இராணுவ முன்நிகழ்வுகளைக் கூறாமல் விடுவதோடு, அது அடக்குமுறையை அனுபவித்தோரைவிட, அதிகார மற்றும் சலுகை ஊற்றுக்களிலிருந்தே வருகின்றது. பிரித்தானிய குடியேற்றவாத ஆட்சியின்போது பரிமாணத்தைப்பொறுத்தவரையில் இந்திய மற்றும் இலங்கை இராணுவங்கள் மற்றும் அவை பரவலாகப் பயன்படுத்தப்பட்டமை என்பவற்றில் பாரிய வேறுபாடுகள் உள்ளனவென்பதில் எதுவித சந்தேகமுமில்லை. குடியேற்றவாதகால இலங்கையில் சேவையாற்றவென நிறுத்திவைக்கப்பட்டிருந்த பிரித்தானிய இராணுவத்தின் படைவீரர்களைக் கொண்ட இலங்கைப் பாதுகாப்புப் படையைத் தவிர வேறு கிரமமான பெரிய ஆயுதப்படை எதுவும் இருக்கவில்லை. இலங்கைப் பாதுகாப்புப் படையுடன் பயிற்சி பெற்றதும், அவசியமான தருணங்களில் கடமைக்கு அழைக்கப்பட்டதுமான உள்நாட்டுத் தொண்டர் படையும் சேர்ந்திருந்தது. இக்குடியேற்றவாத இராணுவம் விடுதிகளிலிருந்து பலாத்கார வன்செயல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகப் பிரித்தானிய அரசாங்கத்தால் வெளிக்கொணரப்பட்ட பல சந்தர்ப்பங்கள் இருந்தன. அது 1818, 1848 மற்றும் 1915ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பிரித்தானிய விரோதக் கிளர்ச்சிகள் மற்றும் 'கலவரங்களை' அடக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. 1915இல் சிங்கள-முஸ்லிம் மோதல்களையடுத்தும், குடியேற்ற விரோதப் போராட்டங்களையடுத்தும் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. பிரித்தானிய விரோத தேசிய இயக்கத்தின் பிரபலமான சிங்களத் தலைவர்களுக்கெதிராக இராணுவ நீதிமன்றங்களில் நடவடிக்கை இடம்பெற்று, அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இராணுவச் சட்டம் அகற்றப்பட்ட பின்னரே இத்தண்டனைகள் ஆயுட்காலத் தண்டனைகளாக மாற்றப்பட்டன. இது இலண்டனிலிருந்த குடியேற்றவாத அலுவலகம், குடியேற்றவாத அரசாங்கம் கலகங்களைக் கையாண்ட முறை குறித்து மீள்பார்வை செய்தபோதே இடம்பெற்றது (தம்பு 1997, 68-9; ஜயவர்தன 1990, 25-6). பின்னர் இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் இராணுவத்தின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.[8] இக்காலகட்டத்தின்போதான தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் மிகவும் பாரதூரமாக நோக்கப்பட்டன. 1941 ஜுலை மாத துறைமுக வேலைநிறுத்தம் காரணமாகத் துறைமுக வேலைகள் சீர்குலைந்தமை பிரித்தானிய யுத்த முயற்சியைப் பாரதூரமாகக் குடைகவிழ்ப்பதாக கடற்படைத் தலைமைக் கட்டளைத் தளபதி எச்சரிக்கை விடுத்தார் (ஜயவர்தன 1964, 372). 1942 இல் கொக்கோஸ் தீவுகளின் அதிகார விரோதக் கிளர்ச்சியினால் இலங்கைப் படைப் பீரங்கி அணியின் மூன்று போர் வீரர்கள் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, தூக்கிலிடப்பட்டவேளையில் (இவர்கள் மாத்திரமே பிரித்தானியர்களால் யுத்த

காலத்தில் தூக்கிலிடப்பட்ட பொதுநலவாயப் போர் வீரர்களாவர்) இது பிரித்தானிய இராணுவத்தில் இனவாதம் குறித்த கதையை வெளிக்கொணர்ந்ததோடு, பிரித்தானியாவின் யுத்தமுயற்சிகளில் ஒத்துழைக்க மறுத்தவர்கள்மீது மிகவும் கொடூரமான தண்டனைகள் விதிக்கப்பட்டதையும் அம்பலப்படுத்தியது (குரூஸ், என். 2001). யுத்த காலத்தில் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளைவிட இராணுவமே முன்னுரிமை பெற்றது. 1944இல் இலங்கையிலிருந்த கூட்டு இராணுவ அதிகாரிகளால் முன்மதிப்பீடு செய்யப்பட்டு 400 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதோடு, இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு மிகவும் உயர்வான கொடுப்பனவுகளோடு அதிகரிக்கப்பட்டது. இதன் விளைவாக உலகரீதியான பாரிய பொருளாதார நெருக்கடியின் பின்னராக முதல் தடவையாகக் குடியேற்றவாத இலங்கையில் வேலையற்றோர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது. அத்தோடு இது உயர் இராணுவக் கொடுப்பனவு வீதங்களுடன் போட்டியிட முடியாத ஏனைய துறைகளிலும் தீவிர ஊழியர் பற்றாக்குறைகளை ஏற்படுத்தியது (ஜயவர்தன 1964, 378-9).

1949 ஏப்ரில் 11ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட 1949ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்துடன் சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை இராணுவம் நடைமுறைக்கு வந்தது (இலங்கை இராணுவம் 1999, 26). இதனால் ஒரு கிரமமான ஆயுதப்படையொன்று தொடர்ச்சியான சேவையில் ஈடுபடும்நிலை ஏற்பட்டது. 1952இல் இலங்கையின் வட பகுதியில் இந்தியாவிலிருந்து "சட்டவிரோத" குடியேற்றத்தைத் தடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டதே அது வகித்த முதல் செயற்பாட்டுப் பாத்திரமாகும் (இலங்கை இராணுவம் 1999, 62). குடியேற்றவாத அரசுக்குப் பிந்திய இலங்கையின் வலுப்படுத்தல் சிங்கள அரசியல் சமூகத்தினதும், மொழியினதும் ஆதிக்கத்தை நிலைநாட்டியதும் இராணுவம் சிங்கள.'.அரசு எதிர்ப்பை அடக்கும் கருவியாகச் செயற்பட்டது. அது 1953இல் இடம்பெற்ற ஹர்த்தாலைக் (வேலைநிறுத்தம்) கட்டுப்படுத்துமாறும் அழைக்கப்பட்டது. 1956இன் சிங்களம் மட்டும் சட்ட மூலத்தையடுத்து கல்லோயாவில் இடம்பெற்ற எதிர்ப்பியக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அது அழைக்கப்பட்டது (இலங்கை இராணுவம் 1999, 97)[9]. 1958 சிங்கள-தமிழ் இன வன்செயலையடுத்துப் பிரகடனஞ் செய்யப்பட்ட அவசரகாலநிலைக்குப் பின்னர் இராணுவத்துக்கு ஒரு பாரிய பாத்திரம் வழங்கப்பட்டது. மருதானை, வெள்ளவத்தை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இராணுவப் பிரிவுகள் அணிதிரட்டப்பட்டு, 'சிங்க' ரெஜிமென்ட் கிழக்கில் மட்டக்களப்புக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. துடிப்பான சேவைக்கு இணைந்து கொள்ளுமாறு தொண்டர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. 'சுடுமாறும், சுட்டுக் கொல்லுமாறும்' இலங்கை இராணுவத்துக்குக் கட்டளை விடுக்கப்பட்டிருந்தது (வித்தாச்சி 1958, 55-6). சுதந்திர இலங்கையில்

இராணுவ உத்தியோகத்தர்களுக்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் மாகாணங்களின் அரச அதிபர்களையும் விஞ்சும் வகையிலான அதிகாரம் வழங்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் (இன்றுவரையிலான ஒரேயொரு சந்தர்ப்பம்) இதுவேயாகும் (இலங்கை இராணுவம் 1999, 102).

தமிழ் மக்களின் கருத்து வேறுபாட்டுக்கு இராணுவ ரீதியான பதில்கள் 1960களிலும் தொடர்ந்தன. 1961இல் சம்'டிக் கட்சி தமிழர் ஆதிக்கப் பிரதேசங்களில் சத்தியாக்கிரகம் (வேலைநிறுத்தம்) ஒன்றுக்கு அழைப்புவிடுத்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவம் வலுவாக அணிதிரட்டப்பட்டது. அங்கு அந்த நேரத்தில் பணியாற்றிய இராணுவ உத்தியோகத்தர் ஒருவரின் கூற்றுப்பிரகாரம், யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் நிலை ஓர் ஆக்கிரமிப்பு இடங்கொள்ளல் இராணுவத்தின் நிலையை ஒத்திருந்தது.[10] அது தேயிலைத் தோட்டங்களில் சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவாக இடம்பெற்ற வேலை நிறுத்தத்தை நசுக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது. பின்னர் 1961 டிசம்பரில் துறைமுக வேலைநிறுத்தத்தின்போது அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டு, துறைமுகக் கூலியாட்களின் வேலையைச் செய்வதற்கு இராணுவம் அழைக்கப்பட்டது. இதுவரையிலான இலங்கை இராணுவத்தின் வரலாறு, அதன் பாத்திரம் வெறுமனே வைபவரீதியானது மாத்திரமல்ல வென்பதையும், அரசு அவசியமெனக் கருதிய சந்தர்ப்பங்களில் அது மீண்டும் மீண்டும் பலாத்காரத்தை வெளிப்படுத்தியது என்பதையும் காட்டுகின்றது. தொழிலாளர் வேலைநிறுத்தங்களின்போது அதன் பணிகள் (1961 துறைமுக வேலைநிறுத்தம், 1966 மே மின்சாரசபை வேலைநிறுத்தம்[11]) பயனுறுதியளவில் அடுத்தடுத்துவந்த அரசாங்கங்களின் தொழிற்சங்க எதிர்ப்பு அதிகாரத் தளத்துக்கு ஆதரவானவையாகவும், 2004 டிசம்பர் சுனாமி அனர்த்தத்தின்போது அழிவடைந்த கிழக்குப் பிராந்திய முஸ்லிம் மற்றும் தமிழர் பிரதேசங்களில் அது அணிதிரட்டப்பட்டு அனர்த்த நிவாரணத் தலையீடுகளில் ஈடுபட்டபோது சிவில்-இராணுவ சமநிலையில் ஒரு பாதகமான சமநிலையைத் தோற்றுவிப்பவையாகவும் அமைந்தன. பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் நானாவித ஏற்பாடுகளின் (பகுதி II)கீழ் இராணுவம் சாதாரண காவல்துறைக் கருமங்களை மேற்கொள்வதற்கு வலுவளிக்கப்பட்டதோடு, (டேவிட் 2005, 1) நலன்புரி நிலையங்களை நிர்வகிப்பதற்கும், சுனாமியால் பாதிப்புற்றோருக்குத் தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கும் பணிக்கமர்த்தப்பட்டது. இதேவேளையில், பல இராணுவ ஆளணியினர் பல்வேறு பணிகள் குறித்த படைகளில் நியமனம்பெற்றனர் (வுயளம குழசஉநள). எல்ரீரீஈ அமைப்பு தமது அரசியல் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டுக்கு முக்கியம்வாய்ந்த பிரதேசங்களில் இராணுவத்தின் பிரசன்னத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல (ஜான்ஸ் 2005, 1). சாதாரண ஆண்களும், பெண்களுமான பொதுமக்கள் இராணுவத்தின் பிரசன்னத்தினால்

அச்சுறுத்தப்பட்டனரென்பதும் முக்கியமானதாகும். நலன்புரி முகாம்களில் பாதுகாப்பின்மை, அந்தரங்கமின்மை என்பவற்றுக்கு இராணுவமே மூலகாரணமென்று தமிழ்ப் பெண்கள் முறையிட்டனர் (டி மெல் மற்றும் ருவான்புர 2006). இப்பதற்றத்துக்கு ஒரு வரலாறு உள்ளது. 1983இல் இடம்பெற்ற பெருமளவிலான ஆயுத மோதல்வரை மீண்டும் மீண்டும் நிகழும் சிங்கள-தமிழ் முரண்பாடுகளில் (1953, 56, 58, 61, 77)[12] இலங்கை இராணுவத்தின் தலையீடு தமிழ் மக்களின் கருத்து வேறுபாடுகளைப் பொறுத்தவரையில் அதற்கு ஓர் எதிராளி நிலையான, இனத்துவரீதியில் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட ஒரு பாத்திரத்தை வழங்கியது. ஒரு பிரத்தியட்சமான சிங்களப் படையென்ற வகையில் அதற்கு ஓர் இனத்துவப் பண்பு உள்ளது. அதன் சொந்தக் கூற்றுகளின் பிரகாரம், இது தோல்வியுற்ற 1962 இராணுவச் சதிப்புரட்சியின் பின்னர் (இலங்கை இராணுவம் 1999, 181)[13] ஆரம்பிக்கப்பட்ட ஓர் செயல்முறையாகும். அதன் 'சிங்க' ரெஜிமென்ட் (1956இல் உருவாக்கப்பட்டது), 'கெமுனு காவற்படை' (1962), 'விஜயபாகு' (1980) மற்றும் 'கஜபாகு' (1983) என்பவை அனைத்துக்கும் மேலாகச் சிங்கள அரச மற்றும் இராணுவ வரலாற்றைப் பிரதிபலிப்பவையாகும் (ராஜசிங்கம்-சேனாநாயக்க 2001 டி ஐயும் பார்க்கவும்).

எவ்வாறாயினும், 1971இல் இடம்பெற்ற JVP அரசு விரோதக் கிளர்ச்சிக்கு முன்னர் இலங்கை இராணுவம் பாரதூரமான ஆயுதச் சமர்களில் ஈடுபடவில்லை. முன்னாள் குடியேற்றவாத சக்தியாகிய பிரித்தானியாவுடன் செய்துகொள்ளப்பட்ட பாதுகாப்பு உடன்படிக்கை காரணமாக வெளிநாட்டு அச்சுறுத்தல்கள் இடம்பெறவில்லையென்பதோடு, 1957வரை முறையே திருகோணமலையிலும், கட்டுநாயக்கவிலும் இருந்த கடற்படைத் தளங்கள்மீது பிரிட்டன் நியாயாதிக்கத்தையும் கொண்டிருந்தது. பின்னர் கூட்டுச்சேரா வெளிநாட்டுக் கொள்கையொன்று நாட்டை வழிநடத்தியது.[14] ஆபிரிக்கக் கண்டத்தின் பல நாடுகளைப் போலன்றி, இலங்கை வல்லரசுகளுக்கிடையிலான போராட்டங்களின் அரங்கமாக மாறவில்லை. எவ்வாறாயினும், 1971ஆம் ஆண்டு ஒரு பெரும் மாற்ற நிலையைக் குறிப்பதாக அமைந்தது. 1971க்குப் பின்னர் இராணுவத்தின் நவீனமயமாக்கற் செயல்முறை விரைவுபடுத்தப்பட்டதோடு (ராஜசிங்கம் - சேனாநாயக்க 2001 b, 300), 1980களின் ஆரம்பத்தில் இலங்கை இராணுவத்தின் ஒழுக்கவியல்பும், குணாம்சமும் கணிசமான அளவு மாற்றமுற்றிருந்தது. இது தமிழ் பிரிவினைவாத இயக்கம் முதல் இராணுவ உயிர்களைப் பலிகொண்ட நேரமாகும் (1981 அக்டோபர் 15ஆந் திகதி யாழ் நகரில் இரு இராணுவ உத்தியோகத்தர்கள் பலியாகியமையே பிரிவினைவாத யுத்தத்தில் இடம்பெற்ற முதல் இராணுவ உயிரிழப்புகளாகும்). இதன் பின்னர் 1983 ஜுலை மாதத்தில் 13 இராணுவ வீரர்கள் மறைந்திருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தனர்.

தமிழர் விரோத திட்டமிட்ட படுகொலைகள் தெற்கில் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதன் பின்னர் பிரிவினைவாத யுத்தம் விதிமுறையாக ஆரம்பித்தது. தமிழ்ப் பிரிவினைவாதக் குழுக்களிடமிருந்து இராணுவம் எதிர்கொண்ட ஆயுதப் போராட்டத்தின் அளவு அது இதுவரை அனுபவித்திராத ஒன்றாகவிருந்தது. 1980'களின் நடுப் பகுதியளவில் அது எல்ரீரீஈ அமைப்புடன் ஒரு பாரிய யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது. 1994இல் ஒரு சிறிய இடைவெளியைத் தவிர, 2002 பெப்ருவரி 22ஆந் திகதி நோர்வே அரசாங்கத்தின் இடைத்தரகு காரணமாக எல்ரீரீஈ அமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கிடையில் கைச்சாத்தாகிய யுத்தநிறுத்த உடன்படிக்கை வரையில், அது 19 வருட காலமாக யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது. இன்று, சிறிய அளவுகளில் தொடர்ந்துகொண்டிருக்கும் யுத்தம் இலங்கை இராணுவத்தின் நிலைமாற்றத்துக்குப் பெரிதும் காரணமாகவுள்ளது. அதன் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை அதிகரித்தது. யுத்தம் குறித்த செயற்பாட்டுத் தேவைகள் சம்பந்தமாக விசேட பயிற்சி வழங்கப்பட்டது. நவீன இராணுவ ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. புதிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, இது இராணுவத்தின் கணிசமானளவு விரிவாக்கத்துக்கு இட்டுச்சென்றது. இலங்கை இராணுவத்தின் துரித வளர்ச்சி மற்றும் நவீன மயமாக்கலுக்கு இட்டுச்சென்ற தனிக்காரணி பிரிவினைவாத யுத்தமென்றே கருதப்படுகின்றது.[15]

உலகம் முழுவதும், வரலாறு முழுவதும் இராணுவங்களின் கதைகளில் பல்வேறு படிமங்கள் ஊறிப் பரவியுள்ளன. யுத்தமென்பது இளைஞர்களுக்கும், ஆண்மைக்கும், வீரத்துக்குமான அழைப்பாகும்; இராணுவ வீரரை உயர்த்திக்காட்டுவது வீரியமும், உடல் கட்டுறுதியுமாகும் (மொஸ் 1985, அத். 6). அது நண்பர்கள் மற்றும் தேசத்தின் சார்பில் வீரதீரச் செயல், தோழமை உணர்ச்சி மற்றும் தியாகங்கள் என்ற அர்த்தத்தையும் வழங்குவதாகும். இங்கு கூட்டு நன்மைக்காகத் தனிநபர் தேவைகள் கீழ்நிலைப்படுத்தப் படுகின்றன. யுத்தம் குறித்த புனைகதை அதன் பயங்கரவாதத்தை அழித்து, அதன் மகத்துவத்தை உயர்த்துகின்றது (மொஸ் 1985, 115). யுத்த முயற்சி என்பது தேசிய மற்றும் தனிநபர் புனருத்தாரணத்துக்கு அவசியமான ஒன்றென்று விளங்கிக்கொள்ளப் படுகின்றது. யுத்த ஆயுதங்களைப் பொறிமுறைப்படுத்தலும், குறிவடிவத்தில் அவை வடிவமைக்கப்படுவதும் அவற்றைப் பயன்படுத்தும் ஆண் போர்வீரனுக்கும் நாசகரமான ஆயுதங்களுக்குமிடையில் ஒரு நெருக்கமான சிற்றின்பரீதியான மற்றும் சிக்கலான உறவினை ஏற்படுத்துகின்றது. ஆக்கிரமிப்பு நடத்தையென்பது காமச் சிந்தனையோடு மேற்கவிவாக அமையும் வகையில் காட்டப்படுகின்றது. உதாரணமாக, காப்புநிற வடிவமைப்பில் ஆணுறைகளைத் தயாரித்த சந்தைப்படுத்தல் நிறுவனமொன்று இந்த விடயத்தை நன்கு விளங்கிக்கொண்டது (என்லோ 2000, 2). இந்தப் படிமங்களும், கற்பனைகளும் இராணுவமயப்படுத்தப்பட்ட

சமூகங்களில் இளைஞர்களிடையே ஜனரஞ்சகத் தன்மையையும், கவர்ச்சியையும் ஏற்படுத்துகின்றன. இந்தச் சமூகங்கள் வரலாறுகளில் ஏதோவொரு கட்டத்தில் இராணுவங்கள் நிறுவன மயப்படுத்தப்பட்ட ஓர் அனுபவங்களைக் கண்டுள்ளன. இராணுவம் தன்னைப் பற்றிய இந்தப் படிமங்களை உருவாக்குவதற்கும், தொடர்ச்சியாகப் புனருக்கம் செய்வதற்கும் இராணுவ அணிவகுப்புகள் மற்றும் இசைநிகழ்ச்சிகளிலிருந்து தெருக்காட்சிகள், சித்திபெற்று வெளியேறும் அணிவகுப்புகள், பாடசாலைக் கடேற் முகாம்கள், ஜம்போரிகள் மற்றும் இராணுவப் பொருட்காட்சிகள் வரையிலான பல்வேறு சமிக்ஞை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இலத்திரனியல் செவிப்புல மற்றும் கட்புல ஊடக (வானொலி, தொலைக்காட்சி, அச்சு மற்றும் சுவரொட்டி) விளம்பரங்கள், இராணுவ விளம்பரங்களின் வளர்ந்துவரும் செல்வாக்கைக் காட்டுகின்றன. அவை இராணுவத்தை வர்த்தகமயப் படுத்தலுக்கான கருவிகளாகியுள்ளதோடு, எவ்வாறு பாரிய எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் அவற்றைப் பார்த்து வரவேற்பளிக்கிறார்கள் என்பதையும் காட்டுகின்றன.

### சாத்தியமான பணிநோக்கு

1987ஆம் ஆண்டு மற்றும் 2000-2001ஆம் ஆண்டுக்கான இரண்டு இராணுவ விளம்பரப் படுத்தல் தளங்கள், இலங்கை இராணுவம் சந்தைப்படுத்தும் வடிவங்களிலான சுவாரஸ்யமான மாற்றங்களைக் காட்டுகின்றன. இத்தளங்களின் பகுப்பாய்வு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இராணுவவாதத்தின் வெளிப்பாடுகளை மாத்திரமன்றி, உலகளாவிய ஊடகங்களில் அவற்றின் நிலைமாற்றங்கள் மற்றும் இன்று உலகளாவிய பாதுகாப்பை வரைவிலக்கணப்படுத்துவதில் அவற்றின் அதிகரித்த செல்வாக்குமிக்க பாத்திரம் என்பவற்றில் அவை பரஸ்பரம் தங்கிநிற்றல்குறித்த வரைபடவியலை வழங்குகின்றது. 1982இல் தொலைக்காட்சியும், அதன் அகநிலையமைவும் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டதோடு (ஜப்பானிய அரசாங்கத்தினால் கொடையாக வழங்கப்பட்டது) நாட்டில் உள்ள ஒவ்வோர் இல்லத்துக்கும், தொழில்முயற்சிக்கும் ஒரு தொலைக்காட்சிப்பெட்டி மூலமாக ஒரு சக்திமிக்க ஊடகம் கிட்டியது. அவ்வாறே கிடைக்கக்கூடிய ஒரு தொலைக் காட்சிப்பெட்டியைச் சுற்றித் திரண்ட ஜனசமூகங்களுக்கும் இந்த வசதி கிட்டியது. செய்தி, தகவல் மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றைப் பொறுத்தவரையில் தொலைக்காட்சி வானொலியை விரைவில் தோற்கடித்துவிட்டது. அது மிகவும் ஜனரஞ்சகமான ஊடகமாக மாறிவிட்டது. இராணுவமும் அதன் செவிப்புல மற்றும் கட்புல சாத்திய வளங்களையும், அனைவரையும் சென்றடையும் தன்மையையும் துரிதகதியில் சாதுரியமாகப் பயன்படுத்திப் பொதுமக்களிடையே தமது பிரதிமையைக்

கட்டியெழுப்புவதற்கும், ஆட்சேர்ப்புக்கும் பயன்படுத்திக் கொண்டது. 1987இல் இராணுவ கொமாண்டோ பிரிவின் '*நொஹெக்கக் நொமெத்த*' (இயலாதது ஒன்றுமில்லை) எனப்படும் விவரண நாடகம் (இது அதிரடிப்படையின் இலட்சிய வாசகமாகும்)[16] அந்த நேரத்தில் அரசுக்குச் சொந்தமான 'ரூபவாஹினி' தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய பராக்கிரம நிரியெல்லவினால் தயாரிக்கப்பட்டது.[17] இந்த விவரண நாடக வடிவமைப்பு நாடக ஆசிரியரும், வீதியரங்குப் பணியாளரும், தொலைக்காட்சி நாடக நெறியாளருமான பராக்கிரம நிரியெல்லவுக்கு, அவருக்குப் பரிச்சயமான நாடக உலகிலிருந்து பயன்பெற்றுக் கொள்ள உதவியது. இது பொதுச்சேவை ஒளிபரப்பிலிருந்து கூறுகளாக்கப்பட்ட இன்றைய 30 விநாடி கட்புல.'.ஒலிச் சமர்ப்பணத்துக்கான நிலைமாற்றத்தைக் குறிப்பதாகும். வலுமிக்க கதைகூறல் மற்றும் பாத்திரவமைப்பு என்பவை '*இயலாதது ஒன்றுமில்லை*'க்கு உயிர்த் துடிப்பு வழங்குகின்றன. போரையும் சமாதானத்தையும், நன்மையையும் தீமையையும், வாழ்வையும் மரணத்தையும் அருகருகே வைப்பதன்மூலம் அது நாடகமென்றவகையில் அதற்கான அடிப்படையை வழங்குகின்றது. கதை பின்வருமாறு:

> சிங்களக் குடும்பமொன்று மாலைநேரத் தொலைக்காட்சிச் செய்தியைப் பார்க்கின்றது. முதலாவது விடயம், தெற்கில் சிலாபத்தில் புஷ்பாராம பௌத்த விகாரையிலிருந்து வட-கிழக்கை நோக்கித் திருகோணமலை முன்னேஸ்வரம் கோயிலுக்குச் செல்லும் சமாதானப் பாதயாத்திரைக் காட்சியாகும். இரண்டாவது செய்திக்காட்சி, எல்ரீரீஈ அமைப்பினால் சிங்களக் கிராமமொன்றின்மீது மேற்கொள்ளப்படும் கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலாகும். சிறுவர்களும், அப்பாவிப் பொதுமக்களும் பலியாகின்றனர். ஒரு குடும்பத்தின் மூத்தமகன் ஜகத் பெரேரா படுகொலைக் காட்சிகளைப் பார்த்துத் தெளிவாகவே உணர்ச்சி வசப்படுகின்றான். தான் வயதில் குறைந்தவராகவிருப்பின் இராணுவத்தில் சேர்ந்திருப்பேனென்று தந்தையார் கூறுகின்றார். ஜகத் தன்னை முகமூடியணிந்த பயங்கரவாதிகளிடமிருந்து கிராமத்தவர்களைப் பாதுகாக்கும் அதிரடிப்படை வீரனாகக் கற்பனை செய்கின்றான்.

செய்திக்குப் பின்னர், திரையில் நிகழ்ச்சிகள் விபரம் காண்பிக்கப்படுகையில், ஜகத்தின் தந்தையும், தாயும், தங்கையும் இரவுணவுக்குச் செல்கின்றனர். ஜகத் தம்பியோடு வரவேற்பறையில் இருக்கின்றான். இப்பொழுது காட்சி அதிரடிப்படைப் பயிற்சி மற்றும் யுத்தச் செயற்பாடுகளை விபரிக்கின்றது. இலங்கை இராணுவத்தின் அதிரடிப்படையில் சேருமாறு இளைஞர்களை அழைக்கும் சிங்கள மற்றும் ஆங்கில

விடய வாசகமொன்று ஓர் ஆணின் குரலிலும், பெண்ணின் குரலிலும் ஒலிக்கின்றது. 'பயணம் கடினமடைகையில் எதற்கும் அஞ்சாதவர்களே முன்செல்லுகின்றனர். பெருமைமிக்கோர், உயர் சலுகைபெற்றோர் மற்றும் வாழ்க்கையை வேடிக்கை விநோதமாக அனுபவிப்போருடன் இணையுங்கள்! அதிரடிப்படை வீரர்களாகப் பணியாற்றுவதற்கு இலங்கை இராணுவத்துக்கு உடற்கட்டு, நடைமுறை அறிவு, அர்ப்பண உணர்வு மற்றும் தேசாபிமானம்கொண்ட இளைஞர்கள் தேவைப்படுகின்றனர்' என்பதே சேதியாகும். ஜகத் தான் அதிரடிப்படையில் சேர விரும்புவதாகத் தந்தைக்குக் கூறுகின்றான். பெற்றோருக்கு இது விருப்பமில்லையென்பதால், குடும்பத்தில் வாக்குவாதம் ஏற்படுகின்றது. ஜகத் அறைக்குச்சென்று சிங்கள 'சிலுமின' பத்திரிகையின் ஆட்சேர்ப்பு விளம்பரத்துக்குப் பதில் அனுப்புகின்றான்.

இப்பொழுது காட்சி பெரேராவின் வீட்டிலிருந்து அதிரடிப்படைப் பயிற்சிக் களத்துக்கு மாற்றமடைகின்றது. '1234567 மற்றும் நல்ல போர் வீரர்கள் சொர்க்கத்துக்குச் செல்லுகின்றனர்' என்பவை உள்ளிட்ட ஒலிகளோடு பயிலுநர்கள் துள்ளி ஓடுகின்றனர். ஜகத் பெரும் படைப்பிரிவின் கொடியை ஏந்தியிருக்கிறான். போலியான நிலக்கண்ணி வெடிப்புகள், தீயின் மேலாகப் பாய்தல், சிறுத்தைபோல் பதுங்கி ஊர்ந்துசெல்லல் மற்றும் ஆயுதந்தாங்கிய தாக்குதல் என்பவை உள்ளடங்கிய, அதிரடிப்படையினர் தடைகளைத் தாண்டுதல்குறித்த கல்விநெறி இடம்பெறுகின்றது. இப்பொழுது 'கடின முயற்சியுடன்கூடிய உழைப்பு இரத்தம் சிந்தலைத் தடுக்கும்' என்னும் சுலோகம் சிங்களமொழியில் காண்பிக்கப்படுகின்றது (இச்சுலோகம் பின்னர் ஆங்கிலமொழியிலும் காண்பிக்கப்படுகின்றது.)

முகாமில், கொழுந்துவிட்டெரியும் தீயைச்சுற்றி அனைவரும் அமர்ந்திருக்கின்றனர். பயிலுநர்கள் தோழமை உணர்ச்சியை அனுபவித்தவாறு பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் இருக்கின்றனர். இப்பொழுது இராணுவ உணவுச்சாலையும், 'பல்லினத்தன்மையே வாழ்க்கைக்குச் சுவையூட்டுவதாகும்' என்னும் சுலோகமும் காண்பிக்கப்படுகின்றன. நேர்த்தியான வெள்ளைச் சாரமும், சேட்டும் அணிந்த பணியாளர்கள் பயிலுநர்களுக்கு இரவு உணவை வழங்குகின்றனர்.

ஜகத்தின் பயிற்சிக் காலத்தில் அவனுடைய குடும்பத்தினர் அவனை வந்து பார்ப்பது அவனுக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. படைப்பிரிவின் ஒழுக்காற்று விடயங்கள் தனக்குப் பெரிதும் பிடித்திருக்கின்றதென்று அவன் கூறுகின்றான். அவன் தங்கை, ஒருகாலத்தில் தனது தோற்றத்தைப் பற்றி எந்தக் கவலையும் கொள்ளாத தன் சகோதரனில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் கண்டு வியப்பைத் தெரிவிக்கின்றாள். அந்த வாழ்க்கை முடிந்துவிட்டதென்று ஜகத் அவளுக்குக் கூறுகின்றான். என்ன நடந்தாலும் அவனது மனிதாபிமான உணர்வே

மிகவும் முக்கியமானதென்று தந்தை சொல்லுகின்றார். ஜகத், இப்பரந்த உலகில் சாத்தியமற்றது எதுவுமே இல்லை என்று தெரிவிக்கின்றான்.

இப்பொழுது காட்சி கைத்துப்பாக்கி மற்றும் ரைபிள் உபயோகம் என்பவற்றைப் பற்றியதாக மாறுகின்றது. ஜகத் ஒவ்வொரு தடவையும் குறிதவறாது சுடுகின்றான். இதன்பின்னர் கவலையான மனோநிலையை வெளிப்படுத்தும் ஒரு முகாம் காட்சி தோன்றுகின்றது. ஒரு போர்வீரன் மேற்கத்தைய ஹொலிவூட் திரைப்படத்தில் இடம்பெறும் நன்கு பிரபலமான கருப்பொருளைக் கொண்ட' *மேலும் சில டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்காக*' என்னும் திரைப்படத்தின் பாடலை விசிலடிக்கின்றான். பயிலுநர்கள் திறந்தவெளியில் தகரப் பாத்திரங்களில் சமைக்கின்றனர். இப்பொழுது செய்பணிகுறித்து விளக்கமளிக்கப்படும் பயிற்சியொன்று காண்பிக்கப்படுகின்றது. கற்பாறையில் கயிற்றின் உதவியுடன் இறங்குதல், காற்றுநிரப்பும் டிங்கியில் ஆற்றைக் கடத்தல், எதிரி முகாமொன்றை அதிரடித்தாக்குதலில் கைப்பற்றல் போன்ற காட்சிகள் இடம்பெறுகின்றன. அதிரடிப்படையினர் எதிரிகளின் துப்பாக்கி வேட்டுக்களை எதிர்நோக்குகின்றனர். ஆயினும் ஒரு கைக்குண்டை வீசியெறிந்து தாக்குதலில் ஈடுபடுகின்றனர்.

அடுத்த காட்சியில் பயிலுநர்கள் பயிற்சியை முடித்து வெளியேறுகின்றனர். அணிவகுப்பின்போது பெற்றோர்கள் தமது புதல்வர்களின் சீருடைகளில் அதிரடிப்படை இலச்சினைகளைக் குத்திவிடுகின்றனர். ஜகத்தின் தாய் அவனுடைய இலச்சினையைக் குத்திவிடுகிறாள். தாய்மை உணர்வோடு அவனது 'கொலர்'களைச் சரியாக்கி, அவனது சட்டையையும் சீர்படுத்துகிறாள். ஜகத்துக்கு மிகச்சிறந்த வீரனுக்கான (அதிசூர) அதிரடிப்படை விருது வழங்கி ஓர் அடையாள வாளையும் கொடுக்கிறார்கள். சகோதரி அவன் எவ்வாறு மாற்றமடைந்திருக்கிறான் என்பதைக் கண்டு மீண்டும் தனது வியப்பை வெளிப்படுத்துகின்றாள். 'பாவம் அவன் ஒரு அப்பாவிப் பையன்' என்று தாய் கூறுகின்றாள். 'மனம்வைத்து முயற்சித்தால் ஒரு மனிதன் செய்ய முடியாதது எதுவுமே இல்லை' என்று தந்தை கூறுகின்றார். ஜகத்தின் சகோதரனும் இராணுவத்தில் சேர விரும்புவதாகக் கூறுகின்றான். முதலில் பெற்றோர் அங்கீகாரமளிக்க விரும்பவில்லை. இந்தக் காட்சியோடு இடம்பெறும் பின்னணி இசை திடீரென்று நின்று விடுகின்றது. இப்பொழுது திரையில் வெற்றிகரமான அதிரடிப்படைத் தாக்குதல் ஒன்று காண்பிக்கப்படுகின்றது. அதன் முடிவில் ஜகத் தனது வாயு எதிர்ப்பு முகமூடியைக் கழற்றுகிறான். பணி பூர்த்தியாக்கப்பட்டது. புகழ் வார்த்தைகள் குவிகின்றன.

இந்த விவரண நாடகத்தின் அழகியல் வாதமுறைகளிலும், கட்புல வாதமுறைகளிலும் முக்கியமான தத்துவார்த்த அடையாளக் காட்டிகள் பொதிந்துள்ளன. சமாதான யாத்திரை மற்றும் (கென்ற் மற்றும் டொலர் பண்ணைகளில் 1986இல் இடம்பெற்ற படுகொலைகளை நினைவூட்டும்)[18] ஒரு

சிங்களக் கிராமத்தில் எல்ரீரீஈ புரியும் படுகொலை போன்ற செய்தி விடயங்களை அருகருகே வைத்து, பாதயாத்திரை கொலைகளால் முக்கியமற்றதாக்கப்படும் வகையில் விடயங்களைக் காண்பிப்பது யுத்தத்தை நியாயப்படுத்துவதாக அமைகின்றது. சிங்கள பௌத்த மக்கள் சமாதானத்துக்காக நிற்கையில், தமிழ்ப் பயங்கரவாதிகள் யுத்தத்தையே விரும்புகின்றனரென்றும், அரசுக்கு மாற்றுவழி எதையுமே விட்டுவைக்கவில்லை என்பதையும் இது காட்டுகின்றது. சமாதான யாத்திரையைவிட, கிராமத்தில் படுகொலையின்போது கொல்லப்பட்ட மகனை வைத்துக்கொண்டு அழும் தந்தையின் காட்சி நீண்டநேரம் காண்பிக்கப்படுகின்றது. இது பார்வையாளர்களை சமாதானத்துக்கான சாத்தியக் கூறுகளைவிடத் தொடரும் பயங்கரவாதச் செயல்கள் மீதே கூடுதலான கவனத்தைச் செலுத்த வைக்கின்றன. மோதலுக்கிட்டுச் சென்ற வரலாறு குறித்து எதுவுமே சொல்லப்படுவதில்லை. தார்மீக நியாயம் சிங்கள மக்களின் பக்கத்தில் உள்ளது, அதேவேளையில் தமிழ்ப் பயங்கரவாதி எடுத்துக் காட்டுவது கொடூரத்தை மாத்திரமேயாகும்.

விளம்பரப்படுத்தலில் பார்வையாளரின் நற்பண்புகள் என்றவகையில் அவர் மெச்சப் படுகின்றாரென்று ஆர். சிறிவத்சன் கூறுகின்றார் (சிறிவத்சன் 2000, 143). இங்கு படுகொலைகுறித்த காட்சிகளால் பார்வையாளராகிய ஆணின் மனதில் ஏற்கெனவே தீவிரமாகப் பதிக்கப்பட்ட குடியியல் கடமை குறித்த உணர்வு தூண்டப்பட்டு, (தமது சொந்த இனத்துவக் குழுவைச் சேர்ந்தோராயிருந்தபோதிலும்) அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான ஆண்மை மற்றும் வீரம் சம்பந்தமான எண்ணப்பாடுகளுக்கு அறைகூவல் விடுக்கப்படுகின்றது. இந்த நற்பண்புகள் நியமவிதிகளாக அனுமானிக்கப்படுவதோடு அவற்றை வரவேற்காத பார்வையாளருக்கு எதுவுமே கூறப்படுவதில்லை. அவர் சிறந்த குடிமக்களின் வட்டத்துக்கு வெளியே இருப்பவராவார். ஆட்சேர்ப்பு அறிவித்தல் ஆண்மை, வீரம், வேடிக்கை விநோதம் மற்றும் வீரதீரச் செயல் சம்பந்தமான இளைஞர்களின் கற்பனைகளைத் தூண்டிவிடுகின்றது. இக்கட்புலக்காட்சிகள் முழுக்க முழுக்க ஆண்களுக்கே வடிவமைக்கப்பட்டவை என்பதை நோக்குகையில், இந்த ஆங்கில விடய வாசகத்துக்கு ஒரு பெண்ணின் குரலைப் பயன்படுத்தியுள்ளமை விந்தையானதாகும். இக்குரல் 'எங்களுக்கு' என்னும் சொல்லைப் பயன்படுத்துவது அதிரடிப்படைப் பிரிவு முழுக்க முழுக்க ஆண்களைக்கொண்ட ஒரு போர்ப்படை என்பதைக் காட்டும் பால்நிலைக் கட்டமைப்புக் குறித்த பொய்யுரைக்கும் ஒன்றாகும்.[19] எவ்வாறாயினும், இந்த விண்ணப்பம் இளைஞர்களைச் சலுகைபெற்ற குழுவொன்றில் சேருமாறு அழைப்பதால், அது ஒரு பரிச்சயமான உணர்வொலியைக் கொண்டுள்ளது. ஆட்சேர்ப்பு அறிவித்தல் எதுவுமே தமிழ்மொழியில் இடம் பெறாதிருப்பது இலங்கை இராணுவம் பிரதானமாக ஒரு சிங்கள இராணுவம் என்னும் இனத்துவப் பண்பை வெளிக்காட்டும் ஒரு மௌன நிலையாகும். இது

1956ஆம் ஆண்டின் அரசகரும மொழிகள் சட்டத்தைத் தொடர்ந்து அரச சேவையில் இணைந்து கொள்ளமுடியாத தமிழ் மக்களின் மனக்குறைகள் மற்றும் 1983 திட்டமிட்ட தமிழர் விரோதப் படுகொலைகள் காரணமாக இராணுவத்தைச் சேர்ந்திருந்த ஒரு சில தமிழர்களும் அதைவிட்டு விலகியமை என்பவற்றை இங்கு சித்தரிப்பதே கிடையாது (இராஜசிங்கம்-சேனாநாயக்க 2001b, 301).

ஒரு பொதுமக்கள் அவகாச வாய்ப்பெனறவகையில் விளம்பரங்கள் எமது நனவிலி மனத்தை எவ்வாறு ஆட்டிப்படைக்கின்றன என்பதும், அவை கற்பனை மற்றும் யதார்த்தம் கலந்த ஓர் உலகில் எவ்வாறு ஒரு நடுநாயகமான பாத்திரத்தை வகிக்கின்றன என்பதும் தற்போதைய கிராமத்துப் படுகொலைகளோடு ஓர் எதிர்கால அதிரடிப்படை வீரனாகிய ஜகத் பெரேராவின் பரஸ்பரம் ஊடறுக்கும் காட்சிகளினூடாக நிரியெல்லவின் விவரண நாடகத்தின் மூலம் தெளிவாகின்றன. இத்தகைய நிகழ்காலமும், எதிர்காலமும் ஒன்றையொன்று ஊடறுப்புச்செய்யும் இந்த நிலைமை வீடியோ.'.திரைப்படத்தில் சாத்தியமாவதோடு, அது உலகியல் தன்மையைச் சரிந்துவிழச்செய்து, எதிர்காலக் கற்பனை விடயத்தை இங்கே, இப்பொழுது மேலும் சாத்தியமான ஒரு விடயமாகக் காட்டுகின்றது. அது ஈட்டக்கூடியதாகையால் விருப்புக்குரியதாக அமைகின்றது. அதிரடிப்படை வீரனின் சமர்குறித்த இளைஞனின் கற்பனை ஓர் ஈட்டிக்கொள்ளக்கூடிய யதார்த்தமாக மாற்றப்படுகின்றது. இது சிங்கள நகர்ப்புறப் பார்வையாளர்களுக்குப் பெரேராவின் நடுத்தரவர்க்கக் குடும்பத்தை உண்மைத்தன்மையென்னும் கண்ணாடி வில்லையினூடாகக் காண்பிப்பதால் அவர்கள் இதை ஈட்டிக்கொள்ளக்கூடிய யதார்த்தம் என்று எண்ணுகின்றனர். கருக்குடும்பம், அவர்களின் ஆடை அணிகள், வீட்டுத் தளபாடங்கள், செய்திக்குப் பின்னரான இரவுணவு என்னும் கிரமமான வழக்கநிலை[20] மற்றும் செய்தியைத் தொடர்ந்துவரும் நிகழ்ச்சித்திட்ட விபரங்கள்குறித்த இசை என்பவை பரிச்சயமான, நகர்ப்புற, அன்றாட நடுத்தரவர்க்க வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக அமைகின்றன. ஜகத்தின் பெற்றோர் தமது மகன் இராணுவத்தில் சேருவதற்கு விருப்பமின்மையைக் காட்டுவதை நிரியெல்ல நாடகத்தினுள் புகுத்துவதன்மூலம் பகைப் புலத்தினுள் பதற்றநிலையைக் கொண்டுவந்தாலும், வாழ்க்கையின் உண்மை நிலைகளையும் முதலிலேயே வைத்தமைக்கின்றார். மகன் ஒருவர் துடிப்பான யுத்தத்தில் இணைவது பெற்றோருக்கு இலகுவான ஒரு தெரிவன்று. ஆயினும், பெற்றோரின் விருப்பமின்மை என்பது கதை கூறலின் தர்க்கவியலினுள் ஒரு முன்நிபந்தனையாக அமைந்துள்ள ஒரு கலைக் கருத்தாகும். பயிற்சி முடிந்து வெளியேறும் வைபவத்தில் ஜகத் பெரேராவின் தாய் அவரின் அதிரடிப்படை இலச்சினையைக் குத்திவிடுவது அவள் அவனைப் பெற்றெடுத்தவள் என்றபோதிலும், இப்பொழுது கடமையில்/யுத்தத்தில் மரணம் ஏற்படக்கூடிய சாத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தார்மீக அனுமதியை,

அதிகாரத்தைக் காட்டுவதாக உள்ளது. ஆரம்ப விருப்பமின்மை (அவள் அவனுடைய உடைகளைச் சரிசெய்துவிடும்போது அவன் தனது பிள்ளை என்ற விடயம் அவளின் நினைவைவிட்டு ஒருபோதும் அகலாதபோதிலும்) இப்பொழுது உறுதியான அங்கீகாரமாக மாற்றமடைகையில் அது சகலராலும் செலுத்தப்படவேண்டிய இன்றியமையாத தியாகம் என்னும் நீளுரையாடலுக்குப் பங்களிப்புச் செய்கின்றது.[21]

ஊடகங்கள் ஜனரஞ்சகக் கலாசாரம் அல்லது உழைப்புக் குறித்த நிலைமைகள் என்று எதுவாகவிருப்பினும், உலகமயமாக்கல்குறித்த கலந்துரையாடல்கள் இயற்கையாகவே பணியின் போதனா அடையாளங்கள், பல்தேசியக் கைத்தொழில்களின் ஆதிக்கம் மற்றும் உள்களின் எதிர்ப்புணர்வு போன்ற உலகளாவிய–உள்ளூர் தொடர்பிணைப்பையும் கருத்திற் கொள்ளுகின்றன. இக்கூற்றுக்கள் பலவற்றின் உள்ளூர்த்தன்மை என்பது அவகாச வாய்ப்பு மற்றும்.˙. அல்லது கலாசார ரீதியாக உலகளாவிய தன்மைக்கு எதிரானதாகவே காட்டப்படுகின்றது. உலகளாவிய ஊடக ஒளிபரப்புக்களிலும், விளம்பரப்படுத்தல்களிலுமான கருத்துரைகளில் இடம்பெறும் 'உலகளாவியரீதியில் சிந்தித்து, உள்ளூர் ரீதியில் செயற்படுங்கள்' என்னும் சுலோகம் (பசுமை சமாதான இயக்கத்தினாலும் ஏற்றுச் செயற்படுத்தப்படுவது) (தொம்லின்சன் 1999, 26) பல்தேசிய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் விளம்பரப்படுத்தல் மற்றும் ஊடக நிறுவனங்கள் எவ்வாறு மேலும் கலாசாரக் குறித்துரைப்பான முறையில் (சுதேச) சிந்திப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றன என்றரீதியில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது (பேஜ் மற்றும் குறோவ்லி 2001, 113). உள்ளூர்க் குறித்துரைப்பு நிலைமைக்கு இசைவாக்கம் ஏற்படுத்திக்கொண்டு, ஓர் உலகளாவிய பின்னணியில் உள்;ர்க் கலாசாரத்தின் 'மீள் உறுதிப்படுத்தும் தொடுகை' அவசியப்படுகின்றது (சக்கரவர்த்தி 2001, 99). இத்தகைய விபரிப்புகளில் கலாசாரம், மூலதனம், உள்;ர்மயப்படுத்தல் மீதான உலகமயமாக்கல் என்பவற்றில் பரஸ்பர தங்கிநிற்றலைக் காணலாம் (ஜோசப் 2002, 152). உள்ளூர்த்தன்மை என்பது சுயாட்சி விதிகள் மற்றும் வித்தியாசமான வரலாறுகள் என்பவற்றுடன் உலகளாவிய தன்மையிலிருந்து விலகி, சுதந்திரமாக விளங்குகின்றதென்னும் உத்தி உட்கருத்து இங்குள்ளது. சாம்ராஜ்யத்துடன் ஆரம்பிப்பதும், சுதேச இனக்குழுவியல் விடயங்களில் குரல்களை வேண:மென்றே நசுக்குவதன் அடிப்படையிலான சமகால, நவீனத்துவ உணர்வுக்கெதிரான எச்சரிக்கையை விடுப்பதுமான உலகமயமாக்கலின் நீண்ட வரலாற்றுக்குக் கூருணர்வுகொண்ட கதைகள்கூடத் தமது சொந்தத் திரை மற்றும் ஊடகச் செயற்பாடுகளில், உதாரணமாக, (ஜின்ஸ்பேர்க், 2003, 83) சுதேச விடயங்களுக்கான சுயாதீனக் களமொன்றை உயர்த்திப்பிடிக்கின்றன.

'இயலாத விடயம் ஒன்றுமில்லை' என்னும் விவரண நாடகத்தில் உலகளாவிய தன்மை சுதேச இயல்பில் எவ்வாறு வெளிப்படுகின்றதென்பதும்,

அவகாச வாய்ப்பு மற்றும் கலாசார பதங்களில் இரண்டுக்குமிடையிலான இருபுடைத்தன்மையை எதிர்த்துநிற்கும் வகையில் எவ்வாறு வெளிக்கொணரப்படுகின்றது என்பதும் காட்டப்படுகின்றது. இது பிரதானமாகக் கதைகூறும் வடிவம் மற்றும் திரைப்பட அம்சங்கள் என்பவற்றினூடாகவே கையாளப்படுகின்றது. இந்த விவரண நாடகத்தில் உயர்ந்தளவிலான யதார்த்தவாத ஹொலிவூட் திரைப்பட வடிவங்களும், ஹொலிவூட் யுத்தத் திரைப்படங்கள்குறித்த விடயவாசகப் பயன்பாடுகளும் குறிப்பாக இடம்பெற்றுள்ளன. இந்த அதிரடிப்படைப் பயிற்சிக் காட்சிகள், 1982இல் வெளிவந்த *'உத்தியோகத்தரும், கனவானும்'* என்னும் ரெயிலர் ஹெக்போர்ட்டின் திரைப்படத்தின் காட்சிகளைப் பிரதிபண்ணியமையாகும். இதை நிரியெல்லவும் ஒப்புக்கொண்டார்.[22] இவை '1,2,3,4,5,6.7.∴.சிறந்த போர்வீரர் அனைவரும் சொர்க்கத்துக்குச் செல்லுகின்றனர்' போன்ற அமெரிக்க இராணுவ உச்சாடனங்களும், மீள்பிறவி குறித்த பௌத்த எண்ணப்பாடுகளுக்கு இணங்காதவையாகவிருப்பினும் அவை அநேகமான இலங்கைப் போர்வீரர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இலங்கையின் இராணுவ உயரதிகாரிகள் பாகிஸ்தான், இந்தியா, இஸ்ரேல், பிரிட்டன் மற்றும் அமெரிக்க இராணுவக் கல்விக் கழகங்களில் பயிற்சி பெறுவதால், அமெரிக்க இராணுவப் பயிற்சியில் மீண்டும் இடம்பெறுவது உள்ளூர்த்தன்மை மற்றும் உலகளாவியதன்மை கொண்டதென்று அர்த்தம் கொள்ளப்படுகின்றது. இது இலங்கை இராணுவத்தின்மீது, ஓர் உலகளாவிய உற்பத்திப் பொருள் என்ற வகையில் ஒரு விசுவாசத்துக்கு இட்டுச்செல்கின்றது. பாறைகளில் ஏறுதல், சிறுத்தைபோல் பதுங்கி ஊர்ந்துசெல்லுதல், தீ மற்றும் நிலக் கண்ணிவெடிகளைத் தாண்டிச்செல்லுதல், துப்பாக்கி வேட்டுக்கள் தீர்த்தல், தற்காப்பு யுத்தக் கலைகளில் ஈடுபடுதல் மற்றும் போலிச் சமர்கள் போன்ற நிரியெல்ல விவரண நாடகத்தில் இடம்பெறும் விடயங்கள் சண்டைத் திரைப்படங்களில் காணப்படும் பரிச்சயமான காட்சிச் சுவடிகளையே நினைவூட்டுகின்றது. குறிப்பிட்ட ஆண்மையின் உடல் வீரியத்தையும், ஒழுக்காற்றையும் நிர்மாணம்செய்து, நடவடிக்கையைப் பார்க்குமாறும், அதில் கலந்துகொள்ளுமாறும் சிங்கள இளைஞர்களான பார்வையாளர்களையும் அழைக்கின்றது. ஹொலிவூட் திரைப்படங்கள் குறித்த குறிப்புக்கள் வேண்டுமென்றே செய்யப்படுவனவாகும். பெரேராவின் குடும்பம் எவ்வித வாதத்துக்குமிடமின்றி (இந்திய சினிமாவின் வளர்ந்துவரும் செல்வாக்கு இருந்தபோதிலும்) உலகளாவிய பொழுது போக்குத்துறையில் ஹொலிவூட் திரைப்படங்களின் ஆதிக்கம் காரணமாக, அவர்களின் உள்ளூர் நகர்ப்புற சிங்கள நடுத்தர வர்க்கப் பின்னணியில் அமைந்திருப்பதே இதற்கான காரணமாகும்.

வர்த்தக விளம்பரங்களைப்போன்று, அலுப்பூட்டும் அன்றாட விடயங்கள் கவர்ச்சி மிக்கவையாகச் சித்தரிக்கப்படுகின்றன. இராணுவப் பயிற்சியின்

உடல்ரீதியான கடுரநிலை, இசையின் பயன்பாடு காரணமாகக் கடுமை குறைந்ததாகவும், மேலும் அழகியல் கவர்ச்சி கூடியதாகவும் காண்பிக்கப்படுகின்றது.[23] இந்த விவரண நாடகத்தின் ஆரம்பத்தில் இடம்பெறும் குடும்ப வாத விவாதங்கள் போன்ற அழுத்தத்தைப் பிறப்பிக்கும் காட்சிகளிலும், ஆற்றின் குறுக்காக அதிரடிப்படை வீரனின் பணிநோக்கிலும் நிரியெல்ல இந்த அனுபவத்தின் கடுரத்தை மேற்கத்தைய, காதுக்கு இதமூட்டும் இசைகள்மூலம் குறைக்கின்றார். இந்த இசை சுப்பர் மார்க்கட்டுகள், ஹோட்டல் முன்னறைகள் மற்றும் கடைகளைப்போன்று உலகமயமாக்கப்பட்ட அவகாச வாய்ப்புக்களின் குணாம்சங்களைக் கொண்டிருப்பதால், உலகமயமாக்கல் தன்மையையும், உள்ளூர்த் தன்மையையும் ஒன்றாக இணைக்குவித்து ஒன்றோடொன்று ஊடாட்டம், ஆதரவு மற்றும் ஒன்றுக்கொன்று அதிகார நிலையை வழங்குகின்றன. இது ஒரு பொழுதுபோக்கென்ற வகையில் அதிரடிப்படைப் பிரிவு குறித்த தகவல்களையும் உள்ளடக்கும் இன்று உலகளாவிய ஊடக கலாசாரத்தின் அடையாளமாக மாறிவிட்ட “தகவல் பொழுதுபோக்கு!” குறித்தவோர் அழகியல் விடயமாகும். இக்கலாசாரத்தில் நுகர்வுப்பொருட்கள், செய்திகள் மற்றும் அரசியல் குறித்த உலகங்கள் மிகவும் அற்புதமானமுறையில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவையாகும் (அப்பாத்துரை 1994, 330). கணினி யுத்த விளையாட்டுக்களும் இராணுவ தொழில் நுட்பவியலில் தமது பிறப்பை உயிர்த்துடிப்பாக்குகின்றன. இவை உண்மையில் யுத்தத்துக்கும், பொழுதுபோக்குக்குமிடையிலான எல்லைகளை மங்கவைக்கும் அழிவு மற்றும் வன்செயல்குறித்த காட்சிகளை மீள்நிர்மாணம் செய்கின்றன (மார்ஸ் 2000, 179). இச்சூழமைவில், ‘‘பொழுதுபோக்கையும்’’ தகவல் வழங்குவதையும் இணைத்துப் பொருத்துவதென்பது யதார்த்தம் அதன் உள்ளடக்கம் இல்லாதநிலையில் யதார்த்தத்தை வழங்கும் நடவடிக்கை முறையை “பொதுமைப்படுத்துமொன்றாக” அமைகின்றது. அதனால் நாம் தொடர்ந்தும் ‘‘போலி உண்மையை உண்மையிலிருந்து வேறுபடுத்தி அறியமுடியாத நிலை’’ தோன்றுகின்றது (சீஸெக் 2002, 11). இது 1992 வளைகுடா யுத்தத்தின்போது அல்லது செப்ரெம்பர் 18ஆம் திகதிய நியூயோர்க் இரட்டைக் கோபுரங்களின் மீதான தாக்குதல்களின்போதான ஆரம்பக் குண்டு வீச்சுக்கள் போன்ற நிகழ்வுகளாகும். இவை பொழுதுபோக்கு உலகினுள்ளும், செய்தியை முதல் தடவையாக வழங்கும் செயல்முறையிலும் சமமான அளவில் வரைவிலக்கணப்படுத்தப்பட முடியாத காட்சித் துண்டுகளாகின்றன. அதிரடிப்படை மற்றும் இலங்கையின் யுத்தம் குறித்து தகவல் வழங்கும் நிரியெல்லவின் விவரண நாடகத்தில் உள்ள விடயங்கள் இராணுவ வாதத்தையும், பொழுதுபோக்கையும் உணர்வூட்டியபோதிலும் அவை இந்தத் தகவல் பொழுதுபோக்கின் அழகியற்கலை அம்சங்களாகும்.

ஒரு நுகர்வுப்பொருளென்ற வகையில் இராணுவவாதம், தனிநபர் மற்றும் கூட்டு நிலைமாற்றம் குறித்து வாக்குறுதியளிப்பது அவசியமாகும். இது போட்டியிடும் அல்லது கீழ்நிலைப்படுத்தப்பட்ட வகைப் பிரிவுகளாகவன்றி ஒன்றையொன்று பூரணப்படுத்தும் அகவய நிகழ்வுகளாகும். இந்த நோக்கத்துக்காக நிரியெல்ல, இராணுவ சேவையைக் கூட்டுச் சூழலினுள் தனிநபர் வளர்ச்சிக்கான சந்தர்ப்பத்தை வழங்கும் ஒன்றாக விவரண நாடகத்தில் காண்பிக்கின்றார். இது பூரணமாகவே விவரண நாடகத்துக்குத் தகவல் வழங்கும் மேல்நோக்கிய வர்க்க, நுகர்வாளர் முன்னேற்றத்தை உள்ளடக்கும் ஒன்றாக உலகமயமாக்கலும், மூலதனமும் கூறுவதன் தர்க்கவியலுக்குட்பட்டதாகும். சலுகைபெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் வர்க்கத்தினுள் புகுத்தப்பட்ட தனித்தன்மைகொண்ட அதிரடிப் படைப்பிரிவொன்றின் ஒரு பகுதியாக ஜகத், உதாரணமாக, இரவுவேளையில் சிறப்பான பரிசாரகர் மூலம் உணவு வழங்கப்படும் மரபு வழக்கத்தை அனுபவிக்கின்றான். அவன் சிங்களம் பேசும் நடுத்தர வர்க்கப் பின்னணியைச் சேர்ந்தவன் என்பதை நோக்கும்போது, 1960கள் முதல் இலங்கை இராணுவத்தின் 'சிங்களமயமாக்கல்' மற்றும், அல்லது 'அரசியல்மயமாக்கல்' காரணமாகத் தெளிவாகவே அனுகூலமடைந்துள்ளான். அத்தோடு தலைநகருக்கு வெளியிலிருந்து வந்தோருக்கும் உத்தியோகப் பதவிநிலைகளைக் கிடைக்கச்செய்த, இராணுவத்தினுள் நிகழ்ந்த ஜனநாயகமயப்படுத்தல் குறித்த முக்கியமான செல்நெறி காரணமாகவும் அவன் அனுகூலமடைந்துள்ளான். இச்செல்நெறி தனியார் பாடசாலை மற்றும் குடியேற்றவாத சலுகைகளைக்கொண்ட ஆங்கிலம் பேசும் பழைய மாணவர் வலைப்பின்னல் அமைப்பையும் திறந்துவிட்டது. சித்தியடைந்து வெளியேறும் அணிவகுப்பில் ஜகத்தின் தனிப்பட்ட அபிவிருத்தி குறித்து அவன் குடும்பத்தினர் ஆச்சரியப்படுவது, இராணுவம் தனிநபர் வளர்ச்சிக்கு வழங்கும் புனராக்கச் சாத்திய வளங்களைக் குறிக்கின்றது. ஆயினும் இதைத் தனிநபர் வர்க்க முன்னேற்றமென்று தெளிவாக எடுத்துரைக்க முடியாது. இதற்குப் பதிலாக இளம் அதிரடிப்படை வீரன் தன் தந்தையைப் பின்வருமாறு கேட்கின்றான்: "நான் இப்பொழுது மேலும் சிறந்த ஒரு நபராக இருப்பதை நீங்கள் காணவில்லையா?" இப்பொழுது இது இராணுவ ஒழுக்கநிலை ஆகியுள்ளது. அது அதனுடைய ஜனசமூகத்துக்கான உள்ளடக்க முக்கியத்துவம், அதாவது பெருமதியின் அலகாகும். இதற்காகவே அவனுக்கு அந்த வருடத்துக்கான மிகச்சிறந்த அதிரடிப்படை பயிலுநர் இலச்சினை விருது கிடைக்கின்றது. ஜகத்தின் இளைய சகோதரன் அவனின் அடிச்சுவட்டினைப் பின்பற்ற நினைப்பது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. வழக்கமான பெற்றோரின் கோபப்பார்வை இப்பொழுது எடுபடுவதில்லை. எதிர்த்து நிற்கமுடியாத ஒரு பாத்திர மாதிரியை இப்பொழுது அவனது மூத்த சகோதரன் வழங்குகின்றான். ஜகத் தாய்க்குப் பின்வருமாறு கூறுகின்றான்: "நான் இப்பொழுது

ஒரு விடயத்தை நன்கு விளங்கிக்கொண்டுள்ளேன். இப்பரந்த உலகில் ஒரு மனிதனால் செய்யமுடியாத காரியம் எதுவுமேயில்லை." ஜகத்தைப் பொறுத்தவரையில் செய்யமுடியாத விடயம் எதுவுமேயில்லை. ஓர் அதிரடிப்படை வீரன் என்ற வகையில் அவன் விவரண நாடகத்தின் தலைப்பு வழங்கும் வாக்குறுதியை நிறைவேற்றுகின்றான்.

எவ்வாறாயினும் நிரியெல்லவின் விவரண நாடகத்தின் இறுதித் தலைவிதி அறிவூட்டுவதும், பிரச்சினைக்குரியதுமாகும். இவ்விடத்திலிருந்து நுகர்பொருளின் வாதமுறைமைகளின் கலந்துரையாடலுக்கும், செயல் நிறைவேற்றமென்ற வகையில் நுகர்வின் தளத்துக்கும் நாம் திரும்பவேண்டியுள்ளது. இத்தளம் ஏனைய விடயங்களில் தங்கிநிற்பதும் அடிக்கடி இடம் மாறுவதுமாகும். விளம்பரங்கள் பகட்டு வாழ்க்கை, மேல்நோக்கிய வர்க்க முன்னேற்றம் மற்றும் நிலைமாற்றமடைந்த வாழ்வு என்பவைகுறித்த விருப்பை உருவாக்கும், கையாளும் ஒரு கலப்புப் பார்வையாளர்களை எதிர்பார்த்தால், இத்தகைய கற்பனைகள் எதிர்பார்த்த பணியை நிறைவேற்றாத சந்தர்ப்பங்களும் உள்ளன. விளம்பரங்கள் நுகர் பொருளைச் சுற்றியுள்ள மொழியடையாளவியலைத் தந்திரமாகக் கையாண்டபோதிலும், உள்நோக்கங்களுக்காகப் பயன்படுத்திய போதிலும், இலக்குப் பார்வையாளர்கள் அவற்றைச் சமகால சமூக மற்றும் அரசியல் (குறுக்கு) நீரோட்டங்கள் மற்றும் சூழ்நிலைகளின் பின்னணியிலேயே ஆர்வத்துடன் நோக்குகின்றனர். ஓரினத்தன்மைகொண்ட ஜனசமூக, நெருக்க உறவு மற்றும் இணைவுரிமை (belonging) உணர்வொன்றை ஏற்படுத்தும் முயற்சியில் விளம்பரங்கள் போட்டியிடும் ஏனையவற்றைத் தவறாக இனங்காணக்கூடும், அல்லது இதேபோன்ற நெருக்கவுறவு மற்றும் விருப்புக் குறித்த கட்டமைப்புகள் மற்றும் கோட்பாடுகளினூடாக நிர்மாணிக்கப்பட்ட இணைவுரிமை வடிவங்களை உதாசீனம் செய்யக்கூடும். இது வித்தியாசமான குறியிலக்குகள் மற்றும் சார்புத் தன்மைகளை நோக்கியவையாக அமையக்கூடும். இரண்டாவது ஜே.வி.பீ. கிளர்ச்சிக் காலத்தில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட *'சாத்தியமற்றது எதுவுமில்லை'* என்னும் விவரண நாடகம் (1987-89) காலத்தையும், பார்வையாளர்களையும் தவறாகப் புரிந்துகொண்டது. அது ஜகத் பெரேராவுடன் தம்மை இனங்காணும் ஓர் இளைஞர் குழுவுக்கு விண்ணப்பம் விடுப்பதில் ஜே.வி.பீ. மீது இரக்கசிந்தை கொண்டவர்களை உதாசீனம் செய்கின்றது. அரச பாதுகாப்புப் படைகள், குறிப்பாக இலங்கைப் பொலீசின் விசேட பணிகள் படை (STF) ஜே.வி.பீ.யைத் தாக்கிக்கொண்டிருந்தது. பயங்கரத்தின் காலமென்று பின்னர் அழைக்கப்பட்ட இக்காலப் பகுதியில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பலவந்தமான முறையில் 'காணாமற் போயினர்.' 1995இல் ஏற்படுத்தப்பட்ட, தென் பகுதியில் சுய-விருப்பற்று அழைத்துச் செல்லப்படுவோர் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு, முறையீடு செய்யப்பட்ட

8739 விடய நிகழ்வுகளில் 7239 ஆட்கடத்தல் குறித்த சான்றுகளைப் பெற்றுக்கொண்டது. இக்காலகட்டத்தில் அறிக்கையிட்ட பத்திரிகையாளர்களும், கல்விமான்களும் 40,000 பேர் 'காணாமற்போனதாக' மதிப்பீடு செய்கின்றனர் (குணரத்ன 2001, 269, சந்திரப்பிரேம 1991, 312). தெருவோரங்களில் எரிக்கப்பட்ட உடல்கள், தெருவிளக்குக் கம்பங்களில் கட்டப்பட்ட நிலையில் சடலங்கள் மற்றும் ஆறுகளில் மிதந்துசெல்லும் உடல்கள் என்பவை அன்றாடக் காட்சிப்பொருட்களாகவிருந்தன. அரசின் பாதுகாப்புப் படைகள் புரிந்த அட்டூழியங்களுக்கு நிகரானவகையில் ஜே.வி.பீ.யின் சொந்த கொடூரச் செயல்கள் அமைந்திருந்தன.

பராக்கிரம நிரியெல்லவை ஜே.வி.பீ. நுண்ணாய்வுக்குட்படுத்தியது. அவரின் விவரண நாடகம், தமது எதிரியென்றெண்ணிய அரசுப் பாதுகாப்பு இயந்திரத்தின் ஒரு பகுதியாகிய அதிரடிப்படைப் பிரிவை வீரமிக்கதென்று புகழ்ந்ததே இதற்கான காரணமாகும். இக்காலகட்டத்தில் பல பிரசித்தம் வாய்ந்த ஊடக ஆளணியினர் ஜே.வி.பீ.யினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். செய்திகளைத் திரித்துக் கூறியதாகவும், அரசாங்கப் பிரசாரத்துக்குத் துணைநின்றதாகவும் மற்றும்∴அல்லது ஜே.வி.பீ. கட்டளையிட்ட வேலை நிறுத்தங்களை உதாசீனம் செய்ததாகவும் அவர்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டது. சுயாதீனத் தொலைக்காட்சி வலையமைப்பின் (ITN) தகுதிவாய்ந்த அதிகாரியும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (SLBC) தவிசாளருமாகிய தேவிஸ் குருகேயும், சிங்களச் செய்தி வாசிப்பாளரான கீர்த்தி டி அல்விஸும் சுட்டுக்கொல்லப்பட்டனர். ரூபவாஹினி தொலைக்காட்சிக் கூட்டுத்தாபன ஊழியர்களும் ஜே.வி.பீ. வன்செயலுக்குப் பலியாகினர். இத்தாக்குதல்களால் பல ஊடகப் பணியாளர்கள் பீதியடைந்ததோடு, பல தொழில்சார் ஊடகவியலாளர்கள் ஒன்றில் வேலையை இராஜினாமாச் செய்தனர் அல்லது பணிக்கு வராதிருந்தனர். பாதுகாப்புப் படையினர் அரச ஊடகங்களைப் பொறுப்பேற்றதோடு, சிவில் உடைகளிலிருந்த இராணுவ உத்தியோகத்தர்கள் தொலைக்காட்சியில் செய்திகளை வாசித்தனர் (சந்திரப்பிரேம 1991, 277-8). பழிவாங்கல் மற்றும் பீதி நிறைந்த இச்சூழ்நிலையில் அதிரடிப்படைப் பிரிவுக்கு ஆட்சேர்ப்பைக் கோரிய *'இயலாதது எதுவுமில்லை'* விவரண நாடகம் ஒரு சதியென்று எண்ணிய ஜே.வி.பீ. நிரியெல்லவை இலக்குவைத்தது. அவரது வீட்டுக்கு வெளியே கைக்குண்டொன்று வீசப்பட்டது. நாடகாசிரியர் கலந்துகொண்ட பேர்ட்ரோல்ட் பிரெச்ட் கருத்தரங்கில் பகிரங்கமாகக் கூச்சல் கேலிகளுக்குள்ளாக்கப்பட்டார். அரசாங்கத்தின் அடிவருடியென்று வர்ணிக்கப்பட்டார். இக்கருத்தரங்கு கொழும்பில், ரஷ்யக் கலாசார நிலையத்தில் இடம்பெற்றது. பத்திரிகைகளில் தனது விவரண நாடகம் சம்பந்தமாக மன்னிப்புக்கோருவதற்கு நிரியெல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்.[24] ஜே.வி.பீ.யின் பிரதிபலிப்புச் சம்பந்தமாக விசேட முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்னவென்றால், அதன் தீவிர சிங்கள தேசியவாதத் தத்துவார்த்தம் காரணமாக

அது நிரியெல்லவின் சேதியால் கவர்ந்திழுக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதாகும். ஆயினும் இங்கு தெளிவாகக் காணப்படுவது தன்னளவில் ஒரு நுகர்பொருளின் ஆதிக்கம் எப்பொழுதுமே உறுதியானதல்ல. அது ஏனைய விடயங்களில் தங்கிநிற்கும் ஒன்று என்பதைக் காட்டும் கூட்டுச்சேரல்களின் பல்லினத்தன்மையே ஆகும். விவரண நாடகத்தில் உள்ள சிங்களத் தேசியவாதத்தை அடையாளங்காட்டும் அம்சங்கள்கூட ஜே.வி.பீ.யின் எல்.ரீ.ரீ.ஈ. எதிர்ப்பு மற்றும் இந்திய எதிர்ப்புச் சொற்சிலம்பத்தினுள் அடங்கிவிட (இந்திய அமைதிப்படையின் பிரசன்னம் அந்த நேரத்தில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் ஜே.வி.பீ.யினரைத் தேடியழிக்க உதவியது) தனது அங்கத்தவர்களைக் கொன்றொழிக்கும் அரச இராணுவத்துக்குச் சார்பான பிரசாரத்தை அதனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இந்த விவரண நாடகத்தினுள் உள்ளடக்கப்பட்ட கோட்பாடுகளாகிய கடமை மற்றும் தேசாபிமான உணர்வு தொடர்ந்தும் அங்குள்ளன. ஆயினும் அவை ஜே.வி.பீ. அமைக்கவுள்ள சிங்கள அடையாளத்தையும், இறைமையையும் மீட்டெடுத்துப் பாதுகாக்கும், எல்.ரீ.ரீ.ஈ. கோரிக்கைகளுக்கு இடமளிக்க மறுக்கும், தாம் அமைக்கவுள்ள ஓர் அரசினுள் ஐக்கியமாதல் வேண்டும். விவரண நாடகத்தில் வைத்தமைக்கப்பட்டுள்ள வீரம், தியாகம் மற்றும் இராணுவத் தோழமையுணர்வு குறித்த ஒழுக்கவியல் இன்னமும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவையாகும். ஆயினும், இந்த நற்குணங்கள் தமது சொந்தத் தோழர்களுக்கும், அவர்கள் போரிடும் இலட்சியத்துக்கும் மாத்திரமே பொருந்துபவையாகும், இலங்கை அரசின் போர்வீரர்களுக்கல்ல. அத்தோடு, அரச அனுசரணைபெற்ற இந்த 25 நிமிட விவரண நாடகத்தின் இலக்கியப் பாணி, அதிரடிப்படைப் பயிற்சி விபரங்களுடன் பொதுமக்கள் சேவை ஒளிபரப்பு மற்றும் பொழுதுபோக்கென்று பொதிசெய்யப்பட்ட நிலையில், அரசு விரோத சக்திகளின் தாக்குதலுக்கு இலகுவில் பலியாகக்கூடிய ஒன்றாக இருந்தது. 2000ஆம் ஆண்டளவில் இராணுவத்தை விளம்பரப்படுத்தல் பல்தேசிய விளம்பரக் கம்பனிகளின் கைக்குச் சென்றுவிட்டதோடு, இராணுவ ஆட்சேர்ப்புக்கான விளம்பரங்களும் தீவிரமான மறுசீரமைப்புக்குள்ளாயின. செய்திகளுக்கிடையிலும், பொழுதுபோக்கு அம்சங்களுக்கிடையிலும் காட்டப்படும் கவர்ச்சியான விளம்பரங்கள் தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் செய்மதி ஒலி-ஒளிபரப்புச் சாதனங்களின் விரிவாக்கத்துடன் நியமமாகிவிட்டன. கவன ஈர்ப்பு வாசகமும், முன்னேற்றகரமான புகைப்படவியலும், சிறப்பான பதிப்புத் திருத்தமும் பார்வையாளர்களின் இதயங்கவரும் அழகியற் படைப்பை வழங்குவதால், புதிய இராணுவ விளம்பரங்களால் உலகமயமாக்கலின் விளைவுகள் காரணமாக ஓரினப்படுத்தப்பட்ட இலக்கு நபர் மேலும் அடையாளம் காணக்கூடிய, தீவிரம் குறைந்த நியமம் ஆகின்றார்.

## சொர்க்கத்தில் சிங்கக்குட்டிகள்

2000ஆம் ஆண்டளவில், பலவந்த ஆட்சேர்ப்புக் கொள்கையொன்று இல்லாத நிலையில் இலங்கை இராணுவம் ஒரு தீவிரமான மனிதவலுப் பற்றாக்குறையை எதிர்நோக்கியதோடு, ஏற்கெனவே ஆட்சேர்ப்புச் செய்தோரைத் தக்கவைக்கமுடியாத நிலையும் ஏற்பட்டது. 19 வருடகால யுத்தத்தின்போது 2002இல் மாத்திரம் 35,000[25] பேரும் (மொத்த எண்ணிக்கையில் காற்பங்கு), 2003இல் அண்ணளவாக 58,000[26] பேரும் 2004இல் 60,000[27] பேரும் இராணுவத்தைக் கைவிட்டு விலகிச்சென்றுள்ளனர். 2000 ஏப்ரிலில் இலங்கை இராணுவம் அதன் மிகவும் மோசமான இராணுவத் தோல்வியைச் சந்தித்தது. அது உத்திரீதியான, ஒருகாலத்தில் எல்ரீரீஈ அமைப்பின் கோட்டையாகிய யாழ்ப்பாணத்துக்கான நுழைவாயிலான ஆனையிறவை இழக்க வேண்டியேற்பட்டது. 1999 டிசம்பரில் எல்ரீரீஈ அமைப்பு இத்தளத்தை நோக்கிய நகர்வை ஆரம்பித்தது. 2000 மார்ச் 26இல் தாக்குதலை ஆரம்பித்தது. 25,000 முதல் 30,000 வரையிலான இலங்கை இராணுவத்தினர் இதில் அகப்பட்டுக்கொண்டதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மோசமான கையறுநிலை காரணமாகத் துருப்பினரை மீட்டெடுப்பதற்கு இந்திய உதவி நாடப்பட்டது. இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த படைவீரர்கள் தண்ணீரின்றித் தாகத்தினால் மடிந்த கொடூரமான கதைகளும் கூறப்பட்டன. தளத்திலிருந்த முக்கியமான இராணுவத் தளபாடங்களை எல்ரீரீஈ அமைப்பு கைப்பற்றியது.[28] இந்த இராணுவத் தோல்விக்குப் பின்னர், யுத்தத்தின் பயங்கரம் குறித்த கதைகளையும், உயர் இராணுவ அதிகாரிகளின் ஊழல் குறித்த கதைகளையும் சுமந்துகொண்டு மீண்டும் சிவிலியன் வாழ்க்கையில் பிரவேசித்த விலகியோடுவோர் காரணமாக இராணுவத்தில் சேரும் விருப்பம் துரிதமாக அருகியது. ஆட்சேர்ப்புச் சபையில் 5 இராணுவ உத்தியோகத்தர்கள் இருந்தால், விண்ணப்பதாரிகள் இருவரே இருந்தனரென்ற கதை எங்கும் பரவியது. 2000 அக்டோபரில் சிக்காகோவிலுள்ள பல்தேசிய விளம்பரக் கம்பனியாகிய லியோ பேர்னட் வேர்ல்ட்வைடின் இலங்கைக் கிளையாகிய லியோ பேர்னட் சொலூஷன்ஸ் இன்கோப்பரேட்டட் இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு இயக்கமொன்றை நடாத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.[30] இக்கம்பனிக்கு 80 நாடுகளில் அண்ணளவாகத் தொண்ணூறு அலுவலகங்கள் உள்ளன. லியோ பேர்னட் சொலூஷன்ஸ் *'சிங்க பட்டவ் பாராதீசிய'* (சொர்க்கத்தில் சிங்கக்குட்டிகள்) விளம்பரப் பிரசார இயக்கத்தை ஆரம்பித்தது. அது 2000 நவம்பர் 01ஆந் திகதி முதல் 2001 ஜனவரி வரை தொலைக்காட்சியிலும், அச்சு ஊடகத்திலும் இடம்பெற்றது. அதன் மூன்று 30 செக்கன் தொலைக்காட்சி விளம்பரங்கள்குறித்து இப்பொழுது கவனம் செலுத்தலாம்:

(1) இராணுவத்தின் நீளக்காற்சட்டைகளையும், ரி-ஷேர்ட்டுக்களையும் அணிந்திருக்கும் போர்வீரர்கள் கூடைப்பந்து விளையாடுகின்றனர். கமெரா அவர்களின் கட்டான உடலைப் படம்பிடிக்கின்றது. மேற்கத்தைய ஆடையணிந்த மூன்று பெண்கள் தெருவால் கதைத்துக் கொண்டும், சிரித்துக் கொண்டும் நடந்து செல்கின்றனர். நீலநிற ஆடை அணிந்திருக்கும் பெண், போர்வீரன் ஒருவனைக் கண்டதும் இசை மாறுகின்றது. அவன் திரும்பி அவளின் கண்களைச் சந்தித்தபோது மற்றவர்களும் அவனுடன் வந்து V வடிவத்தில் நிற்கின்றனர். அவர்கள் அனைவரும் பெண்களைப் பார்த்துப் பெரிதாகப் புன்னகைபுரிகின்றனர். அந்த வேளையில் கவன ஈர்ப்பு வாசகம் திரையின் அடியில் தோன்றுகின்றது. "சிங்கக்குட்டிகள் சொர்க்கத்தில்." அதேவேளையில் ஒலிக்கும் குரல் இலங்கை இராணுவம் சிங்கக் குட்டிகளின் சொர்க்கம் என்று அறிவிக்கின்றது.

(2) இராணுவ ட்ரக் வாகனமொன்றில் படைவீரர்கள் செல்லுகின்றனர். கைகளைத் தட்டிப் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் செல்லுகின்றனர். ட்ரக் வண்டி உள்ளூர்ப் பெண்கள் குளித்து, ஆடைகளைக் கழுவும் ஒரு குளத்தைச் சுற்றிச் செல்கின்றது. திடீரென்று ட்ரக் ஒரு குழியினுள் விழுகின்றது. பெண்கள் சிரிக்கின்றனர். படைவீரர்கள் வெளியே பாய்ந்து வண்டியைக் குழியிலிருந்து வெளியே எடுக்கின்றனர். அவர்கள் நெகிழ்ச்சியான V வடிவில் நின்று, பெரிதாகப் புன்னகைபுரிந்து, தாம் பலசாலிகள் என்பதைக் காட்டுகின்றனர். "சிங்கக் குட்டிகளின் சொர்க்கம்" என்னும் வாசகம் திரையின் அடியில் தோன்றுகின்றது.

(3) இராணுவ முகாமொன்றில் இரவுவேளைப்பொழுது. முகாமின் வெளியே தீ மூட்டப்படுகிறது. படைவீரர்கள் பலவேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். ஒருவர் புத்தகம் வாசிக்கிறார், வேறோருவர் 'மவுத் ஓர்கன்' வாசிக்கின்றார், இன்னுமொருவர் கடிதம் எழுதுகிறார், ஒருவர் சப்பாத்துகளுக்கு 'பொலிஷ்' போடுகிறார், வேறுசிலர் 'காட்ஸ்' விளையாடுகின்றனர். திடீரென்று இசை மாறுகின்றது. முகாமின் தேடல் ஒளிக்கற்றை அருகிலுள்ள உயர்ந்த கட்டிடத்தின்மீது விழுகின்றது. இரண்டு இளம் பெண்கள் ஜன்னலூடாக வெளியே பார்த்துக்கொண்டு நிற்கின்றார்கள். அவர்கள் படைவீரர்களைப் பார்த்துப் புன்னகை புரிகின்றனர். V வடிவில் நிற்கும் படைவீரர்களும் அவர்களைப் பார்த்துப் பெரிதாகப் புன்னகை புரிகின்றனர். இக்காட்சி நிலையாக நிற்க, "சிங்கக் குட்டிகளின் சொர்க்கம்" என்னும் வாசகம் திரையின் அடியில் தோன்றுகின்றது.

இந்த விளம்பரங்கள் பயனுறுதிமிக்க கமெராக்களால், ஒளியூட்டல், பதிப்புத் திருத்தம், காட்சியமைப்பு மற்றும் ஒலிப்பாதை என்பவற்றோடு மிகத்திறமையாக வடிவமைக்கப் பட்டவையாகும். மனோநிலை மாற்றம், களம் தலைகீழாக மாறுதல் - அரிஸ்டோட்டில் *The Poetics* என்னும் ஆக்கத்தில் நாடகத்தின் இன்றியமையாத அம்சமென அழைத்த *Peripeteia* - மூன்று விளம்பரங்களுக்கும் உயிர்த்துடிப்பை வழங்குகின்றது. முதலாவது மற்றும் மூன்றாவது விளம்பரங்களில் அவை குறித்துரைப்பாக உயர்வாக்கப்பட்டுள்ளன வென்பதும் உண்மையாகும். ஒரு கவர்ச்சிகரமான கட்புலக்களம் பார்வையாளரைப் போர் வீரர்களின் பெருமைநிலைகுறித்த சிந்தனையோடு தன்னை மறந்து நிற்கவைக்கின்றது. இந்த விளம்பரங்களில் காட்டப்படுவதுபோன்ற இராணுவ உலகம் மூன்று அம்சங்களைத் தனது பண்பாகக் கொண்டுள்ளது. தோழமையுணர்வு, எதிர்பாராத சவால்களை ஏற்றுக் கொள்ளும் தயார்நிலை மற்றும் பலம் என்பவையே அவையாகும். தயாரிப்பாளரின் கண்ணோட்டத்தில் இந்த அம்சங்கள் அனைத்தையும் ஆண்மை (இருபால்) பாலியல் என்பது நிறைவாக்குகின்றது.

இந்த விளம்பரப் பிரசாரத்தை ஆரம்பிக்கும் முன்னர் பணி ஒதுக்கியளிக்கப்பட்ட லியோ பேர்னட் அணியினர் கொழும்பைச் சுற்றியுள்ள ஏழு இராணுவ முகாம்களுக்குத் தலா இருவரைக்கொண்ட ஏழு கோஷ்டியினரை அனுப்பியதன் மூலம் ஆய்வொன்றை மேற்கொண்டனர். இதுவரை சமர் அனுபவம் எதுவுமில்லாத புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டோரும், சமர் அனுபவங்களைக்கொண்ட முதிர்ச்சியடைந்த போர்வீரர்களும் நேர்முகம் காணப்பட்டனர். பிரசார முகாமையாளர் மைக்கல் ஹொல்சிங்கர், ‘கதை ஒரே விதமாக’ இருந்ததென்றும், களத்தெம்பு மிகவும் கீழ்நிலையிலிருந்ததென்றும் தெரிவித்தார். ஏழு முகாம்களில் ஒவ்வொன்றிலுமிருந்த 200 படைவீரர்களை இலக்குவைக்கும் வினாக் கொத்துக்களை இவ்வணியினர் விநியோகித்தனர். தெரிவுசெய்வதற்கு அவர்களுக்குக் கிடைத்த விடயங்கள் பின்வருமாறு: □நாம் மரணமடைவதற்குப் பயப்படவில்லை; சவாலொன்றை நாம் நேசிக்கின்றோம் - இராணுவம் உங்களை உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் மேலுஞ் சிறந்த நபராக்குகின்றது; நாம் சித்தரிக்கும் ஆண்மை மற்றும் எமது சீருடை என்பவை குறித்து நாம் பெருமைகொள்ளுகின்றோம். தோழமையுணர்வும், நட்பு முறைமையும் மகத்தானவையாகும். நாம் புதியவர்களைச் சந்திக்கின்றோம். அவர்களோடு நட்புப் பூணுகின்றோம். அவர்கள் எம்முடன் இரத்த உறவுச் சகோதரர்கள்போல் நெருக்கமாகின்றனர். நாம் போராடி எமது சிங்களத் தேசத்தைப் பாதுகாக்க விரும்புகின்றோம்.’ லியோ பேர்னட்டின் வடிவமைப்பு அணி தோழமையுணர்வு மற்றும் சவால் என்னும் கருப்பொருட்களில் கவனஞ்செலுத்தத் தீர்மானித்தது.

இராணுவத் தோல்விகள் மற்றும் விலகியோடல்கள் என்பவை குறித்துச் சிந்தித்த வடிவமைப்பு அணி, நேரடியாக யுத்தத்தைச் சித்தரிப்பது சாத்தியமில்லையென்று எண்ணியது. மறுபுறத்தில் தோழமையுணர்வு மற்றும் படையுணர்வு என்பவை எப்பொழுதுமே இராணுவ வாழ்க்கையிலும், ஆட்சேர்ப்பிலும் வலியுறுத்தப்படும் ஆக்கபூர்வமான விழுமியங்களாகும். அவை இராணுவ விளம்பரப்படுத்தல்களிலும் பொதுவாகப் பயன்படுத்தப்படுபவையாகும். உதாரணமாக, இந்திய இராணுவம் சம்பந்தமாக 2002இல் இடம்பெற்ற ஒரு விளம்பரம், முகாமொன்றில் இராணுவக் கைப்பிடிக் குவளைகளில் தேநீர்.்.கோப்பி அருந்தும் இராணுவ வீரர்களையும், 'பத்து இலட்சம் பேரைக்கொண்ட அமைப்பு, ஆயினும் அந்நியரென்று ஒருவருமில்லை' என்னும் கவன ஈர்ப்பு வாசகத்தையும் காண்பிப்பதாக அமைந்திருந்தது.[31] சகோதரத்துவ உணர்வு மற்றும் நட்புணர்வு என்பவை மாபெரும் தியாகக் கதைகளைச் சாத்தியமாக்கியுள்ளன. போர்வீரர்கள் பதுங்கு குழிகளிலும், காடுகளிலும் எதிரிகளின் குண்டுமழையின் மத்தியில் தமது தோழர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்குத் துணிச்சலாகச் செயலாற்றிய நிகழ்வுகள் கணக்கற்றவையாகும். யுத்தத்தின் பயங்கரம் மற்றும் அழிவைவிட இராணுவத்தினுள் நட்பு மற்றும் சகோதரத்துவ அம்சங்களை வலியுறுத்துவதன்மூலம் 'சிங்கக் குட்டிகள்' விளம்பரம் மோசமான காலங்களின் நல்ல பக்கத்துக்கு அனுகூலம் வழங்குகின்றது.

இக்குறிப்பிட்ட கதை கூறலின் தர்க்கம் சிங்கக் குட்டிகள் விளம்பரத்தில் வரும் படைவீரர்களுக்கான சவால் கைக்குண்டுகள், AK 47கள் மற்றும் ஸ்னைப்பர் துப்பாக்கிகளைக் கொண்டுதிரியும் போராளிகளிடமிருந்து வருவதில்லையென்பதும், அவை நளினமிக்க இளம் பெண்களிடமிருந்தே வருகின்றன வென்பதுமாகும். இதுவே *peripeteia* வின் தருணமாகும். படைவீரர்கள் பெண்களின் பார்வைக்கு ஆளாகும் தருணம் இருப்பினும், மறுபுற நகர்வு (பெண்களின் வெறித்த பார்வையில் படைவீரர்கள் பார்க்கப்படும் பொருட்களாகவிருத்தல்) மற்றும் உறுதிகூறல் (பெண்களைப் படைவீரர்கள் வெறித்துப் பார்க்கையில் அவர்கள் பார்க்கும் செயலைப் புரிவோராகவிருத்தல்) என்பவற்றை இரட்டை நிகழ்வாக எடுப்பதில் இராணுவத்தன்மைகொண்ட ஆண்மையே நடுநாயகமாக இடம்பிடிக்கின்றது. முதலாவது சந்தர்ப்பத்தில் பார்வையாளர் போர் வீரர்களை முழுக்கமுழுக்கப் பெண்களின் அகநிலை நோக்கினூடாகவே பார்க்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றார். இது ஒரு குறுகிய காலத்துக்கு மாத்திரம் இடம்பெறும் பார்வையாகும். விளம்பரத்தின் இறுதிக் காட்சியில் பெண்களைப் படைவீரர்கள் அதைவிட நீண்டநேரம் பார்ப்பது பார்வையாளரை ஒரு தந்தைவழி நிலைப்பாட்டுக்கு மீண்டும் கொண்டுசெல்லுகின்றது. அலன் பெல்ட்மன் பின்வருமாறு கூறுகின்றார்:

இராணுவவாதப் பார்வையும், யதார்த்தவாதப் பார்வையும் ஆணின் பார்வையுடன் ஒன்றாக அமையாவிடினும், வரலாற்றுரீதியாக அதனால் ஊடறுக்கப்படுகின்றன. மேற்கத்தைய ஆணின் பார்வை ஓவியத்திலும், திரைப்படத்திலும், ஆபாசப் படவியலிலும், சமூக விஞ்ஞானத்திலும், நாளாந்தக் கட்புலக் கலாசாரத்தை ஆக்கும் பார்வை வலைப் பின்னல்களிலும் பெண்மையைச் செயலற்றதும், விடயங்களைப் பெற்றுக்கொள்வதுமான நிலையிலேயே ஆக்கியமைக்கின்றது. பெண்மையென்பது நிலையானதும், சித்திரம் போன்றதும், சட்டகமிடப்பட்டதும், ஒதுக்கப்பட்டதுமாகும். ஆண்மையும், ஆண்மைப் பார்வையும் தன்னளவிலேயே துடிப்பான செயலைக் காட்டுவதாகும் (பெல்ட்மன் 2001, 61).

இக்கூற்று திரைப்படங்களில் கட்புல இன்பம் குறித்த மல்வேயின் நிலைப்பாட்டை எதிரொலிக்கையில் (மல்வே 1975 மற்றும் 1989, 14-27),[32] திரைப்படம் மற்றும் வழமைக்கு மாறான தத்துவவாதிகளினால் அது மீளாக்கம் செய்யப்படுகையில், இவர்கள் ஏனைய ஊடறுக்கும் அடையாளங்களை இனம், வர்க்கம், வழமைக்கு மாறான பாலியல் மற்றும் 'பிறழ்வான பார்வைநிலை'' (ஒயிசி 2006, 650-1),[33] என்பவற்றைத் தவிர்ப்பது அதன் ஈரின நியமவடிவ நிலையைக் காட்டுவதாகும். 'சிங்கக் குட்டிகளின்' விளம்பரங்களில் 'தன்னளவிலேயே துடிப்பான செயலாக விளங்கும்' ஆணின் பார்வையே விளம்பரத் தயாரிப்பாளர்களின் விருப்புக்குரிய குறியிலக்காகும். அது இராணுவ ஆண்மைத்தன்மை உறவிணைப்பைக் குறிப்பதே இதற்கான காரணமாகும். ''நாம் நட்புமுறைமையில், ஒரு பெண் படைவீரன் ஒருவனைப் பார்த்தால் அவர்கள் எவ்வாறு ஒன்றாகச் சேர்ந்துநின்று ஒற்றுமையையும், தோழமை உணர்வையும் சமிக்ஞையாக வெளிப்படுத்துகின்றனர் என்பதைக் காட்ட விரும்பினோம்'' என்று லியோ பேர்னட் பணிப்பாளர் ரணில் த சில்வா தெரிவித்தார்.[34] இவ்வாறாக ஆண்களின் உறவுப் பிணைப்பைக் காண்பிப்பது இராணுவத்தின் நிலவு நிலையை மீண்டும் நிலைநாட்டுவதாகும். கூட்டுநிலை என்பது தனிநபர் நிலையைவிடப் பெறுமதி கூடியதாக மதிக்கப்படுகின்றது. பெண்கள் பாலியற் படுத்தப்பட்டு, கட்டுடல்கொண்ட ஆண்களின் அரைவட்ட மனிதச்சங்கிலியால் சூழப்படுகின்றனர். ஆணின் பார்வையே தன்னளவில் அமைதியான ஆக்கிரமிப்புத் தன்மையையும், ஆண்மை வீரியத்தையும், உறுதியான தீர்மானத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்து, ஆணாதிக்கம் என்பது தன்னை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. அவர்களின் முகங்களில் புன்னகை இருந்தபோதிலும், இதுவே உண்மையாகும். பார்வையாளர் விளம்பரத்தின் இறுதிக்கட்டத்தில் அதன் பிரதான செய்தியை

நன்கு வகுத்தமைக்கும் சிங்கள இளைஞர்களைக் குறிக்கும் இனத்துவஞ்சார் கூற்றையும் (*சிங்ஹ பட்டவ்*, சிங்கக் குட்டி) கவனிக்கிறார்.[35] இவ்வாறாகப் பெண்கள் தம்மைப் பார்த்து மெச்சவேண்டுமென்று விருப்புக்கொண்டுள்ள ஆண் பார்வையாளருக்கு விளம்பரங்கள் இராணுவத்தில் சேர்வதன் மூலமும், உயர்வான ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வைப் பெறுவதன் மூலமும் இதை ஈட்டிக்கொள்ளலாம் என்று தெரிவிக்கின்றன. இந்த விளம்பரங்களில் கருதப்படும் பால்நிலை என்பது விருப்பையும், பெறுமதியையும் ஒன்றிணைக்கின்றது (இராஜகோபால் 1999, 57).

இராணுவ மற்றும் யுத்தச் சூழமைவில் இத்தகைய ஆண்மைப்படுத்தப்பட்ட (ஈரின) பாலியல், ஒருவகையான பெண்களைப் பாலியற்படுத்தல் என்பதோடு, யுத்தகாலத்தில் பெண்களுக்கு எதிரான கொடுமையான வன்செயலாக விளங்கிய விடயத்தை இந்த விளம்பரங்கள் ஆசீர்வாதமாகக் காட்டுகின்றன. பெண்களான கல்விப் புலமையாளர்கள் இராணுவ மயப்படுத்தலுக்கும், பெண்களுக்கெதிரான வன்செயலுக்குமிடையிலான இணைப்புறவுகளை மிகவும் நம்பத்தக்க முறையில் தெளிவாக நிலைநாட்டியுள்ளனர். ஏற்கெனவே பெண்கள் மீது இடம்பெறும் தொடர் வன்செயல் நிகழ்வுகள் யுத்த காலத்தில் பயங்கரமான விஸ்தார வடிவங்களை எடுக்கின்றன. இலங்கையில் யுத்த காலத்தின்போது 'பகைவர்களான' பெண்களைத் தீவிரமாகப் பாலியற்படுத்தல் மற்றும் பெண்களுக்கெதிரான ஆண்களின் வன்செயலுக்கு அடிப்படையான துடிப்பான பெண் வெறுப்பு என்பவற்றைக் காட்டும் முறையில் தமிழ்ப் பெண்கள் எவ்வாறு பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர் என்பதை யஸ்மின் தம்பையா சுட்டிக் காட்டுகின்றார் (தம்பையா 2002)[36]. சார்லட் பன்ச் இராணுவத் தளங்களைச் சுற்றி இடம்பெறும் பாலியல் வல்லுறவு மற்றும் இல்லத்து வன்செயல் குறித்த அதிகரித்துவரும் சம்பவங்களைச் சுட்டிக் காட்டுகின்றார். ஒக்கினாவாவிலுள்ள அமெரிக்க இராணுவத்தளம் ஓர் உதாரணமாகும் (பன்ச் 2004, 41). ரிட்டு மேனன் யுத்த காலங்களில் பெண்களுக் கெதிரான வன்செயல்களுக்கு அங்கீகாரம் வழங்குவதும், அவர்களின் உடல்கள், இல்லங்கள் மற்றும் மனித கௌரவத்தின்மீது இடம்பெறும் மீறல்கள் சம்பந்தமாக அவர்கள் அமைதியாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்துபவையுமான ஒரு பரந்த வீச்சிலான தந்தைவழிக் கருத்தொருமிப்புக்கு எமது கவனத்தை ஈர்க்கின்றார். இவ்வாறாகப் பெண்கள் ஓர் இரட்டைப்பலிக்கடாத் தன்மைக்கு உள்ளாகின்றனர். அவர்களின் மௌனம் ஓர் அவமான உணர்வு மற்றும் அவப்பெயர் என்பவற்றோடு இணைந்துகொள்ளுகின்றது. இது தன்னளவில் மீறலைப்போன்றே பாரியதும், நீடித்து நிலைப்பதுமாகும் (மேனன் 2004, 58). எவ்வாறாயினும், நோக்கமின்றி இடம்பெறும்வகையில் 'சொர்க்கத்தில் சிங்கக் குட்டிகள்' இயக்கம் போன்ற விளம்பரங்கள் இராணுவமயப்படுத்தப்பட்ட மற்றும்

பால்நிலை வன்செயல்களுக்கிடையிலான உறவிணைப்பையும், ஏற்கெனவேயுள்ள பெண்களுக் கெதிரான பாலியல் வன்செயல் வடிவங்களுக்கும், இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஆக்கிரமிப்புகளின்போது இடம்பெறும் வன்செயல்களுக்குமிடையிலான உறவிணைப்பையும் மீண்டும் நிலைநாட்டுகின்றன.

லியோ பேர்னட் பெண்களுக்கெதிரான ஆண்களின் பாலியல் ஆக்கிரமிப்பை நியமப்படுத்துவது தமது நோக்கமல்லவென்று தெரிவித்தார். விளம்பர இயக்க முகாமையாளரான மைக்கல் ஹொல்சிங்கர் இந்த வலியுறுத்தல் வேண்டுமென்று இடம்பெற்ற ஒன்றல்லவென்றும், இது விளம்பரத்தின் இறுதியில் அழகுக்கலைப் பெறுமதியை அதிகரிப்பதற்காக ஆண்களை ஏ வடிவத்தில் நிற்கவைப்பதற்கு (பெண்களைத் தப்பிக்கமுடியாதவாறு சிறைப்படுத்துவதற்கு) கலைப் நெறியாளுநர் எடுத்த தீர்மானத்தின் விளைவென்றும் தெரிவித்தார். பெண்ணிலைவாதிகளிடமிருந்து ஒருசில எதிர்ப்புக் கடிதங்கள் வந்தனவென்றும், ஒருசிலருக்குக் கருத்து மோதல்களை இது உருவாக்கினாலும் ஏனையோர் விடயத்தில் அப்படியல்லவென்றும், தமக்குக் கருத்து மோதல் விருப்பமான விடயமென்றும், அது தமது பிரசார இயக்கத்துக்குக் கருத்தை ஈர்க்கின்றதென்றும் அவர் முடிவாகக் கூறினார்.[37] நேரடியான அர்த்தம் மற்றும் மறைமுக அர்த்தங்கள்குறித்த ரோலண்ட் பார்த்தின் நுண்ணறிவுகள் இங்கு பயனுள்ளவையாகும். இந்த விளம்பரங்களில் ஆண்மைப்படுத்தப்படும் பாலியல் வீரியம் யுத்த காலங்களில் தேவைப்படும் ஏனைய பண்புகளாகிய ஒருமைப்பாடு, தயார்நிலை மற்றும் பலம் என்பவற்றை அடையாளப்படுத்துவதால், அது இராணுவவாதத்தின் ஏற்றுக்கொள்ளக்கூடிய பகுதியாகக் காட்டப்படுகின்றது. அடையாளப்படுத்தலின் முதல் மட்டத்தில் பெண்களைப் பார்க்கும் ஆண் படைவீரர்கள் இவ்வடையாளத்தை ஆக்கினால் (நேரடிக்குறிப்பு, விபரிப்பு), இரண்டாவது மட்டத்தில் அவர்கள் குறிப்போராக ஆகின்றனர். ஏனெனில் அவர்களின் நடத்தையும், அங்க அசைவுகளும் உற்பத்திப்பொருளின் (இராணுவத்தின்) பண்புகளாக வியாக்கியானம் செய்யப்படுகின்றன. (மறைமுக அர்த்தப்படுத்தல்). பார்தெஸ் இந்த நீளுரையாடல் பிரதேசத்தை ஒரு கர்ணபரம்பரைக் கதை வடிவமென்று அழைத்தார். அடையாளப்படுத்தலின் இந்த இரண்டாவது கட்டத்தில் தத்துவார்த்தத்தைத் நிர்மாணிப்பது மிகவும் முக்கியமானதென்பதே இதற்கான காரணமாகும் (பார்தெஸ் 1973; ராமமூர்த்தி 1997, 174). இராணுவவாதம் (ஈரின) பாலியல் வீரியம் என்பதுகுறித்த பழைய புனைகதை; தத்துவார்த்தம் மிகவும் ஊறிப்பரவிய நிலையிலிருப்பதால் 'சிங்கக் குட்டிகள்" வடிவமைப்பு அணி (முழுக்கமுழுக்க ஆண்களைக் கொண்டது) விளம்பரங்களுக்கெதிராகப் பெண்ணிலைவாதிகள் கருத்து வெளியிட்டதால் ஒருபுறம் ஆச்சரியமடைந்தது. மறுபுறத்தில், ஹொல்சிங்கர் இந்த ஆட்சேபத்தை நிராகரித்தமை உலகளாவியரீதியில் பரிபூரணமான இராணுவ வீரன் மற்றும் அவனது உடல்

என்பவற்றைத் துடிப்பாக நிர்மாணிக்கும் திரைப்படங்கள், புகைப்படங்கள் மற்றும் விளம்பரங்களின் சுவடிக் கூடங்களிலிருந்து பயன்பெற்ற ஒன்றாகும். இந்த உடல் உறுதியாகவே ஈரினப் பாலியல் தன்மை கொண்டதாகும். ஓரின வெறுப்புத்தன்மை என்பது ஒருவகையான 'கட்டமைப்புச்சார் பிரசன்னமின்மை' ஆகும். யுத்தம் சம்பந்தமான காட்சிகளில், புகைப்படங்களிலாயினுஞ் சரி, அல்லது திரைப படங்களிலாயினுஞ் சரி, ஆண்கள் அழுதல், ஆறுதல் கூறுதல், அங்கலாய்ப்பு மற்றும் பயம்குறித்த உணர்வுகள் (பெண்மையாக்கப்பட்ட.்.தாய்வழி உணர்வுகளும், செயற்பாடுகளும்) போன்றவற்றைக் காட்டுவதற்கு அனுமதிக்கப்படும்போது கூட, இக்காட்சிகள் ஆண்களின் ஈரினப் பாலியல் விருப்புகள் மற்றும் காதல் ஆர்வங்கள்குறித்த விடயங்களால் தவிர்க்கமுடியாதபடி பண்பு ஊட்டப்படுகின்றன (எபர்வெயின் 2001, 149-66).

சிங்கக் குட்டிகளை விளம்பரங்களில் காட்டும் முறை இன்றைய உலகமயமாக்கல் சக்திகளால் வடிவமைக்கப்படும் காட்சிகள்குறித்த வேறு ஆக்கியமைத்தல் தன்மைகளையும் சுட்டுகின்றது. இச்சக்திகள் இராணுவவாத, பால்நிலை, வர்க்க மற்றும் இளைஞர் கலாசாரத்தை ஒன்றாக்கும் 'வலுவான' உறவிணைப்புக்களையும் கொண்டுள்ளன. தொலைக்காட்சி மற்றும் அச்சு ஊடக விளம்பரங்களில் இளைஞர்களாகிய இராணுவ வீரர்கள் பல்வேறுவிதமாக ஆடை அணிந்துள்ளனர்: இராணுவ காப்புநிறச் சீருடை, காப்புநிறக் காற்சட்டைகளும் பச்சைநிற ரி-சேர்ட்டுக்களும், சிவிலியன் உடைகள், விளையாட்டு ஆடைகள் போன்றவை. அவர்கள் துடிப்பாகச் செயற்படுபவர்களாகத் தோற்றமளிக்கின்றனர். பெண்களும், அவர்கள் நகர்ப்புறத்தவராக/மேற்கத்தேயோராக அல்லது கிராமத்தவர்களாக/உள்ளூரைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் மிகவும் நேர்த்தியாக ஆடை அணிந்துள்ளனர். ஆண்களும், பெண்களும் நல்ல தோற்றமுள்ளவர்களாகக் காணப்படுவது சம்பந்தமான இராணுவ முன்நிகழ்வுகள் இதற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளன. இரண்டாவது உலக மகா யுத்தக் காலத்தில் பிரித்தானியாவில் 'அழகாயிருப்பது கடமை' என்னும் இலட்சிய வாசகம் வழக்கிலிருந்தது. அக்காலத்தில் அழகும், ஆடைகளின் நேர்த்தியும் யுத்த காலத்திலான தேசாபிமானத்தை அடையாளம் காட்டுபவையாக விளங்கின (கேர்க்ஹம் 1996, அத். 10). தோழமை உணர்வைப்போன்றே ஆடையும் வர்க்கங்களைச் சமப்படுத்தும் ஒன்றாகக் கணிக்கப் படுகின்றது. இராணுவங்களில் படைவீரர்களாகவும், கப்பல்களில் பணியாட்களாகவும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஆண்கள் மரபுரீதியாகத் தொழிலாளர் வர்க்கத்திலிருந்தே வந்துள்ளனர். உத்தியோகத்தர்களாகப் பணியாற்றும் சலுகைபெற்ற வர்க்கத்திலிருந்து வரும் ஆண்களைப் பொறுத்தவரையில் படைவீரர் மத்தியில் வர்க்கவேறுபாடுகளைக் குறைப்பதற்கு உருவாக்கப்படும் ஆண்மை குறித்த பொதுவான பிணைப்புக்கள்

சம்பந்தமான தோழமை உணர்வினால் அவர்கள் ஒன்றிணைக்கப்படுகின்றனர் (என்லோ 1998, 531). பிரதானமாக காப்புநிறம் உள்ளடங்கலாக உடையின் ஒருசீர்த்தன்மை யுத்த களத்தில் இத்தகைய வேறுபாடுகளைக் குறைப்பதற்கு உதவுகின்றது. அதேவேளையில் இராணுவப் பதக்கங்கள், ரிப்பன்கள் மற்றும் இலச்சினைகள் வைபவரீதியான ஆடைகளோடு யுத்த களத்துக்கப்பால் அணியப்படுவது, பதவிநிலைகளையும்; அதிகாரப் படிநிலைகளையும் குறிப்பதோடு, அவற்றைப் பேணவும் செய்கின்றன என்பதும் உண்மையாகும். ஆயினும் சிங்கக் குட்டிகளான படைவீரர்களால் அணியப்படும் ஆடைகளுக்கே நான் திரும்ப விரும்புகின்றேன். அது இளைஞர் கலாசாரத்தை வடிவமைக்கும் ஓர் இராணுவ-சிவிலியன் நவநாகரிகத்தைக் காட்டுவதே இதற்கான காரணமாகும்.

நுகர்வுப் பாங்குகள் குறித்த கலந்துரையாடல்களில், பிரத்தியேகமாக உலகமயமாக்கல் மேலும் அதிகரித்த நுகர்வாளர் தெரிவுகளை வழங்குகின்றது என்னும் கருத்தில் ஒரு முக்கியமான எச்சரிக்கைக் குறிப்பு, நுகர்வாளர்மீது திணிக்கப்படும் எண்ணிலடங்கா மட்டுப்பாடுகளுக்கு எமது கவனத்தை ஈர்க்கின்றது. இவை நுகர்வைக் கட்டுப்படுத்தும் பொருளாதார, இனத்துவ, குடும்பம்சார் அல்லது பால்நிலைசார் மட்டுப்பாடுகளாக இருக்கலாம் (லெஸ்கோவிஜ் 2003, 84). காத் உவெஸ்டன் கூறுவது போன்று, "பொருளாயத உலகம் ஒன்றில் உடல்கள்மீது அடையாளங்கள் வரையப்படுவது செயலற்ற நிலையிலல்ல. அவை மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வீச்சிலான விருப்புத் தெரிவுகளிலிருந்து பொருளாயத கலாசாரத்தைத் தெரிவுசெய்து விடயங்களை மீளமைப்பவர்களால் வரையப்படுகின்றன. இவை வரலாற்றுரீதியான அபிவிருத்திகளால் வடிவமைக்கப்படும் கற்பனைக் கோலங்களின் பிரகாரம் காட்சிக்கு வைக்கப்படுகின்றன" (உவெஸ்டன் 2002, 76-7). படைவீரர்களின் அவதானித்த போக்குகளின் வெளிப்பாடாக அமையும் ஓரினத்தன்மை அவர்கள் ஒரேவிதமான விளையாட்டு ஆடைகளை அணிதல் அல்லது சிங்கக் குட்டிகள் அச்சு ஊடக விளம்பரங்களில் காட்சியளிப்பதுபோல் நவநாகரிகமான குளுகுளு கண்ணாடிகளை இராணுவ ஷேர்ட்டின் கழுத்துப் பக்கத்தில் சொருகி வைத்திருத்தல் என்பவை இலங்கையில் இன்று இளைஞர் கலாசாரத்தையும், நுகர்வாளர் போக்கையும் வடிவமைக்கும் ஒரு குறித்துரைத்த வரலாற்று, பொருளாயத, உலகியல்சார் தன்மையைப் பொருளாதார, பெருந்தொகை உற்பத்தி மற்றும் சில்லறை விற்பனைக் கட்டமைப்புகளில் அடையாளப்படுத்துவதாகும். இவ்வாறு கருமப்படுகையில் அவை ஓர் இராணுவவாத ஒழுக்கவியலுக்கு வலுவூட்டுகின்றன.

சுதந்திர வர்த்தக வலயங்களில் ஆடைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டமையும், ஆடை வர்த்தகம் வளர்ச்சியுற்றதும், கட்டுபடியான விலைகளில் அசல் மற்றும் போலியான வடிவமைப்பாளர் உடைகளை வாங்கக்கூடிய சூழலும்,[38]

உடைகள், தொப்பிகள் மற்றும் முதுகில் காவிச்செல்லும் பைகளில் காப்புநிற வடிவமைப்புகளும் இலங்கையில் 1980களிலும், 90களிலும் இளைஞர்களும், யுவதிகளும் சிங்கக் குட்டிகள் விளம்பரங்களில் அணியப்படும் உடைகளைத் தெரிவுசெய்யக்கூடிய நிலையை உருவாக்கின. இராணுவப் பொருட்கள், காக்கித்துணி, சப்பாத்துக்கள், உடைகள் போன்றவை உள்ளூர் சிவிலியன் மக்களுக்குக் கிடைக்கக்கூடியதாகவிருக்கும் நிலையை, உலக மகா யுத்தக் காலங்களிலிருந்து இராணுவம் முகாமிட்டுள்ள பட்டினங்களில் இராணுவ மற்றும் கடற்படைக் கடைகளில் சில்லறை வியாபாரம் குறித்த பழைய வரலாற்றுடன் ஒப்பிடலாம். ஆயினும், 90'களில் இலங்கையில் பல்தேசிய ஆடைக் கைத்தொழில் உள்ளூர்ப் பட்டினங்களில் ஆடைக் கடைகளையும், பெரிய நகரங்களில் நவநாகரிக ஆடைச் சில்லறை விற்பனையாளர்களையும் நிதர்சனமாக்கி, இந்த வகையான ஆடைகளையும், அவைபோன்ற ஏனையவற்றையும் சகல வர்க்கத்தினருக்கும், இராணுவப் பட்டினங்களுக்கு அப்பால் வசிப்போருக்கும் பரந்தளவில் கிடைக்கச் செய்துள்ளது. லியோ பேர்னட் படைவீரர்களை விளம்பரத்தில் காண்பிப்பதில் இப்பொருளாயதச் சூழமைவையே மீண்டும் பயன்படுத்தியுள்ளது. பெருந்தொகையில் இந்த ஆடைகள் உற்பத்தி செய்யப்படுவதில் பெண்களின் உழைப்புக்குறித்து திரையில் எதுவுமே தெரிவிக்கப்படுவதில்லை. இந்த யுத்தம் குறித்த தசாப்தங்களில் உலகமயமாக்கல் மற்றும் இராணுவ மயமாக்கல்குறித்த இரட்டைக் கட்டமைப்புகளின் விளை பொருட்களான 'ஆடைப் பெண்களும், இராணுவப் பையன்களும்' இலங்கைப் பொருளாதாரத்தில் மிகவும் சிரமப்பட்டு மேலே சென்றுள்ளனர் (அபேசேகர 2005c, 23-9). இவ்வாறாக லியோ பேர்னட் மீள் வடிவமைப்பதற்கும், அவற்றை அரவிந்த் ராஜகோபால் கூறுகின்றவாறு உலகமயமாக்கலின் நடுநாயகப் பணியாக 'மூலதனம் மற்றும் படிமங்கள் குறித்த மேலும் பரந்த சுற்றுக்களில்' ஒன்றிணைப்பதற்கும் உள்ளூர் விடயங்களின் பொருத்தமான அம்சங்களைத் தெரிவு செய்துள்ளது (ராஜகோபால் 1999, 63). சிங்கக் குட்டிகள் என்னும் உவமேயத்தைப் பயன்படுத்தியதன்மூலம் இந்த விளம்பரங்கள தேசத்தையும், இலங்கை இராணுவத்தையும் அன்றாட இளைஞர் நுகர்வுக் கலாசாரத்தினுள் தள்ளி, இராணுவவாதத்தை உலகமயப் படுத்தப்பட்ட பொருளாதார-கலாசாரப் பின்னணியுள் ஓர் உற்பத்திப்பொருளாக முன்வைத்துள்ளன. இது உலகளாவிய சந்தையின் உட்கிடக்கையான ஆண்மைத் தன்மையுள் பொருந்தியமைவதாகும். 'சந்தைகள்', 'தனிநபர்கள்' மற்றும் 'தெரிவு' போன்ற மொழிப்பதங்கள் பால்நிலை சாராதவைபோலத் தோன்றினாலும், அனேகமான தொழில் முயற்சியாளர்களும், வியாபாரத் தொழில்நிறைவேற்றுப் பதவியினரும், பல்தேசியக் கம்பனிகளின் பணிப்பாளர்களும் (இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற தேசங்களில் இவர்களுக்கு ஓர் இராணுவப் பின்னணி உள்ளது) இவர்களோடு

கொடுக்கல்வாங்கல் செய்யும் அரசியல், இராணுவத் தலைவர்களும் 'ஓர் உலகளாவிய அளவிலான, புதிய ஆதிக்கவாத ஆண்மையை' உருவாக்குகின்றனர் (கொன்னெல் 2002, 25-6; என்லோ 2004, 66). சிங்கக் குட்டிகள் விளம்பரங்களில் வெளிப்படையாகவே இராணுவமயப்படுத்தப்பட்ட ஆண்மை பெரிதாகப் புகழப்படுவதும், பெண்களுக்கெதிரான அவற்றின் உட்கிடையான பாலியல் ஆக்கிரமிப்பும், அவற்றில் காணப்படும் பால்நிலை அடிப்படையிலான வன்செயல் குறித்துத் தெரிவிக்கப்படும் கண்டனங்களை லியோ பேர்னட் உதாசீனம் செய்வதும், இந்த விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்யவும், அச்சு ஊடகங்களில் வெளிவரவும் அனுமதித்த இலங்கை இராணுவத்தின் செயலும் இன்று இந்த ஆண்மை, இராணுவவாதம் மற்றும் உலகமயமாக்கல் என்பவற்றையே வலுவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

## கருத்தொருமிப்பு ஜனசமூகங்கள்

இராணுவவாத வாதமுறைகளும், அதன் நுகர்வு சம்பந்தமான இயக்கவியலும் யுத்தத்துக்கு மாற்றீடாக அனேக சந்தர்ப்பங்களில் மிகவும் அதிக வகையில் எளிமைப்படுத்தப்பட்ட சமாதானம் குறித்துப் போதிப்பது என்ன? வோல்டர் பெஞ்ஜமின் கூறியவாறு, சமாதானமும் அதன் சொந்த வடிவங்களிலான 'வன்செயல்களைக்' கொண்டுள்ளது. ஏனெனில் அது இராணுவ வன்செயலுக்குப் பின்னர் ஒரு புதிய 'சட்டகத்தின்'கீழ், புதிய நிலைமைகளுக்கு அங்கீகாரமளிக்கும் யுத்தத்தோடு தொடர்புள்ள ஒரு விடயமாகும் (பெஞ்ஜமின் 1978, 283). இந்தச் சமாதானமும், அதை நாளாந்தம் நிலைநாட்டுவதற்கு அவசியமான வெளிப்படையான மற்றும் மறைவான பலாத்காரமும் எவ்வாறு வெளிப்பாடடைகின்றன? இராணுவவாதத்தைப் போலவே, அதைச் சந்தைப் படுத்துவதில் பிரித்தெடுக்கப்படுவதும், மூடிமறைக்கப்படுவதும் என்ன? இந்த நூல் காட்டுகின்றவாறு, இலங்கையில் சமாதானத்துக்கும், அதைக் கட்டியெழுப்புவதற்குமான பல அணுகுமுறைகள் இருந்துள்ளன. அவை அனைத்திலும் பல்தேசியப் பொருளாதாரங்களினதும், பரிவர்த்தனைகளினதும் தாக்கங்கள் தெளிவானவையாகும். இலங்கையில் சமாதானத்துக்காகப் பணியாற்றும் பெண்களின் குழுக்கள் பல்தேசியப் பெண்ணிலைவாத வலையமைப்புகளிடமிருந்தும், பால்நிலை அடிப்படையிலான கொடையாளர்களிடமிருந்தும் நிதி ஆதரவையும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் தொகுதியிலிருந்து ஊக்கத்தையும் பெற்றுக்கொள்கின்றன. மட்டக்களப்பில் இயங்கும் Butterfly Peace Garden ஸ்தாபகர்கள் போன்ற சமாதானப் போதனைக் குழுக்கள் (அத்தியாயம் 4) கொடையாளர் நிதிகளையும், பல்தேசிய மத[39] மற்றும் பொதுநிலையாளர் அமைப்புகளின் நிதி ஆதரவையும்,

உலகம் முழுவதிலுமுள்ள மோதல் வலயங்களிலிருந்து மூலவளவியலாளர்களையும், சிகிச்சை முறைகளையும் பெற்றுள்ளன. கலைஞர்களும், நாடகாசிரியர்களும், திரைப்படத் தயாரிப்பாளர்களும் ஏதோவொரு வகையில் ஒப்புரவு மற்றும் சமாதானம்குறித்த இலக்கிய நடை, வெளிப்படுத்தற்பாணி மற்றும் ஒருமைப்பாடுகளிலிருந்து உணர்வூக்கம் பெற்றுள்ளனர். இதுவரையில் இந்த அத்தியாயத்தின் வலுவான அழுத்தம் உலகளாவிய மூலதனத்துக்கும், தேசியப் பாதுகாப்புக்குமிடையிலான தீவிர உறவிணைப்பின்மீதே உள்ளது என்பதால், இப்பொழுது நான் இலங்கையில் சமாதானத்துக்கான யாக்கத்துறையின் அணுகுமுறைமீது கவனம் செலுத்தவுள்ளேன்.

எமது அன்றாடப் பேச்சில் இராணுவவாதச் சொற்பதங்கள் நிறைந்திருப்பதுபோலவே, சமாதானம் குறித்த இலக்கணமும் அனேக சந்தர்ப்பங்களில் யுத்தம் குறித்த சொற்பதங்களை எதிரொலிக்கின்றது. "சமாதானத்துக்காகப் போராடும் பெண்கள்", "கண்ணுக்குக் கண் என்றரீதியில் சென்றால் முழு உலகமும் குருடர் உலகமாகும்",[40] "யுத்தம்செய்யும் எந்த விடயத்தையும் சமாதானம் மேலும் சிறந்தமுறையில் செய்யும்" மற்றும் "தற்காப்புச் சமாதானத்தை முயற்சிசெய்வோம்" போன்ற சுலோகங்கள் உலகம் முழுவதும் யுத்தத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் தந்திரோபாயங்கள் பற்றிய குறிப்புகள் நடுநாயகமாக விளங்கும் அணிதிரட்டல் கோஷங்களாகும். சமாதானச் சுலோகங்கள் பயன்படுத்தும் யுத்தம்குறித்த விடயங்கள் மிகச்சிறந்த சிருஷ்டிச் செயற்பாடாக, யுத்தத்தின் மொழியை அஹிம்சை மற்றும் சமாதானத்துக்கான ஒன்றாக ஆக்கபூர்வமான முறையில் குடைகவிழ்க்கலாம். 2002 மார்ச்சில் குஜராத்தில் முஸ்லிம்களுக்கெதிராக இடம்பெற்ற திட்டமிட்ட படுகொலைகளைக் கண்டிக்கும் நடைபவனியில் டெல்லிப் பாடசாலைச் சிறுவர்கள் தலையில் அணிந்திருந்த பட்டிகள் இதற்கான வலுவான உதாரணமாகும். இப்பட்டிகள் வன்செயல்களில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்தவர்கள் அணிந்திருந்த தலைப்பட்டிகளை ஒத்தவையாகும். ஆயினும் அவை மஞ்சள் நிறத்துக்குப் பதிலாக வெண்மையாகக் காட்சியளித்ததோடு, அவற்றின்மீது வன்செயல் மற்றும் வெறுப்புணர்வுக்குப் பதிலாகச் சமாதானச் சுலோகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.[41] வன்செயலின் உப-அங்கமாக ஆடையைக் காட்டும் தலைப்பட்டியை வேண்டுமென்றே அதன் எதிர்க்கருத்தை வெளிப்படுத்துவதற்குத் தெரிவுசெய்து தமதாக்கிக்கொண்டது இங்குள்ள சிருஷ்டிகரத் தொழிற்பாடாகும். இது அடையாளங்களின் அர்த்தங்கள் எப்பொழுதும் சூழ்நிலைகளைப் பொறுத்தவை என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. சமுதாயத்தில் இராணுவவாத தத்துவார்த்தத்தை அங்கீகரிக்கப்பட்ட பழக்கமாக மாற்றும் இராணுவமயப்படுத்தல் செயல்முறை மிகப் பலம்வாய்ந்த ஒன்றென்பதால் இராணுவச் சின்னங்களின் ஆழமான அர்த்தத்தைக் கேள்விக்குட்படுத்தாது,

சமாதானச் சுலோகங்கள் அவற்றைத் தொடர்ந்து முன்கொண்டுசெல்வதும் சாத்தியமாகும். உதாரணமாக Sri Lanka First அமைப்பின் அனுசரணையோடு 2002 மார்ச் - மே காலப்பகுதியில் ஆங்கில மொழி நாளேடுகளில் வெளிவந்த ஒரு தொடரான விளம்பரங்களைக் குறிப்பிடலாம்.

Sri Lanka First என்பது பிரசித்திபெற்ற இலங்கை யாக்கத் தொழில் முயற்சிகளைக்கொண்ட ஒரு குழுவாகும். அதன் 2002 விளம்பரப் பிரசார இயக்கம் பிரசித்திமிக்க, பல்தேசிய விளம்பரக் கம்பனியாகிய கிராண்ட் மக்கான்-எரிக்சனால் ஜப்பானிய மற்றும் கனேடிய (CIDA) கொடையாளர் நிதியுதவியுடன் வடிவமைக்கப்பட்டதாகும். இந்த விளம்பரத் தொடர்கள் யுத்தம் காரணமாக இல்லாதுபோன மனித உரிமைகளின் பல்வேறு அம்சங்கள், கல்விபெறும் உரிமை, சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பந்தமான உரிமை, பெண்கள் தமது வாழ்வை மீளமைத்துக்கொள்வதற்கான உரிமை, சிறுவர்களுக்குக் குழந்தைப் பருவத்தை அனுபவிப்பதற்கான உரிமை என்பவற்றை வலியுறுத்தின. வன்செயல் மற்றும் யுத்தத்துக்கு மாற்றீடாக, தற்போது 'விடுதலையின் கற்பனாவளம்மிக்க அவகாச வாய்ப்பை ஆதிக்கம் செலுத்தும்' (கென்னடி 2004, 9) உரிமைகளின் மொழி இங்கு பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக, தொலைந்துபோன ஒரு குழந்தைப் பருவம் குறித்த விளம்பரம் 'நிரந்தர அமைதியென்பதன் கருத்து எமது சிறுவர்களுக்கான ஒரு குழந்தைப் பருவத்தை உறுதிசெய்தல்' என்னும் கவன ஈர்ப்பு வாசகத்துடன் கைகளை நீட்டி விளையாடும் இரு சிறுமிகளைச் சித்தரித்தது. இது வளர்ந்தோர் உணர்வில், நீண்டுசெல்லும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவமயப்படுத்தப்பட்ட சமுதாயமொன்று சிறுவரைப் பொறுத்தவரையில் செலுத்தவேண்டியுள்ள விலை சம்பந்தமான ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. ஆயினும் லோறன் பேர்லன்ற் கூறுவதுபோன்று, சமாதானம் குறிக்கும் ஒரு வரன்முறையான 'நல்வாழ்வு'குறித்து வழங்கப்படும் இந்த வாக்குறுதியை ஆய்வுசெய்வது அவசியமாகும் (பேர்லன்ற் 2006). இது சமாதானம்குறித்த செயற்பாடுகளையோ, யுத்தத்தின் தீய விளைவுகளுக்கெதிரான நடவடிக்கைகளையோ எதிர்ப்பதாகாது. ஆனால், இது 'நல்வாழ்வு' என்பதும் வேதனையற்றதல்லவென்பதையும், எட்வார்ட் சாயிட் கூறியவாறு "ஒரு சமரின் மத்தியிலும் ஒருவர் தெளிவாகவே வேறொரு பக்கத்துக்கெதிராக ஒரு பக்கத்தில் நிற்கையில், விமர்சனம் இருத்தல்வேண்டும். வாத விடயங்கள், பிரச்சினைகள், விழுமியங்கள் மற்றும் காப்பாற்றப்படவேண்டிய உயிர்கள்கூட இருக்கவேண்டுமெனில் விமர்சனரீதியான உணர்வு இருத்தல்வேண்டுமென்பதே இதற்கான காரணமாகும்.' (சாயிட் 1984, 28). கீழே விபரிக்கப்படும் Sri Lanka First அமைப்பின் இரு விளம்பரங்களின் பகுப்பாய்வும், யுத்தம் மற்றும் சமாதானம் சம்பந்தமான பல இலங்கை யாக்க யதார்த்தத் தனியமைப்புக்களின் நிலைப்பாடும் இந்த விடயத்தை மனதில் கொண்டே இந்த அத்தியாயத்தில் இடம்பிடிக்கின்றன.

இச்சூழமைவில், யாக்கத் துறையினால் வரைவிலக்கணப்படுத்தப்படும் இச்சமாதானம் எத்தகைய சமூக, பொருளாதார, அரசியல் நலன்களை முன்னேற்றும் என்றும் தீர்மானகரமான வினா எழுவது ‘அதிகாரபூர்வமற்ற’ குரல்களுக்கெதிராக ‘அதிகாரபூர்வமான’ குரல்களை முன்னெடுப்பதற்கல்ல, மாறாகத் தன்னளவில் சமாதானத்தின் வாதமுறைகளையும், அது குரல்கள், பதிவேடுகள், கூற்றுக்கள் மற்றும் நடைமுறைகளென்றவகையில் அதன் அர்த்தத்தைக் கொடுக்கும்வகையில் வழங்கிவரும் மற்றும் பரிமாற்றத்துக்கு உள்ளாகும் நிலையையும் விளங்கிக்கொள்வதற்காகும்.

(1) ஒரு சோதனைச்சாவடி. அங்கு யாருமில்லை. தகரப் பீப்பாய்களுக்குப் பின்னால் ஆயுதந்தாங்கிய காவலர்கள் எவருமில்லை. வயதுகூடிய பெண்ணும், வயதிற்குறைந்த ஆணுமாகிய இரு சிறுவர்கள் கைகளைக் கோர்த்தவாறு அவற்றினூடாகச் சுதந்திரமாக நடக்கின்றனர். சுலோக வாசகம், “நிலையான சமாதானம் என்பதன் கருத்து சட்டம் மற்றும் ஒழுங்கு மீண்டும் நிலவுவதாகும்” என்பதாக அமைகின்றது.

(2) இளம் படைவீரரான தந்தையொருவர் வீடு திரும்புகிறார். இப்பொழுதுதான் அவர் இளவயது மகனுடன் தோட்டத்தின் கதவினூடாக உள்ளே வந்திருப்பதைப் புகைப்படம் காண்பிக்கின்றது. இருவரும் மகிழ்ச்சியாகக் காணப்படுகின்றனர். இராணுவத்தைச் சேர்ந்தவரான தந்தை காப்புநிறச் சீருடையை அணிந்துள்ளார். தோளில் தொங்கும் மேலாடை அவரின் பணி்கடமை முடிந்துள்ளதைக் காட்டுகின்றது. பையன் ரீ-ஷேர்ட்டையும், கட்டைக் காற்சட்டையையும், தந்தையின் ஹெல்மெட்டையும் அணிந்திருக்கிறான். கவன ஈர்ப்பு வாசகம் “நிலையான சமாதானம் என்பதன் கருத்து சகல தந்தைமாரும் வீடுவருதல் என்பதாகும்” என்று அமைந்துள்ளது.

Sri Lanka First அமைப்பின் முதலாவது விளம்பரத்தில் சோதனைச்சாவடியில் ஆண்ஃபெண் காவலர்கள் இல்லாதிருக்கும் அளவுக்கே சமாதானமென்பது காட்டப்படுகின்றது. சோதனைச்சாவடிகளும், தகரப் பீப்பாய்களும், பாதுகாப்பு வலயங்களும் இன்னமும் எஞ்சியுள்ளன. ஒரு நகர்ப்புறப் பின்னணியில் இது எவ்வித பிரச்சினையையும் எழுப்பவில்லை. மலிபன் பிஸ்கட் கம்பனியும், இலங்கை வங்கியும் உள்ளிட்டவகையில் பல வியாபாரத் தொழில்முயற்சிகள் யுத்த காலத்தில் தமது பொருட்களை விளம்பரப் படுத்துவதற்குச் சோதனைச்சாவடித் தகரப் பீப்பாய்களையும், வீதித்தடைப் பொருட்களையும் கிரமமாகப் பயன்படுத்தினவென்பது நகர்ப்புறக் காட்சிகளில் இராணுவத் தகரப் பீப்பாய்களின் சர்வசாதாரணமாக்கல்

அளவையும், செயல்முறையையும், அவை எவ்வாறு பாரிய விளம்பரப் பலகைகள் மற்றும் நியோன் விளக்கு அடையாளங்களைப் போலவே கருதப்பட்டனவென்பதையும் எடுத்துக்காட்டின. Sri Lanka First அமைப்பின் விளம்பரம் இந்த நிலக்காட்சியை முதலாவதாக இயற்கையானதென்று ஏற்றுக்கொண்டது. இரண்டாவதாக, சமாதானத்துக்கு ஏதோவொரு வகையிலான இராணுவப் பிரமாணப்படுத்தல் அவசியமென்பதையும் உட்கிடையாகக் காட்டுகின்றது. சமாதானச் செயல்முறையின் குறியிலக்குகள் நன்கு வரைவிலக்கணப் படுத்தப்படாத ஒரு காலகட்டத்தில், விளம்பரம் ஓர் இடைமாற்றக் காலத்திலுள்ள சமூகத்தின் அங்கலாய்ப்புகள்குறித்துச் சிந்தித்திருக்கலாம். தகரப் பீப்பாய்களும், சோதனைச் சாவடிகளும் யுத்தம் இன்னமும் முடிவடையவில்லையென்பதை நினைவூட்டும் அம்சங்களாகும். ஆயினும், ஒரு சமாதானப் பிரசார இயக்கத்துக்கு அவை வழங்கும் கருத்து என்ன? வெறுமையாக்கப்பட்ட சோதனைச்சாவடியும், அதன் தகரப் பீப்பாய்களும் எந்த நேரத்திலும் இராணுவத்தைச்சேர்ந்த ஆண்களும், பெண்களும் ஆயுதங்களுடன் திரும்பிவரக்கூடிய சாத்தியச் சூழலில், சட்டம் மற்றும் ஒழுங்குக்குத் திரும்பவேண்டிய ஒரு சுலோகத்துடன் சிவிலியன் வாழ்க்கையைப் பிரமாணப்படுத்துவதில் இராணுவத்துக்கு ஒரு வெளிப்படையான பாத்திரத்தை அடையாளப்படுத்தின.[42]

மேலே தரப்பட்டுள்ள உதாரணம் இந்தவகையில் ஒரு நுகர்வுப் பொருளென்றவகையில் விளம்பரப்படுத்தப்படும் சமாதானத்தின் வாதமுறையினுள் எத்தகைய நுண்ணறிவுகளை வழங்கக்கூடும்? டேவிட் கென்னடி யுத்தத்தின் அனுமதிக்கக்கூடிய விதிகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் என்பவற்றைக் குறியினப்படுத்துவதில் இராணுவ, அரசியல் மற்றும் மனிதாபிமான தொழில்சார் வல்லுநர்களிடையே ஒரு பொதுவான சொல்வளம் பரிணமித்துள்ளதென்பதைக் குறிப்பிடுகின்றார். யுத்தத்தின் வன்செயல் அனேகமான சந்தர்ப்பங்களில் மனிதாபிமான காரணங்களுக்காக நியாயப்படுத்தப் பட்டுள்ளது. இது ‘இராணுவ உத்தியாளர்களின் சிந்தனையோடு பதற்றத்தைக் கொண்டுள்ள வகையிலான’ மனிதாபிமானிகளின் குறித்துரைப்பான கண்ணோட்டங்களுக்கு எதிராகச் செல்லுகின்றது (கென்னடி 2004, 267). நவீன கொள்கை விஞ்ஞானம் என்ற வகையில் சிவிலியன் மற்றும் அரசியல் தலைவர்களால் பகிரப்படுவதால், மனிதாபிமானச் சொல்வளத்தைத் தழுவிக்கொள்வது தொழில்சார் நவீன இராணுவங்களின் வார்ப்புக்கு நடுநாயகமான ஒன்றாக நோக்கப்படுகின்றது (கென்னடி 2004, 268). இலங்கை கொத்தலாவல பாதுகாப்புக் கல்விக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானம், சர்வதேச உறவுகள், கலாசாரக் கற்கைகள் மற்றும் ஆங்கிலமொழிக் கல்விமான்களால் வழங்கப்படும் விரிவுரைகளும்; இராணுவத்தினருக்கு மனிதாபிமானச் சட்டத்தில் வழங்கப்படும் கல்விநெறிகளும் - சில கொடையாளர் அரசாங்கங்கள் மற்றும் ஐசீஆர்சீ அமைப்பு என்பவற்றால் நிதியளிக்கப்படுபவை[43]

–கல்விநிலை, மனிதாபிமான மற்றும் இராணுவத் தலைவர்களுக்கிடையிலான ஒத்துழைப்பின் உதாரணங்களாகும். எவ்வாறாயினும், கென்னடி பின்வருமாறு எச்சரிக்கின்றார்:

"இராணுவ, மனிதாபிமான மற்றும் அரசியல் தலைவர்கள் அதிகரித்த வகையில் ஒரே மொழியைப் பேசுகின்றார்கள் என்பதால் அவர்கள் ஒரே விடயத்தையே கூறுகின்றனர் என்று அர்த்தமாகாது. அனேகமான சந்தர்ப்பங்களில் யார் பேசுகிறார்கள் என்பதை எம்மால் கூறமுடியும்... ஒரே இராகம் பல்வேறு சுருதிகளில் இசைக்கப்படுவதைப்போன்று வெற்றியின் குரலையும், நற்பண்பின் குரலையும் எம்மால் கேட்கமுடியும் (கென்னடி 2004, 271 ரூ 282). சகல் மனிதாபிமானத் தலைவர்களையும், துடிப்பான செயற்பாட்டாளர்களையும் ஒரே கூட்டத்தில் சேர்த்துவிட முடியாது. அவர்களின் வித்தியாசமான வரலாறுகள், மூலங்கள், குடியேற்றவாத எதிர்ப்பு, பெண்ணிலைவாதம், தொழிற்சங்கவாதம், ஜாதி, இனம் மற்றும் வர்க்கம் அவர்களின் செயற்பாடுகளைத் தீர்மானித்து, வடிவமைக்கின்றனவென்பதே இதற்கான காரணமாகும். எவ்வாறாயினும், Sri Lanka First அமைப்பின் சோதனைச்சாவடி விளம்பரம் அடையாளப்படுத்துவது முழுக்க முழுக்க ஒத்திசையாத இராணுவ மற்றும் மனிதாபிமான நலன்களின் ஊடறுக்கும் தன்மையாகும். இவை, எவ்வாறாயினும், ஒன்றுக்கொன்று மதிப்பை வழங்கும்வகையில் ஒழுங்கற்றவகையில் ஊடறுப்பவையுமாகும். இந்த உறவினால் முன்னெடுக்கப்படும் சமூக-பொருளாதார உறவுகள் பின்னர் இவ்வத்தியாயத்தில் கையாளப்படும்.

இராணுவத்திலிருக்கும் தந்தைமார் வீடு திரும்பும் Sri Lanka First அமைப்பின் இரண்டாவது விளம்பரம், இராணுவவாதத்தின் அடிப்படை மூலங்களை மேலும் அதிகரித்தவகையிலான ஐயுறவுப் பதங்களில் வெளிப்படுத்தி, மரபுசார் இராணுவத் தந்தையர் மற்றும் தனயன்களின் கருத்தை முன்னெடுக்கின்றது. வீட்டுத் தோட்டத்தின் மங்கலான பின்னணியில் தகப்பனும், மகனும் தெளிவாகத் தோன்றும் புகைப்படம் மகிழ்ச்சியான தந்தை மற்றும் மகனின் தோற்றத்துக்குப் பார்வையாளரின் கவனத்தை ஈர்க்கின்றது. இருவருமே ஏறக்குறைய இராணுவ உடையில் காட்சியளிக்கின்றனர். இது இராணுவத் தந்தைக்கும் (எதிர்கால) இராணுவத் தனயனுக்குமிடையிலான பிணைப்பை எடுத்துக் காட்டுகின்றது. (விளம்பர விடய வாசகம் யுத்த விதவைகளின் பாத்திரத்தைத் தனித் தாய்மார்களென்று குறிப்பிட்டபோதிலும்,) இந்த மரபு ஜாதிப்

பிரயோக உதாரண மாதிரியில் வலுப்படுத்தப்பட்டுள்ளபோதும் தந்தைமாரும், மகன்மாரும் ஒரே தொழிலில் பிரவேசிக்கின்றனரென்ற எண்ணப்பாட்டை வரன்முறைப்படுத்துகின்றது. விளம்பரத்திலுள்ள ஆடை வகையிலான அடையாளப்படுத்திகளும் அடையாளம் மற்றும் அவகாச வாய்ப்பின் பரஸ்பரம் மாற்றக்கூடிய தன்மையைக் காட்டுகின்றன. முன்பே கூறப்பட்டதுபோன்று இராணுவ உடைகளும், காப்புநிற ரி-சேர்ட்டுகள், தொப்பிகள், முதுகில் காவும் பைகள் போன்ற உப-அங்கங்களும் இலங்கையில் சிறுவர் மற்றும் வளர்ந்தோருக்கான அளவுகளில் பரந்த அளவில் கிட்டும் ஜனரஞ்சகமான நுகர்வுப்பொருட்களாகவுள்ளன. இது விளம்பரத்தில் தந்தையும், மகனும் ஆடையணிந்திருக்கும் சூழமைவை வழங்குகின்றது. தந்தை காப்புநிற மேலாடையைக் கழற்றுவதும், மகன் இராணுவ ஹெல்மெட்டை அணிந்திருப்பதும் (பாதுகாப்பின் அடையாளம்) இச்சூழமைவை அங்கீகரிப்பதாகவுள்ளது. அதேநேரத்தில் அது இராணுவத்துக்கும், இராணுவமல்லாததற்குமிடையிலான, படை வீட்டுக்கும், இல்லத்துக்குமிடையிலான அவகாச வாய்ப்பு வேறுபாட்டை இல்லாமற் செய்கின்றது. இவ்வாறு பரஸ்பரம் மாற்றிக்கொள்ளும் தன்மைகளிலேயே இராணுவ மயப்படுத்தலின் சூசகமான அம்சம் வெளிப்படுகின்றது. இது அனேகமாகக் கண்ணுக்குப் புலனாகாத ஒன்று; ஆகவே மேலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகின்றது. அனுரத்த செனோய் தெரிவிப்பதுபோன்று, ஒரு செயல்முறையென்ற வகையில் இராணுவ மயப்படுத்தல் ஒரு யுத்தத்தைவிட, ஒரு குறிப்பான சமர்க்களத்தைவிடப் பெரிதாகின்றது. சமாதான காலத்தில், யுத்தத்துடன் நேரடியாகத் தொடர்பற்ற அன்றாடப் பழக்கங்களினதும், நிறுவகக் கட்டமைப்புக்களினதும் ஒரு பகுதியாகச் செய்யப்படும்போது அது பெரிதாகின்றது (செனோய் 1998, 101). Sri Lanka First அமைப்பின் படைவீரன் வீட்டுக்குத் திரும்பும் படிமங்களைக் கொண்டவை போன்ற விளம்பரங்கள் அவை பார்வைக்கு அஹிம்சைத்தன்மை கொண்ட பதிவேடுகளில் செய்து காட்டப்படுவதால் சமூகத்தில் இராணுவவாதத்தை நிறுவனப்படுத்துவதில் ஒரு சூசகமான பாத்திரத்தை வகிக்கின்றன. இச்செயல்முறை மிகவும் கபடத்தன்மை கொண்டதென்பதால் விளம்பரத்தை வடிவமைத்த அணி இராணுவத்தன்மை குறித்த அதன் உப-வாசகத்தை அறிந்து கொள்ளவில்லை. அதாவது விளம்பரத்தில் யுத்தத்தினதும், சமாதானத்தினதும் மொழி அடையாளங்கள் ஒரு பொதுவான தன்மையைப் பகிர்ந்துகொண்டன என்னும் விடயம்.[44] சமாதானக் கோட்பாட்டுக்கான யுத்தத்திலிருந்து நாம் வெகுதொலைவில் இருக்கவில்லை.[45]

இந்த யாக்கப் பதிவேட்டில் ஓர் எதிர்நிகழ்வு ஒரு நெறி உதாரணமாகவன்றித் தொடர் நிகழ்வென்றவகையில் யுத்தமும், சமாதானமும் குறிப்பது என்ன? 1977இல் பொருளாதாரம் தாராளமயப்படுத்தப்பட்டதோடு, சுதந்திரத்துக்குப் பின்னர் இதுகாலவரை இல்லாதவாறு இலங்கையில் வியாபாரத் தொழில் வாய்ப்புகள்

முன்னேற்றமடைந்தன. பெருமளவுக்கு நாட்டின் தென்பகுதியில் அமைந்திருந்த யாக்க வர்க்கத்தினர் வடக்கு-கிழக்கில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்த யுத்தத்தின் ஆக்கபூர்வமற்ற தாக்கங்கள் குறித்துப் பெருமளவுக்கு அக்கறை காண்பிக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் தமது வியாபார இணைப்புறவுகளை அபிவிருத்திசெய்து, இலாபங்களைப் பெருக்குவதிலேயே கவனஞ்செலுத்தினர் (பஸ்டியன் 2002). ஆயுதங்கள், இராணுவ வழங்கல்கள், போக்குவரத்து வர்த்தகங்கள் போன்றவற்றில் ஈடுபட்டோருக்கும் யுத்தம் புதிய ஜீவனோபாய வாய்ப்புக்களைத் திறந்துவிட்டது. 1980'களிலிருந்து 2000ஆம் ஆண்டு ஆனையிறவில் இலங்கை இராணுவத்தின் படுதோல்வி வரை, மோதலுக்கு ஓர் அரசியல் தீர்வை நாடிச் சமாதான இயக்கங்கள் விடுத்த விண்ணப்பங்களை வியாபார சமூகம் அவ்வளவாகக் கவனிக்கவில்லை. 1988இல் இலங்கை இராணுவத்தின் பீரங்கிப் படைப் பிரிவினால் வெளியிடப்பட்ட பீரங்கிப்படையின் நூற்றாண்டிதழ் யாக்க மற்றும் வங்கித் துறைகளில் நண்பர்கள்குறித்த மிகவும் செல்வாக்குமிக்க நிரலொன்றை வழங்கியது. ஹேமாஸ் மார்க்கட்டிங், த பினான்ஸ் கம்பனி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இந்தோசுயெஸ் பாங்க், ஸடேட் பாங்க் ஒவ் இந்தியா, சம்பத் வங்கி, யுணே கிரின்ட்லேஸ் போன்ற அமைப்புகள் விளம்பரங்களை வழங்கியிருந்தன. கிழக்கு மாகாணச் செயற்பாட்டுக் கட்டளையகத்தின் 3வது பட்டாலியனின் சஞ்சிகை *ரணவிரு ஹண்ட* (யுத்த வீரனின் குரல்) அயிற்கென் ஸ்பென்ஸ் மற்றும் சிங்கர் போன்ற அதியுயர்நிலைக் கம்பனிகளின் அனுசரணை விளம்பரங்களைத் தாங்கி வெளிவந்தது. மெட்ரோபொலிரன் ஏஜன்சீஸ், இன்போடெக்ஸ், சுஸுகி மோட்டர்ஸ், பிரேமதாச ஜுவலர்ஸ் போன்ற சிறிய கம்பனிகளும் பெரும் எண்ணிக்கையிலான இரவு விடுதிகள் மற்றும் கசினோக்களும் விளம்பரங்களை வழங்கியிருந்தன. இந்தச் சஞ்சிகையின் முகப்பு அட்டை மிகவும் கவர்ச்சியான ஓர் ஆண் படைவீரரின் படத்தைக் காண்பித்தது. சமர்க்கள ஆடையை அணிந்திருக்கும் இந்தப் போர்வீரனின் ஒரு கை துப்பாக்கியைத் தாங்கி உயர்ந்து நிற்கிறது. மறுகையிலிருந்து ஒரு சமாதானப் புறா பறந்துசெல்லத் தயாராகவுள்ளது. இது சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான மக்கள் கூட்டணி அரசாங்கத்தின் பாதுகாப்பு உத்தியைக் குறிக்கும் சமாதானத்துக்கான யுத்தம் என்னும் நெறியுதாரணத்தை வலுப்படுத்துவதாகவே அமைந்திருந்தது. படைவீரன் இலங்கையின் தேசப்படத்தின்மீது நிற்கின்றான். கிழக்கு மாகாணமே பிரத்தியட்சமாகக் காண்பிக்கப்பட்டுள்ளதோடு, அவனது கால் ஒரு புலியின் தலைமீது உள்ளது. புலியின் நீண்ட, சிவந்த நாக்கில் LTTE என எழுதப்பட்டுள்ளது. இங்கு தெளிவாகவே படைவீரனின் உருவம், தோற்கடிக்கப்பட்ட புலிமீது வெற்றிக்களிப்புடன் நிற்கும் ஒன்றாகும். பின்புற அட்டையில் ஓவியர் ஒருவரின் வரைபடத்தில், போருடையில்

ஒரு படைவீரன் ஒரு கையில் துப்பாக்கியை ஏந்திநிற்கையில், மறுகை தீர்மானகரமாக முஷ்டியாக்கப்பட்டுள்ளது. இந்த உருவம் போரின் அழிவுகள், குறித்துரைப்பாக எல்ரீரீஈ இழைத்த வன்செயல்கள், புகையிரதங்கள் மற்றும் பஸ்களில் குண்டுவெடிப்புகள், பௌத்த குருமார் படுகொலை, பள்ளிவாசல் மீதான தாக்குதல்கள், விவசாயிகள், பெண்கள் மற்றும் சிறுவர்கள்மீதான துப்பாக்கிப் பிரயோகம்மூலம் இடம்பெறும் கொலைகள் என்பவற்றைப் பின்னணியாகக் கொண்டுள்ளது. இந்த அட்டைப் படங்கள் எதுவித சந்தேகமுமின்றி யுத்தத்தின் ஒரு தெரிவுசெய்யப்பட்ட கதையையே கூறுகின்றன. அவை இலங்கை இராணுவத்தின் பக்கத்துக்கு அனுகூலமாக அமைந்துள்ளன; அதன் பலத்தைக் காட்டுகின்றன; தமிழ் சிவிலியன் மக்களுக்கு யுத்தம் கொணர்ந்த நாசங்களை மறைத்துவிட்டன. அவை பயன்படுத்தும் கொடூரமான கட்புலக் காட்சிகள் இராணுவ-விளம்பர இணைப்புறவின் வரலாற்றில் இதற்குமுதல் இடம்பெறாதவையல்ல. சூசான் சொன்டாக் அவர் ஒரு பிரத்தியேகமாக மோசமான 'பெனட்டன் வர்ணங்கள்' என வர்ணிக்கும் விளம்பரத்துக்கு எமது கவனத்தைக் கோருகின்றார். இந்த விளம்பரப் புகைப்படத்தில் இறந்த குரோஷியப் படைவீரன் ஒருவனது இரத்தம்தோய்ந்த ஷேர்ட் காண்பிக்கப்பட்டுள்ளது (சொன்டாக் 2003, 120). இலங்கை இராணுவ சஞ்சிகைகளில் தமது பொருட்களையும், சேவைகளையும் விளம்பரம் செய்யத் தீர்மானித்த நிறுவனங்கள் தமது இறுதிக் கட்புல வடிவமைப்புகள் மற்றும் உள்ளடக்கம்குறித்து அறியாதிருந்திருத்தல்கூடும். உள்ளூரில் மிகவும் சக்திமிக்க வகையிலான இராணுவப் பிரசன்னம், இராணுவம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்குப் பொறுப்பாகவிருத்தல், பிரத்தியேகமாக யுத்தத்தினால் நேரடியாகப் பாதிப்புற்ற மாகாணங்களில் வியாபாரத்துக்குகந்த சூழல்களை இராணுவம் பெற்றுக்கொடுத்தமை போன்ற காரணங்களால் அவர்களுக்கு வேறு தெரிவுகள் இருக்கவுமில்லை. எவ்வாறாயினும், இராணுவ சஞ்சிகையில் விளம்பரம் செய்வதில் இராணுவ-யாக்கச் சமநிலைக்கும், யுத்தத்தைச் சட்டநிலைத்தகவுள்ள ஒன்றாக்குவதில் அரசுக்கும், யாக்கத் துறைக்குமிடையிலான இணைப்புறவு வெளிக்காட்டப்பட்டது. இந்த விடயம் குறித்த எதுவித ஐயத்துக்குமிடமற்ற வாக்குறுதி, கொழும்பைத் தளமாகக்கொண்டியங்கும் பல்தேசிய ஆடைக் கைத்தொழிலில் முன்னணி வகிக்கும் குழுவாகிய MAS Holdings இனால் ஒரு முழுப்பக்க விளம்பரமாகக் கொடுக்கப்பட்டது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் யுத்த வீரர்கள் தினமென்று பிரகடனப்படுத்தப்பட்ட 2000 ஜுன் 7ஆந் திகதியன்று அது வெளியிட்ட முழுப்பக்க விளம்பரமொன்றில் ஒரு பலாப்பழத்தின்மீது சாய்ந்து நிற்கும் வகையில் ஒரு வாள் வைக்கப்பட்டு ஒரு வினாவும்.்.சுலோகமும் காட்சிக்கு வைக்கப்பட்டன. "யுத்தத்துக்குப் பயன்படாத வாள் பலாப்பழம் வெட்டுவதற்கா பயன்படும்?"[46] என்பதே இச்சுலோகமாகும்.

விளம்பரத்திலிருந்த ஒரு கவிதை சோம்பியிருப்பதற்கான காலம் முடிந்துவிட்டதென்று பொதுமக்களை எச்சரித்தது. பயங்கரவாதச் செயல்கள் அனைத்துக்கும் தண்டனை வழங்குவது கடமையாகும். (இது ஆங்கிலமொழி *'டெய்லி நியுஸ்'*இல் பிரசுரிக்கப்பட்டிருந்தபோதிலும், சிங்களத்திலேயே எழுதப்பட்டிருந்தது). ஆயினும், யுத்த வீரனை ஊட்டி வளர்க்கும் சிங்களப் பொதுமக்களாகிய விவசாயிகள், கவிஞர்கள், மதகுருமார் மற்றும் தாய்மாருக்கு விடுத்த (பிரவகிக்கும் சிங்கள ஜனரஞ்சகக் கலாசாரத்தின் வழிபாட்டுச் சின்னங்கள்) வேண்டுகோளில் தமிழ் இனத்தைச் சேர்ந்த மற்றவரை கட்டமைப்புரீதியாகக் காணவும் முடியவில்லை.

2000-2001 காலப்பகுதியின் அரசியல், இராணுவ மற்றும் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் வெல்லமுடியாத யுத்தம் என்பவை காரணமாகப் பல்தேசியக் கம்பனிகளுக்கும், வர்த்தகத் துறையினருக்கும் அதிகரித்த வியாபாரத்துக்கும், யாக்க இலாபத்துக்கும் சமாதானம் ஒரு முன்நிபந்தனையாக மாறவேண்டியிருந்தது. சமாதானம் என்பது பங்கிலாபம் என்று குறியிடப்படத் தொடங்கியது. 2005 மார்ச் 15ஆந் திகதி Sri Lanka First அமைப்பின் "வெண்ணிற ஆடை அணிவீர்" சமாதான தினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் Hemas Holdings (Pvt.Ltd.) கம்பனியின் பணிப்பாளர் அப்பாஸ் எசூப்அலி, எதுவித சந்தேகமுமின்றி சமாதானம் தேசிய அபிவிருத்திக்கு அவசியமென்றும், வியாபார வளர்ச்சியை ஒரு சமாதானப் பங்கிலாபமென்றும் கூறினார்.[47] இக்கம்பனி முன்னர் பீரங்கிப்படை நூற்றாண்டுவிழாச் சஞ்சிகையில் பிரசுரித்த விளம்பரத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. த பினான்ஸ் கம்பனியின் தாய்க் கம்பனியாகிய சிலிங்கோ கொன்சோலிடேட்டட் தவிசாளர் 2001இல் அன்புக்கும், புரிந்துணர்வுக்குமான Solo-U அமைப்பை ஜனசமூக மட்டத்தில் யாக்கத்துறையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முன்முயற்சியாக ஆரம்பித்து வைத்தார். த பினான்ஸ் கம்பனி, முன்னர் பீரங்கிப்படை நூற்றாண்டுவிழாச் சஞ்சிகைக்கு அனுசரணை வழங்கியிருந்தது. சமாதானம் குறித்த நீளுரையாடல் கருணையோடு இலாபத்தையும் உள்ளடக்கியிருந்தது. இது பாரிய, உலகளாவிய சந்தையில் மேலும் முக்கியமான ஆதிக்க நிலையைக் குறிப்பதாகும். ஐ.தே.க. அரசாங்கமும், எல்ரீரீஈ அமைப்பும் கைச்சாத்திட்ட 2002 பெப்ருவரி புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் வியாபார இல்லங்கள் மீண்டும் திறக்கப்பட்டபோது இச்சந்தை குறித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது. 2003 ஜனவரியில், சிங்கர் மின்பாவனைப் பொருட்கள் கடையை யாழ்ப்பாணத்தில் பதினேழு வருடங்களுக்குப் பின்னர் மீளவும் திறந்தபோது, செயற்பாட்டின் முதல் தினத்திலேயே சகல பொருட்களும் விற்றுத்தீர்க்கப்பட்டன.[48] எலிபன்ட் கொரிடோர் ஹோட்டலின் தவிசாளர், சமாதானச் செயல்முறை மற்றும் யாழ்ப்பாணம் ஒரு வளர்ச்சியுறும் சந்தையாக நிலைமாற்றம் பெற்றமை காரணமாகத் தனது கம்பனி குடாநாட்டில் 350 மில்லியன் ரூபா ஆகுசெலவில் ஒரு ஹோட்டலைக் கட்டுவதற்குத்

தீர்மானித்திருந்ததாகத் தெரிவித்தார்.[49] யாழ்ப்பாணத்துக்கான ஏ-9 வீதி திறக்கப்பட்டபோது, யூனியன் அஷ்வரன்ஸ் விளம்பரமொன்று மகிழ்ச்சியுடன் பின்வருமாறு தெரிவித்தது: "யாழ்ப்பாணத்தில் சமாதானம் பிரவேசிக்கையில் நாமும் பிரவேசிக்கின்றோம்"[50] 2002 ஜூன் 16ஆந் திகதி பருத்தித்துறையில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் ஒரு தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையமொன்றை ஆரம்பித்துவைக்கும்போது, யுத்தகாலத் துயரங்கள்குறித்த சொல்லணி வழக்கைப் பயன்படுத்தியது. "அம்மா, யாழ்ப்பாணத்தில் இப்பொழுது நீங்கள் தனியாக இல்லை" என்னும் ஆறுதல் வார்த்தையோடு வயதுமுதிர்ந்த தமிழ்த் தாயொருவர் குடும்பத்தவர்களுடன் நண்பர்களுடன் பேசும் காட்சி காண்பிக்கப்படுகின்றது.[51] அரச வங்கியாகிய இலங்கை வங்கி யாழ்ப்பாணத்தில் ஒரு கிளையை மீண்டும் திறந்து வைக்கும்போது, "இப்பொழுது யாழ்ப்பாணம் எமது வலையில்"[52] என்று பிரகடனஞ்செய்யும் விளம்பரத்தைப் பயன்படுத்தியது. இங்கு ஒருவர் கைப்பற்றுதல் குறித்த மொழியை அவதானிக்கலாம். உண்மையில் விளம்பரக் கைத்தொழில் சமாதானத்தைக் கொண்டாடியது உயர் பதற்றம் நிறைந்த இராணுவ மொழியிலாகும். 2003க்கான இலங்கைச் சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் (SLIM) விருதுகள் வைபவத்துக்கான தயாரிப்புக் காலத்தில் ஒரு தொடரான செய்திப்பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்களில் "சமாதான காலத்தில் உங்களுக்கு அவசியமான ஒரேயோரு *போராயுதம்* திறமையாகும்" என்னும் கவன ஈர்ப்பு வாசகம் தோன்றியது. ஒரு விளம்பரம் "எச்சரிக்கை! உள்ளேயிருப்பது மிகவும் உன்னதமான (explosive) சிந்தனையாகும்" என்னும் வாசகத்துடன் பழைய புத்தகமொன்றைக் காட்டுவதாகவிருந்தது. வேறொரு விளம்பரத்தில் குப்பைக்கூடையொன்றில் கசங்கிய கடதாசிகள் காட்சியளித்தன. 'குண்டுகள் தகர்த்த உதவாத சிந்தனைகளின் கல்லறை' என்பதே கவன ஈர்ப்பு வாசமாக அமைந்திருந்தது. இந்த விளம்பரம் 2003இல் SLIM ஆரம்பித்த மிகச்சிறந்த விளம்பரத்தை வடிவமைத்த அணிக்கான விசேட விருது குறித்ததாகும்.[53] இக்கவன ஈர்ப்பு வாசகங்களிலும், படிமங்களிலும் குறிப்பிடக்கூடியவையாக அமைந்தவை போராயுதங்களும், வன்செயல் மற்றும் யுத்தத்தின் தொழில்நுட்பங்களுமேயாகும். பிரசித்த பேக்கரியும், உணவுத் தயாரிப்பு நிறுவனமுமாகிய பெரேரா அன்ட் சன்ஸ் சுவிஸ்ரோல் குறித்த தனது விளம்பரத்தில் அதை ஒரு டைனமைட் குச்சியைப்போல் காண்பித்து 'பேரொலியுடன் மீண்டும் வந்துள்ளது'[54] (back with a bang) என்னும் வாசகத்தையும் பயன்படுத்தியிருந்தது. இந்த விளம்பரங்களின் கருவியாகப் பயன்படுத்திய யுத்தம் ஒரு சூடிகையான, செறிசொல்நயமிக்க ஒரு வரியாகும். அது ஸிஸெக் கூறியது போன்று அதன் நிலை அதன் பொருண்மை உள்ளடக்கம் இல்லாதவகையில் எமக்கு வழங்கப்படுவதாகும். ஆயினும் வெளிப்பார்வைக்குப் பாதிப்பற்றவகையில் விளம்பரங்கள் உயிரோட்டமாக

வைத்திருக்கும் யுத்த அடையாளத்தின் அரசியல் பொருளாதாரத்துக்கு ஒரு பயன்பாடும், பரிவர்த்தனைப் பெறுமதியும் இருந்தன. இது கடினமான சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது அவசியப்படின், யுத்தத்தை ஓர் இலகுவான விருப்புத்தெரிவாக ஆக்குவதற்கு உதவியது. செல்லிடத் தொலைபேசிக் கம்பனி டயலொக் GSM பயன்படுத்திய ஒரு தொடரான விளம்பரங்கள் யுத்தத்துக்கான இந்தத் தயார்நிலை குறித்த பிரவகிக்கும் பொருளாதாரத்தை, சொல்லாடலை ஒட்டிச் செயற்பட்டது. இலங்கை இராணுவத்தின் ரக்பி அணியின் பிரதான அனுசரணையாளரென்ற வகையில் டயலொக் GSM விளம்பரங்கள் களத்திலும், வேறிடங்களிலும் துல்லியமான இராணுவம் போன்ற செயற்பாடுகள் என்பவை போன்று ஒரு ரக்பி போட்டியையும், இராணுவத்தின் பொருட்களை வைக்கும் லொக்கர் அறையையும் காண்பித்தது.[55] இதேதொடரில் வேறொரு விளம்பரம் அணியின் விளையாட்டுத்திட்ட விபரங்கள் கொண்ட நினைவூட்டல் குறிப்பொன்றை "தாக்குதலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது"[56] என்னும் தடித்த எழுத்து வாசகத்துடன்கூடிய சீல் பொறித்த ஏற்பு அங்கீகாரத்தைக் காட்டியது. யுத்தநிறுத்தக் காலப்பகுதியிலும் சமர்குறித்த அன்றாடத்தன்மை யாக்கத்துறைக்கு யுத்தத்தையும், சமாதானத்தையும் ஒரு (இராணுவ) தொடர்நிகழ்வாக இணக்குவிப்பவரின் பாத்திரத்தை வழங்கியது. இச்செல்நெறியின் ஏமாற்றுவித்தை தேசிய பாதுகாப்பு மற்றும் உலகளாவிய மூலதனத்தின் சமகால இணக்கச் செயற்பாட்டை மூடிமறைப்பதாகும்.

ஒருபுறத்தில் பேராசைமிக்க யாக்கக் கலாசாரத்தின் மிதமிஞ்சிய செயற்பாடுகளுக்கும், மறுபுறத்தில் தனியார் நலனோம்புகையின் விஸ்தரிப்புக்கான நவ-தாராளவாதக் கோரிக்கைகளுக்குமான ஒரு பிரதிவிளைவு யாக்கச் சமூகப்பொறுப்புக் (CSR) குறித்த வற்புறுத்தல் அதிகரித்தமையாகும். யாக்கங்களின் பல வெப் தளங்கள் தமது CSR முன்முயற்சிகள் குறித்த தகவல்களை உள்ளடக்கியுள்ளன. இந்த முன்முயற்சிகளில் கருத்து மோதல்கள் இல்லாமலில்லை. இது சில சந்தர்ப்பங்களில் யாக்கத் துறையினுள்ளேயே நம்பிக்கையீனங்களைத் தோற்றுவித்துள்ளது. ஒகில்வி அவுட்ரீச் அமைப்பின் தலைமை நிறைவேற்று உத்தியோகத்தரான (CEO) சந்தியா சல்காடோ பின்வருமாறு இந்தஉணர்வை நன்கு வெளிப்படுத்துகின்றார்: "வர்த்தக விளம்பரப்படுத்தல் என்ற போர்வையில் சமூகசேவை செய்வதாகப் பாவனைசெய்யவேண்டிய அவசியமில்லை. CSR மற்றும் சமூக சந்தைப்படுத்தல் என்னும் நவநாகரிகச் சொற்கள் நாம் சிலவேளைகளில் பல்வேறு நிகழ்ச்சிநிரல்களைச் சாதிப்பதற்குப் பயன்படுத்துபவையாகும். இங்கு முக்கியம்பெறுவது செய்கையேயன்றி, சிக்கலான மொழிநடையல்ல.[57] சல்காடோவின் கூற்று இன்றைய யாக்க உலகில் CSR என்பது எவ்வாறு ஒரு கருவியாகப்

பயன்படுத்தப்படுகின்ற தென்பதை உட்கிடையாகத் தெரிவிக்கையில், சாதிக்கப்பட்ட 'நல்ல செயல்கள்' எதிர்கால மனிதாபிமான.:.சமாதானப் பணிக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடைமாற்றக்கால விடயங்களைக் காண்பிக்கின்றன. ஒருபுறத்தில், இலங்கை யாக்கத்துறை இன்னமும் சமூக அபிவிருத்தியையும், ஜனசமூக நிகழ்ச்சித் திட்டங்களையும் முதனிலையாக அரசின் பொறுப்பின்கீழ் வருவதாகவே நோக்குகின்றது. இரண்டாவதாக, அது எப்பொழுதுமே விலகி இருந்துவந்த அரச சார்பற்ற நிறுவனத்துறையின் பொறுப்பாக நோக்குகின்றது. 2002இல் முதல்தடவையாக சமாதானத்துக்காகப் பிரசாரம் செய்வதற்கு Sri Lanka First என்னும் ஒழுங்கமைக்கப்பட்ட வடிவத்தில் வியாபார சமூகத்தின் பிரிவுகள் ஒன்றுபட்டபோதிலும், அந்தநேரத்தில் சமாதானத்துக்கும், மனித உரிமைகளுக்குமெனப் பணியாற்றிய ஏனைய சமூக இயக்கங்களோடு எந்தவிதமான அர்த்தமுள்ள கூட்டணிகளுமே இடம்பெறவில்லை. Sri Lanka First அமைப்பு யுத்தம் மற்றும் இராணுவவாதம் என்பவற்றோடு நெருங்கிய ஒத்துழைப்பைப் பேணும் விளம்பரங்கள் மூலம் கலப்புச் சமிக்ஞைகளையே அனுப்பியது. அதன் குடையின் கீழிருந்த யாக்க யதார்த்தத் தனியமைப்புகளின் கணிசமான செல்வம் அதனிடம் இருந்தவேளையிலும் அது கொடையாளர் நிதிகளையே பெற்றுச் செலவுசெய்தது. பின்னர் அது இலங்கைப் பொருளாதாரத்தில் அந்நிய மூலதனத்தைக் கவரும் நோக்கத்தில் 'சமாதானத்தில் முதலீடு செய்யுங்கள்' என்னும் கருப்பொருளில் பல சர்வதேசக் கூட்டங்களை நடத்தி, மோதலுக்குப் பிந்திய தேசங்களில் ஆய்வு விஜயங்களை மேற்கொண்டு, போரினால் பாதிப்புற்ற பெண்களின் அமைப்பு போன்றவற்றுடன் கூட்டான பால்நிலைகுறித்த பணிகளில் ஈடுபட்டது. அதன் யாக்க சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதில் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான அதன் உறவே எதிர்காலத்தில் மனிதாபிமானப் பணி இடம்பெறவுள்ள முறையைப் பாதிக்கும் சாத்திய வளத்தைக் கொண்டுள்ளது. 2004 நவம்பரில் தென்னாபிரிக்கத் தேசிய வியாபாரத் தொழில் முன்முயற்சி அமைப்பு சமாதானச் செயல்முறையையும், 'வியாபாரத் தொழில் முயற்சியின் பாத்திரத்தையும்' ஆய்வு செய்வதற்காக இலங்கைக்கு விஜயஞ் செய்தது. இந்த விஜயம் Sri Lanka First அமைப்பினால் அனுசரணையளிக்கப்பட்டதாகும். இந்த அமைப்பு இதற்கு முன்னர் தென்னாபிரிக்காவுக்கு விஜயஞ்செய்து, நிறபேத காலத்துக்குப் பிந்திய தென்னாபிரிக்காவில் பொருளாதார மற்றும் அரசியல் இடைமாற்றக் காலத்தில் தென்னாபிரிக்க வியாபாரத்தொழில் வகித்த பாத்திரத்தைப் பரிசீலனைசெய்தது. இலங்கையில் சமாதானம் மற்றும் புனர்நிர்மாணம் சம்பந்தமாக ஆக்கபூர்வமாகப் பங்களிப்புச் செய்வதற்கு வியாபாரத்தொழில் வகிக்கக்கூடிய பாத்திரத்தை வரைவிலக்கணப்படுத்தும் நோக்கில் இந்த விஜயம் இடம்பெற்றதாக அதன் பத்திரிகை அறிக்கையொன்று தெரிவித்தது. Sri Lanka First அமைப்பு

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குப் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்குத் தான் ஒரு கருவியாகச் செயற்பட்டதாகவும், வியாபாரத்தொழிலின் ஈடுபாடு புனர்நிர்மாணச் செயல்முறைக்கு முழுக்க முழுக்க ஓர் அரசியல் கலப்பற்ற கவனத்தைக் கொண்டுவருவதென்றும், முக்கியமாகப் பொதுவான வாதவிடயங்களை முகாமைத்துவம் செய்வதில் வியாபாரத்தொழில் கோட்பாடுகளைச் சேர்த்துக்கொண்டு வலுவான கொள்கை ஆய்வொன்றை மேற்கொள்வது அவசியமென்றும் தெரிவித்தது.[58] புனர்நிர்மாணத்தில் யாக்கத் தலையீடு 'அரசியல் சம்பந்தமற்றது' என்பது நிரூபிக்க முடியாதது என்பதோடு, அது கட்சி அரசியல் பிணைப்புக்கள், ஜாதி, வர்க்கம், இனத்துவ மற்றும் பால்நிலை அம்சங்களில் பிளவுண்டிருக்கும் (மீள்) விநியோகத்தை உள்ளடக்கவில்லை யென்னும் குழந்தைத்தனமான விளக்கமின்மையையும் காட்டுவதாகும். இந்த வெடிப்புகளை இல்லாமற்செய்வது அரசியல் பணி சம்பந்தப்பட்ட ஒரு வேலையாகும். யாக்கங்கள் மேலும் அதிகரித்தவகையில் தமது CSR கடப்பாடுகளை நிறைவேற்றுவதனுள்ளேயே பங்குடைமைகளைத் தேடுகின்றன என்னும் கூற்று அரச சார்பற்ற நிறுவனங்கள் துறையைப் பொறுத்தவரையில் பாரதூரமான தாக்கங்களைக் கொண்டதாகும். அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் யாக்கத்துறைக்கும் இடையிலான மிக எளிமைப்படுத்தப்பட்ட வேறுபாட்டை அனுமானிக்க முடியாது. பல அரச சார்பற்ற நிறுவனங்கள் யாக்க முறைகளில் தொழிற்படுவதே இதற்கான காரணங்களாகும். Sri Lanka First அமைப்பின் நிலைப்பாடு இதுவரை பெண்ணிலைவாத மற்றும் மனித உரிமைகள் சமூக இயக்கங்களில் ஈடுபட்டிருந்த அசாநி'களுக்கு (NGOs) முக்கியமான தாற்பாரியங்களைக் கொண்டதாகும். கருவித்தொகுதி வழிகாட்டல்களின் பிரகாரம் நிதியளிப்பை நடைமுறைப் படுத்தலுடன் இணைக்கும் நவ-தாராளவாத நெறியுதாரணச் சட்டத்தின்கீழ், இந்த அசாநி'கள் ஏற்கெனவே மாற்றமுற்றிருக்காவிடில், தவிர்க்கமுடியாதபடி அவற்றின் நடவடிக்கை வழிமுறைகளை மாற்றியமைக்கும் அவற்றின் கலாசாரக் கூட்டுறவுமயப் படுத்தலால் மாற்றமுறக்கூடும்.

அப்படியாயின், சமாதானத்தின் வாதமுறை பன்முக அர்த்தத்தைக் கொண்டதாகும். அது மனிதாபிமானச் சொல்வளம் என்ற போர்வையில் ஓர் இரகசியமான இராணுவவாதத்தை உள்ளடக்கக்கூடும். இச்சொற்றொகுதி, தனது முறைக்கு, அரசின் நவ-தாராளவாதப் பன்முகப்படுத்தல் மற்றும் நலனோம்புகைச் சேவைகளின் தனியார்மயமாக்கல் காரணமாக வளர்ச்சியடைந்துள்ள அசாநி'கள் மற்றும் மனிதாபிமான அமைப்புகள் உள்ளிட்ட பல செயற்படுநர்களால் பகிரப்படுபவையாகும் (விக்கிரமசிங்க 1997, 8). மேலே கூறப்பட்ட வகையில் தனியார்துறையினால் இணக்குவிப்புச் செய்யப்படும் சமாதானம் ஓர் அகவயமான

'அரசியல் கலப்பற்ற' விடயமாகவே முத்திரை குத்தப்படுகின்றது. இந்த நிலைப்பாடு சமாதானம் ஒரு பங்கிலாபம்'.இலாபம் என்னும் யாக்கத்துறையின் சொந்த நலன்களை எடுத்தியம்பாதநேரத்தில், வரலாற்றுரீதியாக வைத்தமைக்கப்படும் முரண்பாட்டுப் பகுப்பாய்வையும், அரசியல் வெற்றிடமொன்றில் ஏற்படாத அவற்றின் தீர்வுகளையும் மறுக்கின்றது. "பொதுவான வாதவிடயங்களை முகாமைத்துவம் செய்வதற்கு வியாபாரத்தொழில் கோட்பாடுகளைப் பயன்படுத்தல்" என்னும் வாக்குறுதி நவ-தாராளவாதத்தின் நிகழ்ச்சி நிரலையே எடுத்துரைக்கின்றது. இத்தகைய வாதமுறையினால் முன்வைக்கப்படும் சமூக உறவுகள் எவை? வியாபார சமூகமென்பது எட்வார்ட் சாயிட் 'வாடிக்கையாளர்கள்' என்று அழைத்தவர்களில் ஒரு பகுதியாவர். அது அரசின் பாதுகாப்பு நலன்களையும், ஒரு நவ-தாராளவாத பொருளாதார அமைப்பின் நிபந்தனைகளையும் அகத்துறிஞ்சியுள்ளது. (உதாரணமாக விளம்பரப்படுத்தலில் உள்ளது போன்ற) அதன் துறைத்தேர்ச்சி அதிகார நிறுவனங்களுடனான அதன் இணைப்புகளால் பாதிப்புறவில்லையென்று கூறப்பட்டபோதிலும், இந்த இணைப்புகளே அதன் துறைத் தேர்ச்சியைச் சாத்தியமாக்கி, முக்கியமானதாக்கியுள்ளன (சாயிட் 2001, 139). இலங்கையின் விளம்பரப்படுத்தல் கைத்தொழில் பெரிதும் கொழும்பையே தளமாகக் கொண்டவையென்றும், பெருமளவிலான விளம்பரங்கள் தலைநகரப் பாணியில் செய்வதையே பிரதிபலிக்கின்றனவென்றும் ஸ்டீவன் கெம்பர் தெரிவிக்கின்றார் (கெம்பர் 2001, 78). இலங்கை இராணுவத்தை 1999 முதல் 2000 அக்டோபர் வரை விளம்பரப்படுத்திய ஒகில்வி அவுட்ரீச் மற்றும் அதன் பின்னர் அதைப் பொறுப்பேற்ற லியோ பேர்னட் சொலூஷன்ஸ் இரண்டினதும் விடயத்தில் அவர்களுக்குப் பொறுப்பு வழங்கப்பட்டது ஓர் ஒளிவுமறைவற்ற ஏலம் கேட்கும் செயல்முறை மூலமாகவல்ல. ஒரு வியாபார வலைப்பின்னலமைப்பு மற்றும் தனிப்பட்ட தொடர்புறவுகள் மூலமாகவே அவை வழங்கப்பட்டன. இரு நிறுவனங்களுமே தாம் தமது விளம்பர இயக்கத்தைத் தயாரித்தது ஆகுசெலவில் மாத்திரமே என்று தெரிவித்தன. ஒகில்வி அவுட்ரீச் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் சந்தியா சல்காடோ, "அதை நாம் ஒரு சேவையாகவே கருதினோம்" என்று தெரிவித்தார்.[59] பின்னர் அவர் தெரிவித்த கருத்தொன்றில், "எனக்கு நம்பிக்கையில்லாத ஓர் இனக்குறிப்பொருளை விளம்பரம் செய்வது எப்பொழுதுமே எனக்குக் கடினமான ஒரு விடயமாகவே இருந்துள்ளது. நான் வழங்கும் பொருள் நுகர்வாளருக்குப் பயனுள்ளதென்னும் நம்பிக்கை முதலில் என்னுள் ஏற்படவேண்டிய அவசியம் இருந்தது. இல்லையேல், கருத்திட்டத்தினுள் என் இதயத்தையும், ஆன்மாவையும் அர்ப்பணித்துப் பணியாற்றுவது ஒருபோதும் இயலாத விடயமாகும்" என்று தெரிவித்தார்.[60] யுத்தம் குறித்த ஆதிக்கவாதம் மற்றும் கருத்தொருமிப்பைக் கட்டியெழுப்புவதில் வாடிக்கையாளருக்கும், அரசுக்குமிடையிலான உறவிணைப்பு

இங்கு துலாம்பரமாகின்றது. இலாபமில்லையென்று விளம்பர முகவர்கள் இங்கு தெரிவித்த போதிலும், மிகவும் உயர்ந்த விலையிலேயே இதற்கான அங்கீகாரம் கிட்டுகின்றது. *சிங்கக் குட்டிகள்* விளம்பரப் பிரசாரத்துக்கு இலங்கை இராணுவம் லியோ பேர்னட் சொலூஷன்ஸ் நிறுவனத்துக்கு 50 இலட்சம் ரூபாவைச் செலுத்தியது (ரூபா 5,3101,000.26). இராணுவமே இது மிகவும் உயர்வான தொகையென்று கூறியது.[61]

உலகமயமாக்கப்பட்ட சந்தையில் இன்றியமையாத நட்பாக, கருவியாக விளங்கும் விளம்பரங்கள் தேசியப் பாதுகாப்புக்கும், உலகளாவிய மூலதனத்துக்குமிடையிலான இணைப்புறவை வலுப்படுத்துவதில் ஒரு தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கின்றன. இராணுவ விளம்பரப்படுத்தல் இடம்பெயர்வையும், மரணங்களையும் யுத்தம் மற்றும் இராணுவம் குறித்த தனது புனைகதைகள் மூலம் நிலைமாற்றத்தைக் கொணர்பவையாகவும், ஒற்றுமையை ஏற்படுத்துபவையாகவும், புனிதமானவையாகவும் மாற்றுகின்றது. இராணுவ உடலை அது அழகானதாகவும், ஆரோக்கியமானதாகவும் கொண்டாடுகையில் உலககளாவிய நுகர்வாளர் என்னும் எமது அடையாளத்தை வலியுறுத்துவதற்காக யுத்தத்தின் ஆக்கபூர்வமற்ற தாக்கத்தை மறைக்கின்றது. அது எமக்கு மோசமான காலங்களின் நல்ல பக்கத்தைக் காண்பிக்கும் அதன் பணிப்பாணையை நிறைவேற்றுகின்றது. ஆயினும் இந்த உலகளாவிய விளம்பரப்படுத்தல் கைத்தொழில் முன்னெப்பொழுதும் இல்லாதவகையில் இன்று ஆதிக்கநிலையை அனுபவிப்பதாயின், அது ஏன் சில சந்தர்ப்பங்களில் தோல்வியடைகின்றது? இத்தோல்விகள் யதார்த்தநிலையில் எதிர்ப்புணர்வு மற்றும் முகவராண்மை குறித்து என்ன தெரிவிக்கின்றன? நிரியெல்லவின் விவரணத் தொலைக்காட்சி நாடகத்துக்கு ஜே.வி.பீ.யின் எதிர்ப்பு ஓர் உதாரணமாகும். இராணுவ ஆட்சேர்ப்புக்கான லியோ பேர்னட்டின் கவர்ச்சிகரமானதும், மிகச் சிறப்பானதுமான பிரசாரம் நிராகரிக்கப்பட்டமை வேறோர் உதாரணமாகும். விளம்பர முகவர் நிலையம் *சிங்கக் குட்டிகள்* விளம்பரப் பிரசாரம் ஆரம்பித்து 3 வாரங்களுள் 5000 இளைஞர்கள் இராணுவத்தில் இணைவதற்கு விண்ணப்பித்ததாகத் திருப்தியுடன் தெரிவித்தபோதிலும், இராணுவத்தை அவதானிப்போர் வேறொரு கதையைக் கூறினர். உயர்வான வேதனங்கள் மற்றும் படிகள் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டபோதிலும்,[62] 2002 மே 8ஆந் திகதிக்கும், ஜூன் 30க்கும் இடையிலான (லியோ பேர்னட் ஆர்ச்சர் பிரசாரக் காலம்) இராணுவ ஆட்சேர்ப்பு முயற்சியில் 470 படைவீரர்களே இணைந்தனர். இது இலக்கைவிட 4530 வீரர்கள் குறைவான நிலையாகும்.[63] ஜே.வி.பீ.யின் இயக்கம் வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிப்பதெனில், அது இலங்கை இராணுவத்தில் இணைந்து நிரியெல்லவின் விவரணத் தொலைக்காட்சி நாடகத்தில் கூறப்பட்டது போன்று 'மேல்நோக்கிய' சமூக முன்னேற்றம் குறித்த

வாக்குறுதியிலிருந்து பயன்பெற விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரித்தது ஏன்? தெற்கைச்சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் லியோ பேர்னட்டின் அழைப்பையேற்று இராணுவத்தில் இணையத் தவறியது ஏன்?

போர்டுக்குப் பிந்திய அல்லது நவ-தாராளவாத, உலக மயமாக்கப்பட்ட குடியுரிமை மற்றும் பொருளாதாரத்தினுள் முகவராண்மையென்பது உலகை மாற்றும் ஒன்றல்ல. மாறாக, அது தாக்கப் பிணைப்புகளை அல்லது 'வாக்குறுதியை' உற்பத்திக் குழுவினுள் அபிவிருத்தி செய்வதன்மூலம் அதனுடன் பேரம்பேசும் ஒன்றெனை லோரன் பேர்லன்ற் தெரிவிக்கின்றார் (பேர்லன்ற் 2006). இந்த வகையில் பார்க்கும்போது, முகவராண்மையென்பது விளம்பரங்கள் அவ்வாறு தெரிவித்தபோதிலும், உண்மையில் கட்டுப்பாடற்ற ஒரு தெரிவு அல்ல. அவை உண்மையான அதிகாரம் உற்பத்தி செய்பவரிடம் இருந்தபோதிலும், நுகர்வாளரிடம் சுய-விருப்புடன்கூடிய, தெரிவு உள்ளதென்று பொய்யுரைக்கின்றன (அப்பாத்துரை 1997, 333). நுகர்வாளர் உயிர்வாழ்க்கைக்குப் போராடுகையில், உழைப்புக் குறித்த உலக மயமாக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் கிட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வீச்சிலான தெரிவுகளினுள் பேரம் பேசுகின்றனர். இப்பேரம் பேசலில் முரண்பாடான கதைகள் தனி நபருக்குத் தகவல் வழங்குகின்றன. *சிங்கக் குட்டிகள்* விளம்பரங்கள் இராணுவத்தினுள் ஒரு மகிழ்ச்சியான, தோழமையுணர்வை முன்நிறுத்திக் காட்டினால், இராணுவத்தைவிட்டு விலகியோடுவோர் கூறும் வேறொரு கதையுள்ளது. இவை இராணுவத்தினுள் நிலவும் தனிப்பட்ட மனக்கசப்புகள், ஊழல்கள் மற்றும் கொடூரங்கள் பற்றியவையாகும். இவை மைக்கேல் காம்பேர்ட் கூறுவதுபோன்று, விபரங்கள் மற்றும் நிரூபணமின்மையால் நகர்ப்புற மரபுவழிக் கதைகள் வடிவத்தை எடுத்தாலும், இராணுவத்தைப் பற்றிய கூட்டுப் பீதியுணர்வு மற்றும் வெறுப்புணர்வு என்பவை சம்பந்தமாக வழங்கிவரும் சிறு அனுபவக் கதைகளாகவே எஞ்சியுள்ளன (காம்பேர்ட் 2004, 163-4). இவை கீழ்த்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த கிராமப்புற இளைஞர்கள், விலகியோடுவோரால் குறித்துரைப்பான உள்ளூர் சூழமைவில் பரப்பப்பட்டாலும், *சிங்கக் குட்டிகள்* விளம்பரங்களின் கவர்ந்திழுக்கும் அழகியல் மற்றும் சிற்றின்பக் கற்பனைகளுடன் போட்டியிடாவிடினும், அவற்றுக்குச் சமாந்தரமான குறிப்பிட்ட நம்புதகவை வழங்குபவையாகவுள்ளன. வறுமையினாலும், வேலைவாய்ப்பின்மையினாலும் கிராமப்புற இளைஞர்கள் இவ்வாறு பிசாசுக்கு ஆன்மாவை விற்கின்றனர். காம்பேர்ட் தனது ஆய்வுப்பணியின்போது நேர்முகங்கண்ட ஒரு படைவீரனின் கூற்றை மேற்கோள் காட்டுகின்றார், "ஒருவர் இறக்கும்நேரம் வந்துவிட்டால், அதுகுறித்து அவர் எதுவுமே செய்யமுடியாது. வீட்டில் சைக்கிளிலிருந்து விழுந்து இறக்கலாம். ஒரு படை வீரனாகப் போய் யுத்தம்செய்து இறப்பது அதைவிட மேலானது" (காம்பேர்ட் 2004, 162). இக்குறிப்பிட்ட போர்வீரனின் கதையிலுள்ள தவிர்க்கவியலாத தலைவிதி வாதம், கலாசாரம் சம்பந்தமான

ஒன்றாகும். இது பௌத்த உலக நோக்கிலிருந்து மாத்திரமன்றி, உலக மயமாக்கல் மற்றும் அதில் உயிர்வாழக்கூடிய தகுதியுள்ளோரென்று தம்மை எண்ணுவோர், அடிமட்டத்திலுள்ள குடும்பங்களுக்குக் குறைவான நம்பிக்கைகளைச் சர்வாதிகாரமுறையில் வகுத்தமைக்கும் தன்மையிலிருந்தும் எழுவதாகும். உயிர்வாழ்க்கையின் இந்த மட்டத்தில் வேறு பலர் வீட்டிலிருந்து அன்றாடக் கூலி உழைப்பாளர் அணியில்சேரும் விருப்புத் தெரிவை மேற்கொள்கையில், வேறு சிலர் நகரங்களுக்கு வேலை தேடிப் புலம் பெயர்கின்றனர். இராணுவத்தில் சேருவோர் தேசாபிமானத்தாலோ, மகிழ்ச்சியினாலோ, உணர்வுமிக்க படையொன்றைச் சேரும் நோக்கிலோ அவ்வாறு செய்வதில்லை. இராணுவம் ஏனைய கீழ்நிலைப் பணிகளோடு அருகருகே காட்சியளிக்கின்றது. இங்கு அதிருப்தி வரன்முறையான மூலதனம் குறித்த வாக்குறுதி சம்பந்தமான மீள்முதலீட்டுக்கு இட்டுச் செல்லுகின்றது (பேர்லன்ற் 2006). இந்த மூலதனம் யுத்தத்துக்குச் செல்லுதல் போன்ற உயர்ந்த மட்டத்திலான தனிப்பட்ட இடர்வரவுகொண்ட ஒரு வேலை மூலம் கிட்டக்கூடியதாகின்றது.

யுத்தம் மற்றும் சமாதானத்தின் வாதமுறைகள் நுகர்பொருள், நுகர்வு மற்றும் உலகளாவிய மூலதனம் மற்றும் தேசியப் பாதுகாப்பின் கூட்டிணைப்பு என்பவற்றின் பிரதிபலிப்பு என்ற வகையில் இலங்கையின் இராணுவமயப்படுத்தல் செயல்முறையினுள் ஒரு சிக்கலான களத்தைக் குறிக்கின்றன. அது இராணுவம் தனது பொதுமக்கள் பிரதிமையைக் கட்டியெழுப்புவதில் கூட்டுறவுமயமாக்கலை வலுப்படுத்துவது, இராணுவவாதம் மற்றும் யுத்தத்தின் பிரதிநிதித்துவங்கள் மற்றும் முக்கியத்துவத்தில் உலகமயமாக்கப்பட்ட ஊடகங்கள், நுகர்வாளர் கலாசாரம் மற்றும் யாக்கங்கள், அசாநி`கள், இராணுவ மற்றும் அரசியல் தலைவர்களின் பகிரப்படும் மனிதாபிமானச் சொல்வளங்களின் பரிணமிப்பு என்பவை சம்பந்தமான ஒரு கதையைக் கூறுகின்றது. அது தேசிய எல்லைகளையும், பாதுகாப்பையும் உலகளாவிய சந்தைகள், பொதுக்கொள்கையின் கூட்டுறவாக்கம் மற்றும் பொதுக் கருத்திட்டங்களின் முகாமைத்துவம் என்பவற்றை விரிவாக்கம் செய்யும் ஓரிடமாக மீள்வரைவிலக்கணம் செய்வதைச் சுட்டுகின்றது. யாக்கச் சமூகப் பொறுப்புணர்வு முன்முயற்சிகள் யாக்கங்களுக்கும், உதாரணமாக பால்நிலை மற்றும் மனித உரிமைகள் குறித்த வாதவிடயங்கள் சம்பந்தமாகப் பணியாற்றும் அசாநி`களுக்குமிடையிலான வளர்ந்துவரும் ஒரு கூட்டுறவைக் காட்டுகின்றன. இது இச்சமூக இயக்கங்களுள் எதிர்காலத்தில் அணிதிரட்டல் மற்றும் பரப்புரை விடயங்களில் சாத்தியமான மாற்றங்களைக் குறிக்கின்றது. அது நுகர்வு சம்பந்தமான பல உயிரூட்டும் அம்சங்களையும் சுட்டுகின்றது: அதாவது அது ஆடையாகவிருக்கலாம் அல்லது இராணுவவாதம் என்னும் நுகர் பொருளாக இருக்கலாம், நுகர்வின் அடிப்படையை ஆக்கும் பொருளாயத சூழமைவுகள்,

தெரிவுகளின் மட்டுப்பாடுகள் மற்றும் நுகர்வாளர்கள் இத்தெரிவுகளைச் செய்தபின் மூலதனத்துடன் செய்யும் பேரம்பேசல்கள் என்பவையாகும். இப்பேரம்பேசல்கள் விளம்பரங்கள் மூலம் இணக்கம் செய்யப்படும், சந்தைப்படுத்தப்படும் இராணுவவாதத்தின் கவர்ச்சிகரமான கதைகளை எதிர்ப்பதை உள்ளடக்குதல் வேண்டும். இதன்விளைவாக இறுதியில், மனித சக்திப் பற்றாக்குறை, முறையே தமது இராணுவங்களுக்குப் பலவந்த ஆட்சேர்ப்பில் ஈடுபடுவதற்குச் சற்றுமுன்பான நிலைமை என்பவை 2002இல் இலங்கை அரசாங்கத்தையும், எல்ரீரீ அமைப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்குத் தள்ளிய காரணிகளுள் ஒன்று என்பதை மனதில் இருத்துதல்வேண்டும். இது இலங்கையில் இராணுவவாதம் வெல்லமுடியாத ஒரு சக்தியல்லவென்னும் நிகழ்வுண்மையைச் சுட்டிக்காட்டுகின்றது. உலகமயமாக்கலென்பது ஒரு குறிச்சொல் மற்றும் கவனச்சொல் என்றவகையில் (போர்டோ 2001, 74-5) அதன் கருத்திட்டம், வெற்றிகள், தோல்விகள் மற்றும் எதிர்காலங்கள் சம்பந்தமான முக்கிய வழிகாட்டல் குறிப்புகளைக் கொண்டுள்ளது.

**அடிக்குறிப்புக்கள்:**

[1] ட்ரயல் அட் பார் வழக்கொன்றில் 41 பேருக்குக் குற்றப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. பின்னர் 23 பேர் விடுவிக்கப்பட்டனர். 2003 ஜூனில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஐந்து பேர் படுகொலையில் சம்பந்தமுற்றமைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டனர். ஆயினும், அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

[2] இது விளம்பரப்படுத்தல் கைத்தொழிலினுள் பரவலாக உள்ள எண்ணப்பாடாகும். அங்கீகாரம் பெற்ற விளம்பரப்படுத்தல் முகவர் நிலையங்களின் அமைப்பு (4Aக்கள்) பின்வருமாறு கூறியது, "நாம் ஒரு நீதியான சமூகத்தை அபிவிருத்தி செய்யும்வகையில் உற்பத்தியாளர்களையும், நுகர்வாளர்களையும் ஒன்று சேர்க்கும்வகையில் உண்மையான, நேர்மையான, மரியாதையான மற்றும் நம்பத்தகுந்த தகவல்களை உருவாக்கி, வழங்கவேண்டியது எமது பொறுப்பும், கடமையுமாகுமென்பதை ஏற்றுக்கொள்ளுகின்றோம்." பிரையன் திசேரா, 'ஏமாற்று மூலம் சந்தைப் படுத்துதல் - 4Aக்கள் சுய-பிரமாணப்படுத்தல் திருத்த நடவடிக்கையை முன்முயற்சியாக ஆரம்பிக்கின்றன.' *தி ஐலண்ட்*, 2003 அக்டோபர் 6 ஆந் திகதி.

[3] 1973 அதிகாலைப் பாடல், "பழைய ஓக் மரத்தில் ஒரு மஞ்சள் ரிப்பனைக கட்டு" என்பதில் அமரத்துவம் பெற்றது. 1979-80இல் 52 அமெரிக்கர்கள் ஈரானில் கைதிகளாக்கப்பட்ட ஈரான் பணயக் கைதிகள் பிரச்சினையில் அமெரிக்காவில் மஞ்சள் ரிப்பன்கள் முதலில் பயன்படுத்தப்பட்டன. அன்றிலிருந்து, அமெரிக்க இராணுவத் துருப்புகளின் வெளிநாட்டுச்

செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு மஞ்சள் ரிப்பன்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டன.

4 *வீரகேசரி*, 2002 ஜனவரி 01.

5 *டெய்லி நியூஸ்*, 2002 ஜனவரி 04.

6 *மக்கள் விடுதலை முன்னணியின்* (JVP) முதலாவது அரசு விரோதக் கிளர்ச்சி 1971 ஏப்ரில் 5ஆந் திகதி ஆரம்பித்தது. அது அந்த வருடம் ஜூன் மாதம் அரசாங்கத்தினால் ஒடுக்கப்பட்டது. JVP தன்னை மீளமைத்துக்கொண்டு 1987-89இல் மேலும் கொடூரமான இரண்டாவது அரசு விரோதக் கிளர்ச்சியில் ஈடுபட்டது. JVPயின் தாக்குதல்களின் கொடூரம் மற்றும் அரசின் பயங்கரவாத எதிர்ப்புத் தாக்குதல்களின் கொடூரம் காரணமாக இக்காலப்பகுதி பயங்கரத்தின் ஆட்சியென்று அழைக்கப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் 'காணாமற்போயினர்.'

7 இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைக் கட்டளைத் தளபதிகளின் அவதானிப்பு அறிக்கை. *த சன்டே ரைம்ஸ்*, 2003 ஜூலை 06. பக். 11

8 இந்தவேளையில் சலுகைபெற்ற சிங்கள அரசியல்வாதிகளும், பின்னர் சுதந்திர இலங்கையின் முதல் பிரதமராகப் பதவி வகித்த டி.எஸ்.சேனாநாயக்கவும், பிரித்தானியாவின் யுத்த முயற்சிக்கு ஆதரவு வழங்கினர். பல இந்தியர்கள் ஒத்துழைக்க மறுத்ததால் பிரித்தானிய குடியேற்றவாத அரசாங்கத்தால் சிறையிலடைக்கப்பட்டனர்.

9 1956இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவினால் முன்மொழியப்பட்ட 'சிங்களம் மட்டும்' சட்டமூலம் சிங்கள-தமிழ் பகைமை நிறுவனமயப்படுத்தலின் ஆரம்பமென்று பரவலாக எண்ணப்பட்டது. இது இன்றைய பிரிவினைவாத யுத்தத்துக்கு வழிவகுத்தது. இச்சட்டமூலத்தில், வடக்கு-கிழக்கில் நிர்வாக நோக்கங்களைத் தவிர அனைத்துக்கும் சிங்களமொழியே அரசகரும மொழியாகியது. இது தமிழ்பேசும் மக்களை ஓரங்கட்டியது. அவர்களுக்கு அரசாங்க வேலைகள், அரச பாடசாலைகள் பிரவேசம் மற்றும் பல்கலைக்கழகக் கல்வி என்பவற்றை இல்லாமற்செய்தது.

10 ரொனி அங்கி, தனிப்பட்ட தொடர்பாடல். அவ்வேளையில் இராணுவத்தில் கேணல் பதவி வகித்த அங்கி, இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றினார்.

11 மின்சாரசபை வேலைநிறுத்தம் முழுத் தேசத்தையும் இருளில் மூழ்கடித்தது. மின்சார உப-நிலையங்களைச் செயற்படுத்துமாறு இராணுவத்துக்கு அழைப்புவிடுக்கப்பட்டது. இராணுவம் சிறிது காலத்துக்கு வரைவுள்ள மின்சார வழங்கலை மேற்கொண்டது. *(இலங்கை இராணுவம்*, 1999, 535).

12 1977இல் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியோடு, தேயிலைத் தோட்டங்களிலும், யாழ்ப்பாணத்திலும் இனத்துவரீதியான தேர்தலுக்குப் பின்னரான வன்செயல்கள் இடம்பெற்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் அழைக்கப்பட்டது. *(இலங்கை இராணுவம்* 1999, 255)

13 1965இல் கிராமப்புறங்களிலிருந்து பிரதானமாக சிங்கள பௌத்தர்களான 66 உத்தியோகத்தர்கள் இராணுவத்துக்கு ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டபோது கூடுதலாகப் பரங்கியர்களும், தமிழர்களும் இராணுவ உத்தியோகத்தர்களாக விளங்கும் பாரம்பரியம் முடிவுக்கு வந்தது.

14 1955 ஏப்ரிலில் இடம்பெற்ற பான்டுங் மாநாட்டில் இலங்கை முக்கிய பாத்திரத்தை வகித்தது. 1976இல் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் கொழும்பில் கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மாநாடு இடம்பெற்றவேளையில் அதன் கூட்டுச்சேராக் கொள்கை உச்சநிலையை அடைந்தது.

15 உத்தேச உயர் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் சட்டம் குறித்த இராணுவ, கடற்படை மற்றும் விமானப்படைக் கட்டளைத் தளபதிகளின் அவதானிப்பு அறிக்கை. *சன்டே ரைம்ஸ்*, 2003 ஜூலை 06. பக். 11.

16 அதிரடிப்படையினர் 1978இல் ஒரு படைப்பிரிவாக அமைக்கப்பட்டனர். ஆரம்பத்தில், ஓர் அதிரடிப்படை அலகு என்னும் எண்ணம் ஏற்பட்டது விமானக்கடத்தல்களைத் தடுப்பதற்காகும். கிரமமான காலாட்படை பட்டாலியன்கள் ஒவ்வொன்றையும் சேர்ந்த ஒரு பிளட்டூன் அதிரடிப் படையினருக்கான பயிற்சிக்கெனத் தெரிவுசெய்யப்பட்டது. ஆயினும் இது பொருத்தமான உயர் படை உணர்வை முன்னேற்றாததால் கிரமமான, அர்ப்பணிப்புணர்வு கொண்ட அதிரடிப்படைப் பிரிவை அமைக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

17 நிரியெல்லவின் சமீபத்திய பணி நாடக அரங்கினூடாகப் பல்வேறு சமூகங்களிடையே இனத்துவ சௌஜன்யத்தை முன்னேற்றுவதை நோக்கமாகக்கொண்ட *ஜனகரலிய* கருத்திட்டத்துடனானதாகும். ஆகவே இது அவர் ரூபவாஹினியுடன் பணியாற்றிய காலத்தில் தயாரித்த விவரணத் தொலைக்காட்சி நாடகங்களைவிடக் குணாம்சத்தில் தீவிரமான வேறுபாடு கொண்டதாகும்.

18 பராக்கிரம நிரியெல்ல, நிலூபர் டி மெல்லுடன் நேர்முகம், கொழும்பு, 2002 செப். 10.

19 அதிரடிப்படை அலகில் பெண்கள் எழுதுவினைஞர் பதவிகளில் உள்ளனர். சண்டைப் பயிற்சிகளில் ஈடுபடும் அதிரடிப்படையினர் அனைவருமே ஆண்களாவர்.

20 ரூபவாஹினியில் சிங்களச் செய்தி ஒளிபரப்பு இரவு 8.00 மணிக்கு இடம்பெறுகின்றது. பல நகர்ப்புறக் குடும்பங்கள் இரவு உணவு உட்கொள்வது செய்தி ஒளிபரப்பு இடம்பெறும்போது அல்லது உடனடியாக அதற்குப் பின்னராகும்.

21 பயிற்சிமுடிந்து வெளியேறும் வைபவங்களில் தாய்மார் புதல்வர்களுக்கு இராணுவ இலச்சினைகளை அணிந்துவிடுவது ஒரு நியம நடைமுறையாகியுள்ளது. 2003இல் குடா ஓயா அதிரடிப்படைப் பயிற்சிப்

பாடசாலையிலிருந்து 24 உத்தியோகத்தர்களும், 150 படைவீரர்களும் பயிற்சி முடிந்து வெளியேறியபோது இத்தகைய ஒரு தாயினதும், புதல்வனதும் புகைப்படம் "பெருமைமிக்க புதல்வன், பெருமைமிக்க தாய்" என்னும் குறிப்புடன் பிரசுரமாகியது. *டெய்லி நியூஸ்*, 2003 செப்டம்பர் 17, பக். 7

22 பராக்கிரம நிரியெல்ல, நிலூபர் டி மெல்லுடன் நேர்முகம்

23 அதிரடிப்படை அலகுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவோர் இலங்கையில் தென்பகுதியில் அமைந்துள்ள குடா ஓயாவில் மிகவும் கடினமான சூழ்நிலைகளில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இப்பயிற்சி வெளியுலகத் தொடர்பு எதுவுமற்றநிலையில் ஒரு மாதகாலம் நீடிக்கின்றது. அழுத்தம் நிறைந்த சூழ்நிலைகளில் துல்லியமான, விரைவான தீர்மானங்களை எடுப்பதற்குப் பயிலுனர்களுக்கு உதவுவதே பயிற்சியின் நோக்கமர்கும். ரஷோமி சில்வா, "சாத்தியமற்றது ஒன்றுமில்லை" *டெய்லி நியூஸ்*, 2003 ஜனவரி 23, பக். 5

24 பராக்கிரம நிரியெல்ல, தனிப்பட்ட தொடர்பாடல், கொழும்பு, 2002 ஏப்ரில்.

25 இக்பால் அத்தாஸ், சூழ்நிலை அறிக்கை, *சன்டே ரைம்ஸ்*, 2002 ஜுலை 14, பக். 11

26 ரணில் விஜேபால, "இராணுவத்திலிருந்து விலகியோடுவோருக்கான விடுகைச் சான்றிதழ்கள்" *டெய்லி நியூஸ்*, 2003 மார்ச் 5, பக். 1

27 'ரிஸ்சந்திர குணரத்ன, "விலகியோடியோருள் சுமார் 1500 பேர் இலங்கை இராணுவத்தின் பொதுமன்னிப்புத் திட்டத்தில் இணைவு" *தி ஐலன்ட்*, 2004 டிசம்பர் 7, பக். 3

28 V.S. சம்பந்தன், *த ஹிந்து*, 2000 ஏப்ரில் 27. எல்ரீரீஈ ஐந்து ஆட்டிலறி பீரங்கிகளைக் கைப்பற்றியது. ஏனைய உபகரணங்களோடு மூன்று 152 மி.மீ. பீரங்கிகளும், இரண்டு 122 மி.மீ. பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டன.

29 லியோ பேர்னட் சொலூஷன்ஸ் கம்பனியைச் சேர்ந்த ரணில் டி சில்வா மற்றும் மைக்கல் ஹோல்சிங்கர். 2000 அக்டோபரில் இராணுவ ஆட்சேர்ப்பு விளம்பரமொன்றை வடிவமைக்குமாறு இக்கம்பனியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோது இவ்விருவரும் இது இராணுவத்தின் கதையென்று தெரிவித்தனர். நிலூபர் டி மெல்லுடன் நேர்முகங்கள், கொழும்பு 2002 ஜுலை 24 மற்றும் 25.

30 மேலுமொரு விளம்பரக் கம்பனியாகிய பீனிக்ஸ் ஒகில்வி அன்ட் மாதர் (தனியார்) ஒகில்வி அவுட்ரீச் பிரிவினூடாக 1999இல் இராணுவக் கணக்குகளைக் கையாண்டது. 2000 அக்டோபரில் லியோ பேர்னட்டை அணுகியோர் ANCL பணிப்பாளர் லூஷியன் ராஜகருணாநாயக்கவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையுமாவர். ரணில் டி சில்வா, நிலூபர் டி மெல்லுடன் நேர்முகம், 2002 ஜுலை 24.

31 *புரொன்ட்லைன்*, 2002 ஜுலை 5. பராக்கிரம நிரியெல்லவின் விவரணத் தொலைக்காட்சி நாடகம் இதேபோன்ற ஓர் ஐக்கியத்தை வலியுறுத்தியது.

கொண்டாட்டத்தில் (முகாம் தீயைச் சுற்றி) அல்லது பீதியுணர்வில் (அதிரடிப்படை இறுதிப் பயிற்சி நடவடிக்கைக்கு முன்னர் அவர்களின் களத்தளத்தில்).

32 ஹொலிவூட் வகையுதாரண யதார்த்தத் திரைப்படங்கள்குறித்த லோரா மல்வேயின் பகுப்பாய்வு, அவற்றின் கட்டமைப்பு ஒரு துடிப்பான ஆண் செயலின்மையைக் காட்டும் ஒரு பெண் மீது பார்வையை வீசுவதை அடிப்படையாகக் கொண்டதாகுமென்று தெரிவித்தது. பெண் பார்வையாளரின் மகிழ்சிக்கான ஒரேயொரு சாத்தியக்கூறு அவர்கள் கதாநாயகர்களின் செயற்பாடு, கதை மற்றும் அடையாளத்தை அனுபவித்து மகிழும்வகையில் ஆண்மையாக்கத்தை ஏற்றுக்கொள்ள உதவும் கண்ணாடி வில்லைகளுடாக அதைப் பார்ப்பதாகும்.

33 ஒயிஷி திரைப்படத் தயாரிப்பைவிட அதை ஏற்று அனுபவிப்பதில் கவனம் செலுத்தும் ஒரு பகுப்பாய்வுக் கருவியாக 'நெறிபிறழ்வான இரசனைப் பார்வை' என்பது குறித்துப் பேசுகின்றார். இது எதிர்பார்த்ததைச் செய்வதில்லை. இது எதிர்பார்ப்புகளை மீளொழுங்குபடுத்துகின்றது. வழமைக்கு மாறான தத்துவவாதிகள் விடயத்தில், புரோய்ட் குழந்தைப் பருவப் பாலியல் உந்தல்களின் முறையற்ற அபிவிருத்தி அல்லது திசைமார்க்கத்தைக் குறிப்பதற்கு 'நெறிபிறழ்ந்த' என்னும் பதத்தைப் பயன்படுத்துவது முக்கியமானதாகும் (ஒயிஷி 2006, 650-1).

34 ரணில் டி சில்வா, நிலூபர் டி மெல்லுடன் நேர்முகம், 2002 ஜுலை 24.

35 சிங்கள ஜாதி சிங்கத்திலிருந்து தோன்றியதென்னும் மரபுக்கதை உள்ளது. சிங்கத்தைக் குறிக்கும் சிங்களச் சொல் 'சிங்ஹ' என்பதாகும். அதன் நடுநாயகமான வழிபாட்டுச் சின்னம் காரணமாக சிங்கக்கொடியென்று அழைக்கப்படும் இலங்கையின் தேசியக்கொடி சிங்கள இனத்தின் ஆதிக்கத்துக்குச் சட்டநிலைத்தகவு வழங்குகின்றது. 1956 அக்டோபர் 1ஆந் திகதி நிறுவப்பட்ட இலங்கை இராணுவத்தின் சிங்ஹ ரெஜிமென்ட் ஒரு சிங்கத்தை அதன் நல்லதிருஷ்டத் தாயத்தாகக் கொண்டுள்ளது. 10 கிரமமான அலகுகளும், 5 தொண்டர் அலகுகளும் இதில் அடங்குகின்றன. இதுவே மிகப்பெரிய இராணுவ ரெஜிமென்ட் ஆகும்.

36 உதாரணமாக, 1996இல் பாடசாலை மாணவியாகிய கிரிஷாந்தி குமாரசாமி யாழ்ப்பாணத்துக்கருகில் இலங்கை இராணுவச் சோதனைச் சாவடியொன்றில் வைத்துக் கடத்தப்பட்டு, கும்பல் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார். அவளைத் தேடிச்சென்ற தாய், சகோதரன், அயலவர் என்போரும் கொலைசெய்யப்பட்டனர். 1997 மே மாதம் கோணேஸ்வரி முருகேசுப்பிள்ளை என்னும் தமிழ்ப் பெண் கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை பொலிஸ் நிலையமொன்றில் கும்பல் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். சான்றுகளை அழித்து விடுவதற்காக அவளது யோனியில் கைக்குண்டொன்று வைத்து வெடிக்கச்

செய்யப்பட்டது. 2001 ஜூனில் கொழும்பில் ஒரு சோதனைச்சாவடியில் எல்ரீரீஈ போராளி என்ற சந்தேகத்தில் மலையகப் பெண்ணொருத்தி கைதுசெய்யப்பட்டு, மூன்று பொலிஸ்காரர்களால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டாள். 2005 ஜூனில் வெலிக்கந்தையில் முதலாவது மைல் கல்லில் கற்குழியொன்றில் வேலைபார்த்த 35 வயதுக்கும், 42 வயதுக்குமிடையிலான மூன்று பெண்கள் வெலிக்கந்தை இராணுவ வீரர்களால் மீண்டும் மீண்டும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர். கற்குழியிலிருந்த மூன்று ஆண்களின் கைகளைப் பின்புறமாகச் சேர்த்துக் கட்டியிருந்தனர். 2006 ஜூனில் மன்னாரைச் சேர்ந்த 27 வயதான மேரி மதலீன் பாலியல் வல்லுறவுக்குப் பின்னர் மார்பில் கத்தியால் குத்தப்பட்டார். அவளின் 9 வயது மகள் லக்ஸிக்கா யோனியில் கத்தியால் குத்தப்பட்டாள். இவர்கள் இருவரும் கொல்லப்பட்டனர். மேரி மதலீனின் கணவனும், மகனும் கொல்லப்பட்டனர். இக்கொலைகள் இடம்பெற்றவேளையில் அந்த இடத்தில் மூன்று இராணுவ ஆளணியினர் நின்றதை அயலவர்கள் கண்டுள்ளனர். இத்தகைய சம்பவங்கள் குறித்த விசாரணைகள், கைதுகள் மற்றும் வழக்குத் தொடரல்கள் மிகவும் அற்பமேயென்றும், இது இலங்கை அரசின் நீதிசார் செயல்முறையில் நம்பிக்கையைச் சீரழித்துள்ளதென்றும் தம்பையா தெரிவிக்கின்றார். சர்வதேச மற்றும் பெண்ணிலைவாதிகளின் அழுத்தம் காரணமாக கிரிஷாந்தி குமாரசாமி வழக்கு விசாரணை இடம்பெற்றபோதிலும், வழக்கு நடத்தப்பட்ட முறையில் சட்டத்தின் உரிய செயல்முறைகுறித்த பல மீறல்கள் இடம்பெற்றன (மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் 1999 ஏப்ரில் 28இன் 12ஆம் இலக்க விசேட அறிக்கையையும் பார்க்கவும். இது இந்த வழக்கினதும், இலங்கை இராணுவம் எல்ரீரீஈ போராளிகளென்ற சந்தேகத்தில் மேலும் பல தமிழ்ப் பெண்களையும், ஆண்களையும் சித்திரவதை செய்த சம்பவங்களினதும் விபரங்களை வழங்குகின்றது.)

37 மைக்கல் ஹொல்சிங்கர், நிலூபர் டி மெல்லுடன் நேர்முகம், 2002 ஜூலை 25.

38 ஆடையில் சிறு குறைபாடு காரணமாக ஏற்றுமதி செய்யப்படமுடியாத நிலையில், அசல் வடிவமைப்பாளர் ஆடைகள் உள்ளூர்ச் சந்தையில் குறைந்த விலைகளில் கிடைக்கின்றன.

39 பட்டர்பிளை கார்டன் அமைப்பு மட்டக்களப்பில் ஜெசூட் இறைபணி அமைப்புடன் நெருங்கிய தொடர்புள்ளதாகும்.

40 இது மகாத்மா காந்தி எழுப்பிய ஒரு வினாவாகும்.

41 எயினுல் லால் தயாரித்த வீடியோ விவரணம். இதன் தலைப்பு *Hum Ek Hai* (நாம் ஒன்றாகவுள்ளோம்) என்பதாகும். இது மிக்வும் ஜனரஞ்சகமான துடிப்பான செயற்பாட்டாளர் பாடலின் கோரஸ் இசையைக் கொண்டதாகும். இந்த நடைபவனியில் பல பெண்கள் அமைப்புக்களும், பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர்.

[42] கட்புலக் கலைப்படைப்புகளில் சோதனைச்சாவடித் தகரப் பீப்பாய்கள் தீவிரமாகக் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளன. சந்திரகுப்த தேனுவர மிகவும் வலுவான போரெதிர்ப்புக் கருப்பொருளில் ஒரு தொடரான பீப்பாய்களைத் தீட்டியுள்ள கலைஞராவார். 'barrelism' என்று இவர் அழைக்கும் இக்கலைப்படைப்புகள் இலங்கைச் சமூகத்தின் அடிப்படை பௌத்தமும், மனிதாபிமானவாதமும் எனக்கோரும் சமாதானக் குறிக்கோள்களுக்குச் சவால்விடுக்கும் விந்தைகளாகும்.

[43] 2003இல் இராணுவ உத்தியோகத்தர்களுக்கான மனிதாபிமானச் சட்டம்குறித்த கல்விநெறிக்குப் பிரித்தானிய அரசாங்கமும், ICRC அமைப்பும் அனுசரணை வழங்கின. *டெய்லி மிரர்*, 2003 மார்ச் 6, பக். 1

[44] நீலா மரிக்கார், முகாமைத்துவப் பணிப்பாளர், கிரான்ட் மக்கான் எரிக்சன், தனிப்பட்ட தொடர்பாடல், கொழும்பு, 2002 மே.

[45] 1995 – 2001 காலப்பகுதி முழுவதும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் சுலோகமாக அமைந்தது "சமாதானத்துக்கான யுத்தம்" என்பதாகும்.

[46] *டெய்லி நியூஸ்*, விளம்பர இணைப்பு, 2000 ஜூன் 7. பக். 2 பலாப்பழம் *(<u>Artocarpus</u> heterophyllus)*, இலங்கையில் ஜனரஞ்சகமான உணவாகும்.

[47] அப்பாஸ் எகூப்அலி, சூரியன் FM ஒலிபரப்பு, 2002 மார்ச் 15.

[48] *தி ஐலன்ட்*, 2003 ஜனவரி 17, பக்.16.

[49] *டெய்லி நியூஸ்*, 2003 பெப். 28, பக்.23.

[50] *டெய்லி நியூஸ்*, 2002 மே 6.

[51] *த சன்டே லீடர்*, 2002 ஜூன் 16, பக்.7.

[52] *டெய்லி நியூஸ்*, 2002 ஜூலை 8.

[53] *டெய்லி நியூஸ்*, 2003 ஜனவரி 17, பக்.11.

[54] 2006 மே 8ஆந் திகதி மார்தா ஸ்டுவார்டின் வாழ்க்கைப்பாணி நிகழ்ச்சித்திட்டம் இதற்குச் சமாந்தரமான ஒரு விடயத்தை ஒளிபரப்பியது. ஸ்டுவார்ட் அதிமதுரத்தை எவ்வாறு ஒரு கட்டாகக் கட்டுவதென்பதையும், வெளியே அதிமதுரத் துண்டொன்று நீட்டிக்கொண்டிருப்பது இந்த இனிப்புப் பொருளை எவ்வாறு டைனமைட் குச்சிபோன்று தோற்றமளிக்க வைக்கின்றது என்பதையும் செய்து காட்டினார். பின்னர் அவர் 'டைனமைட்' இனிப்பைப் பல சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் வீசியெறிந்து "பிடியுங்கள்! அவை வெடிக்கக்கூடும்!" என்று சொன்னார்.

[55] *டெய்லி நியூஸ்*, 2002 செப். 7, பக்.34.

[56] *டெய்லி நியூஸ்*, 2002 ஆகஸ்ட் 17, பக்.38.

[57] சந்தியா சல்காடோ, *த பினான்ஷியல் ரைம்ஸ்*, கொழும்பு, 2005 ஜூலை 26, பக்.6.

[58] டெய்லி மிரர், பினான்ஷியல் ரைம்ஸ், கொழும்பு, 2004 நவம்பர் 17, பக்.4

[59] சந்தியா சல்காடோ, நேர்முகம், கொழும்பு, 2002 ஆகஸ்ட் 15

[60] சந்தியா சல்காடோ, த பினான்ஷியல் ரைம்ஸ், கொழும்பு, 2005 ஜூலை 26, பக்.6.

[61] பிரிகேடியர் சனத் கருணாரத்ன, நிலூபர் டி மெல்லுடன் நேர்முகம், இலங்கை இராணுவத் தலைமையகம், கொழும்பு, 2003 செப்டம்பர் 15.

[62] புதிதாகச் சேருபவர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம் மாதம் ரூ. 4280/- ஆகும். (அண்ணளவாக 42 US $), ரூ.130/- வருடாந்த அதிகரிப்பு, சீருடை, உணவுப்படி முறையே ரூ.255/- மற்றும் ரூ. 126/- ஆகும். யுத்தமுனையின் செயற்பாட்டுப் பிரதேசங்களில் கடமையாற்றினால், படைவீரர் ஒருவருக்கு மேலதிகமாக மாதம் ரூ. 2500/- (அல்லது 25 US $) வழங்கப்படும். யாழ்ப்பாணத்தில் பணியாற்றினால் மேலதிகமாக நாளொன்றுக்கு ரூ. 100/- வழங்கப்படும். புதிதாகச் சேர்ந்தவர் போரில் இறந்தால் அவர் லான்ஸ் கோப்பரலாகப் பதவியுயர்வு வழங்கப்பட்டு, அவரது 55வது பிறந்த தினம்வரை இந்த மட்டத்திலான அவரின் சம்பளம் அவரில் தங்கி வாழ்வோருக்கு வழங்கப்படும். 55 வயதின் பின்னர் அவர்கள் அவருக்குரிய ஓய்வூதியத்தைப் பெறுவர். போரில் இறக்கும் திருமணமாகிய மற்றும் திருமணமாகாத படைவீரர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடாக ரூபா 75,000/- மற்றும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து ரூ. 1000,000/- என்பவை வழங்கப்படும். பல படைவீரர்கள் தாம் உயிரோடிருக்கும் காலத்தைவிட, இறந்துவிட்ட காலத்தில் அதிக பெறுமதிவாய்ந்தவர்களென்று தெரிவித்துள்ளனர். இறந்த பின்னராவது தமது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாம் உயிரோடிருக்கும்போது வழங்கமுடியாத நிதியியல் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வரென்றும் தெரிவித்தனர்.

[63] இக்பால் அத்தாஸ், சூழ்நிலை அறிக்கை, த சன்டே ரைம்ஸ், 2002 ஜூலை 14, பக்.11.

*Srikanthaluxumy. A*
*11/21, Inuvil West*
*Chunnakam*

UNIE ARTS (PVT) LTD., COLOMBO - 13. TEL: 2330195